ATHMANADAN

OR

KANTHIMATHI'S LOVE

An Autobiographical Fiction

IN TAMIL

BY

NAGAI-C. GOPALAKRISHNAN

PUBLISHERS:

"SARADA VILAS" BOOK DEPOT,

NEGAPATAM.

 1915 *Price As 8*

ஓம்

ஆத்மநாதன்

அல்லது

காந்திமதியின் காதல்

நாகை-வி. கோபாலகிருஷ்ணபிள்ளை

பிரசுரகர்த்தர் :
" சாரதாவிலாஸ " புத்தகசாலையார்,
நாகபட்டணம்.

காபிரைட் ரிஜிஸ்டர்டு] 1915 [விலை அணு 8.

PRINTED BY
P. R. RAMA IYAR AND CO.,
MADRAS
1915

To
My Readers

இந்நாவலாசிரியர்
இயற்றிய ஏனைய நாவல்கள்.

	ரூ.	அ.
அமரஸிம்ஹன்	1	0
சந்திரோதயம்	1	0
கண்ணகி	0	12
தனபாலன் I	0	12
தனபாலன் II	0	12
சித்திரரேகை	0	12
பத்மரேகை	0	12
கமலரேகை *	0	12
ஜீமுதகேது *	0	12
காதற்களஞ்சியம் *	0	12
வளையாபதி *	0	6
குண்டலகேசி	0	6
மலையமான்	0	3
இன்பவல்லி	0	3

* இக்குறியுடையவை அச்சிலிருக்கின்றன.

ஓம் :

ஆசிரியன் முன்மொழி

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.—திருக்குறள்.

"காந்திமதியின் காதல்." என்னும் பெயரமைத்து ஒரு நாவல் எழுதவேண்டுமென யாம் ஒரு சிறிதும் நினைத்தேமல்லேம்,—விரும்பினேமல்லேம். அங்ஙனமிருந்தும் அப்பெயர் கொண்டே இப்போது இந்நாவல் வெளிவந்துளது. ஆனாலும் "இந்த நிலவுலகத்திலே மனிதர்கட்குத் தெரியாமலும், அவர்கள் விரும்பாமலும், நிகழ்கின்ற எண்ணிறந்த சம்பவங்களுள் ஒரு சிறு சம்பவம், எவ்விதமாகவோ அவர்களுடைய நோக்கத்தையும் கொள்கையையும், அவர்கள் எதிர் பாராதவிதமாய்த் திடீரென்று,—நன்மைக்கோ அல்லது தீமைக்கோ,—அறவே மாற்றி, அவர்களை வேறு வழியில் இழுத்துச் செல்வதற்குப் போதிய ஆற்றல் வாய்ந்ததாக இருக்கின்றது" என்னும் அநுபவ உண்மையை உணரவல்லார்க்குக் 'காந்திமதியின் காதல்' என்னும் அப்பெயரமைத்தே இந்நாவலை யாம் எழுதியது, வியப்பாகவேனும் அல்லது குற்றமாகவேனும் ஒருசிறிதும் தோன்றாதெனை யாம் நம்புகின்றும். எம்மால் முதன்முதல் வரையப்பெற்ற 'தனபாலன்' அல்லது 'ஒருகோடீசுரனின் ஆச்சரிய அனுபவம்' என்னும் நாவலில் கதாநாயகனாகிய 'தனபா

லன்' என்பவன் 'காந்திமதியின் காதல்' என்னும் ஓர் அரிய நாவல் இயற்றியதாகக் கூறப்பட்டிருக்கின்றது. அந்நாவலின் கதைப்போக்கை அனுசரித்துப் புனைந்துரைவகையால் அங்ஙனம் கூறப்பட்டிருப்பதை, எம்முடைய நாவல்களைப் பேராவலுடனும் ஆர்வத்துடனும் படித்து மகிழும் தமிழபிமானிகள் பலர், 'ஆகாயத் தாமரை' என்று கருதாமல் 'தடாகத்தாமரை' என்று அன்பின் பெருக்காலோ அல்லது வேறெக்காரணத்தாலோ பிறழவுணர்ந்து, 'காந்திமதியின் காதல்' என்னும் நாவல் ஒன்று உண்மையிலேயே இருப்பதாக மனோபாவனை செய்துகொண்டு, 'அந்நாவல் வேண்டுமென' எம்மையும் எமது பிரசுரகர்த்தர்களையும், உள்ளூர்களிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும், நேரிலும் கடிதவாயிலாயும், பன்முறையும் கேட்கலானார்கள். இங்ஙனம் வந்துகுவிந்த கடிதங்கள் பல. இதனைக் கண்ட பிரசுரகர்த்தர்கள் அப்பெயரிட்டே ஒரு நாவல் எழுதும்படி எம்மைப் பன்முறையும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். அங்ஙனஞ் செய்தால், 'நூலாசிரியன் சூழ்ச்சி' என்று அச்செயலைப் பொதுஜனங்கள் எங்கே பிறழவுணர்ந்து விடுவார்களோ என்னும் அச்சத்தால், அவர்களுடைய வேண்டுகோட்கு இணங்காமல் யாம் நெடுநாள் காலந்தாழ்த்தி வருவேமாயினேம். ஆனால் பின்னர் அவர்களேயன்றி, எம்மை நேரிலறிந்த நண்பர்கள் சிலரும், எமக்கு ஒரு சிறிதும் அறிமுகமில்லாத பொதுஜனங்கள் பலரும் முறையே நேராயும் கடிதமூலமாயும் அப்பெயரமைத்தே ஒரு நாவல் இயற்றும்படி எம்மைப் பெரிதும் வற்புறுத்தினார்கள். ஆகவே, அன்பர்கள் பலருடைய வேண்டுகோளை மறுப்பது முறையன்றெனக் கருதிக் 'காந்தி

மதியின் காதல்' என்னும் பெயரமைத்து இந்நாவலை யாம் எழுதுவே மாயினேம்.

மனிதர்களிற் பெரும்பாலாருடைய மனம் ஆழ்ந்த கருத்துக்களடங்கிய இலக்கிய இலக்கணங்களையும், சமயசாஸ்திர தத்துவசாஸ்திரங்களையும், ஒழுக்கநூல்களையும் மதநூல்களையும் பயின்று நலம் பெருக்குவதில் அழுந்தாமல், இலகுவாயும், சுலபமாயும், படிக்கும் அக்கணத்தே மாத்திரம் ஒரு சிறிது இன்பம் பயந்து அதன்பிறகு அவர்களுடைய அறிவு நிலைமை ஒரு சிறிதும் உயர்த்தாமல் வறிதே அழிந்தொழியும் இயல்புடையவாயும் இருக்கின்ற வெறுங்கதைகள் வயப்பட்டு மிதக்கும் வரையிலும்—பலதிறப்பட்ட நூற்பரவையின் அடிவாரத்தில் ஆழ்ந்துகிடக்கும் ஆன்மதத்துவம், தேகதத்துவம், பாஷாதத்துவம், முதலாய ஆணிமுத்துக்களைத் துருவி எடுக்க முயலாமல், மேலே மிதக்கும் 'வெறும் கதைப்போக்கு' 'காமாந்தகாரமான சம்பாஷணைகள்' 'இலக்கணப்பிழைகளும் இயற்கை விரோதமும் இனிது நிரம்பிய வர்ணனை வாக்கியங்கள்' முதலிய துரும்புகளை அரித்தெடுப்பதில் பொதுஜனங்களுடைய முயற்சி சென்றுகொண்டிருக்கும் வரையிலும்,—நம்முடைய இந்துமதத்திற்குப் பாடுபடவேண்டிய மதாசாரியர்களும், தலைவர்களும், அதிபதிகளும் அத்தொழிலை அறவே ஒழித்துவிட்டுப் பெண்ணும் பொன்னுமே பிரதானம் என்று கருதி இறுமாந்து, தங்கள் வாழ்நாளை வீணே கழித்துவருவதின்பயனாக இந்து மதத்தைச்சேர்ந்த பலர் புறச் சமயங்களில் பிரவேசித்தும், நாஸ்திகமதக்கொள்கைகளைத் தழுவியும் தங்கட்குக் கேடுதேடிக்கொள்வதோடு எல்லாமதங்களினுந் தலைசிறந்த நம் மதத்திற்கும் இழுக்கந்தேடும்

கொடிய செயல் நம் நாட்டிலிருந்து கொண்டிருக்கிற வரையிலும், இத்தகைய நாவல்கள் பயன்படாமற் போகாவென்று யாம் கருதுகின்றேம்.

இந்நாவலின் இடையிடையே ஆன்மதத்துவம் மனோதத்துவங்களைப் பற்றியும், தேகதத்துவத்தைப் பற்றியும், பதிபசுபாச இலக்கணங்களைப்பற்றியும், அகப்பொருளிலக்கணத்தைப் பற்றியும் எழுதப்பட்டுள்ள பகுதிகள் இந்நாவலின் கதாசாரத்தைக் காட்டினும் அதிகமான கவனத்தை வாசகர்களிட மிருந்து பெறுதற்குரிய என்று யாம் நினைக்கின்றும்.

இந்நாவலின் ஒரு பகுதியைத் தமது 'வித்தியா பாநு'ப் பத்திரிகையில் அன்புடன் பிரசுரித்த எமது நண்பர் ஸ்ரீமாந். மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்கட்கும், இந்நாவலை அன்புடன் ஏற்றுப் பிரசுரிப்பதற்கு இணங்கிய நாகபட்டணம் 'சாரதாவிலாஸ' புத்தகசாலையின் சொந்தக்காரரும் எமது நண்பருமான ஸ்ரீமாந். R. M. வீரப்பிள்ளை அவர்கட்கும், இந்நாவலை அழகாயும் சுத்தமாயும் அச்சியற்றிக்கொடுத்த சென்னை P. R. இராமையர் அச்சுயந்திரசாலையாருக்கும், எம்முடைய நாவல்களை மிகுந்த ஆவலுடனும் ஆர்வத்துடனும் படித்துமகிழும் பொதுஜனங்களுக்கும் எமது மனமார்ந்த வந்தனமும் நன்றியறிதலும் பெரிதும் உரியன.

நாகபட்டணம்
25-1-15

நாகை—ஸி. கோபாலகிருஷ்ணன்.

உ

ஆத்மநாதன்.

அல்லது

காந்திமதியின் காதல்.

முதலாம் அதிகாரம்

காதல் என்பது யாது ?

சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில் வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே.—திருக்கோ
[வையார்

" இன்பமயமான இறைவன் இன்னுயிர்கட்கு இன்பமளித்தல் இனிது கருதி இயற்கை இயல்பினதாகிய இறைமைக் குணத்தால் இயற்றியுள்ள இயற்கைப் பேரற்புதப் படைப்பினுள், சரீர அமைப்பினும் மனோவமைதியினும் தம்முட் பெரிதும் மாறுபாடுடைய இரண்டு வகையான உடல்களை உயிர்கள் உலாவுவதற்காக உண்டாக்கி, அவற்றுள் ஒருபகுதிக்கு " ஆண் " என்றும், மற்றொரு பகுதிக்குப் " பெண் " என்றும் பெயர் அமைத்து, இவ்விருவகைப்பட்ட சரீ

ரங்களில் வசிக்கும் இரண்டு ஆன்மாக்களை இவ்வேறு பாடு கொண்டே ஒன்றுபடுத்தி, அவைகளைப் பேரின்பப் பெருநிலையில் நிலைபெறச் செய்யும் பெருஞ்செயலானது, பெரிதும் போற்றத் தகுந்ததொன்றும். இவ்வுலகத்தில் மனிதன் கடந்து செல்ல வேண்டிய "வாழ்க்கை" என்னும் பெரிய சமுத்திரம், "பெண்" என்னும் மரக்கலத்தின் உதவி கொண்டே கடக்கப்படுதல் வேண்டும். மனிதனுகிய மீகாமன்,—பிறப்பிறப்பாகிய பேரலைகளையும், பசி பிணி மூப்பாதிய மேடு பள்ளங்களையும், கோபம், குரோதம் பொறாமை, காமமாதிய கொடிய நீர்வாழ்ப் பிராணிகளையும், செல்வம், தரித்திரம், சுகம் துக்கம், இன்பம், துன்பமாதிய மணல் மேடுகளையும் தன்னகத்தே கொண்ட,— "வாழ்க்கை" என்னும் பெருஞ்சாகரத்தைக் கடந்து,— "பேரின்பமுத்திநிலை" யாகிய இன்பத்துறை சேர்வதற்கு, அவனோடு ஒருங்கிருந்து இல்லறம் இயற்றுவதற்கேற்ற இல்லத் துணைவியாகிய "மனைவி" மரக்கலமாகவும், அவளுடைய இயற்கை யழகு வாய்ந்த சரீரம் துறை முகம் அறிவிக்கும் கலங்கரை விளக்கமாகவும், அவளுடைய சரசமதுரமொழி,—மாலுமியின் விருப்பத்திற்கு ஏற்றாற் போல் மரக்கலத்தை திருப்புதற்குதவும்,—சுக்கானும்; அவளோடு ஒன்றுபட்டனுபவிக்கும் "சிற்றின்பம்" மரக்கலத்தையும் மீகாமனையும் ஒருங்கே பேரின்ப முத்தித் துறையில் சேர்ப்பிக்கும் "நங்கூர" மாகவுமிருந்து பயன் படுதேவினலன்றோ "மனைமாட்சியில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை—யெனைமாட்சித் தாயினுமில்" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் நற்குண நற்செய்கையுடைய மனைவியின் பெருமையை இங்ஙனம் விதந்

தெடுத்து ஓதுவாராயினர். மாலுமி துறைமுகம் சேர்வதற்குக் கப்பலின் உதவி அவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுதல் போலவும், கப்பல் துறைமுகம் சேர்வதற்கு அது மாலுமியினால் நடத்தப்படுவது அவசியமாதல் போலவும், பேரின்ப முத்தித் துறையை ஆண்மக்கள் அடைவதற்குப் பெண்மகளின் உதவியும், அதே துறையைப் பெண்மக்கள் அடைவதற்கு அவர்கள் ஆண்மக்களால் முறையுடன் நடத்தப்படவேண்டிய அவசியமும் இன்றியமையாதவையாகின்றன. மேலும், மாலுமியும் கப்பலும் சுகமாய்த் துறைமுகம் போய்ச்சேருங்கால் கப்பலிலுள்ள பிரயாணிகளும் சுகமாய்த் துறைமுகம் போய்ச் சேருதல் சாத்தியமாதல் போல, ஒரு காதலனும் காதலியும் ஒன்றுபட்ட மனத்தினர்களாயிருந்து இல்லறத்தினை இனிது நடத்துவதால், அவர்கள் தாங்கள் "முத்தித் துறை" போய்ச் சேருதலோடு பிற ஆன்மாக்களையும் அத்துறையிற் சேர்க்கும் ஆற்றலுடையவர்களாகிறார்கள். எங்ஙனமெனின்? எல்லாம்வல்ல முழுமுதற்கடவுள் அருள்மயமாயும் அன்புருவாயும் விளங்குகின்றாராதலின், அவரை அடைய விரும்பும் ஆன்மாக்கள் அன்பினாலேயே அடைதல் வேண்டும். அதாவது ஆன்மா சுத்த அன்பு மயதாய் விளங்குதல் வேண்டும். மனிதன் பிற ஜீவர்களிடம் அன்புபாராட்டி ஜீவகாருண்ணிய ஒழுக்கத்தோடு ஒழுகினால் மாத்திரந்தான், அவனுடைய ஆன்மா தன் இயற்கைக்குணமாகிய அன்புமயமாய்த்திகழும். ஆகவே, மனிதன் பிற ஜீவர்களிடம் அன்பு செலுத்தி, அதனால் தன் ஆன்மாவை அன்புருவாக்கி, அன்புருவாகிய இறைவனை அடையவேண்டியவனாகிறான். எல்லாச் சீவர்களையும் அன்புடன்

நோக்கி அவைகளிடம் அன்பு செலுத்துவதற்கு முன், ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவினிடம் பூரண அன்பு செலுத்த வேண்டுவது அவசியமாகிறது. இத்தகைய அன்புரிமை எல்லாவகையினும் ஒப்புமை பெற்ற ஒரு தலைமகனுக்குள்ளும் தலை மகளுக்குள்ளும் மிகுந்து தோன்றுவதால் இவர்களுடைய அன்பின் திறம் விசேடமுடையதாகிறது. ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த மனத்துடன் செலுத்திவரும் அன்பானது முதிர முதிர, மற்றவர்களிடத்திலும் அன்பு பாராட்டும் நிலைமை அவர்களுக்கு உண்டாகிறது. முதலில் வரையறைக்குட்பட்டிருந்த அன்புரிமை, நாளடைவில் விரிந்து வியாபகமுறுகின்றது. இறைவனுடைய சொரூபம் வியாபக அன்புருவாதலால், அத்தகைய அன்புருவத்தை ஆன்மா அடையும் போது அது இறைவனையே அடைந்ததாகிறது. ஆகவே இறைவனுடைய சேர்க்கையாகிய பேரின்பப் பெருஞ் சுகத்தை அடைவதற்கு, ஒரு காதலனும் காதலியும் பாராட்டும் அன்புரிமையும் அவர்களுடைய சேர்க்கையாகிய சிற்றின்பச் சிறு சுகமும் ஒரு சாதனமாய் இருத்தலால், ஆண் பெண்களுக்குள் ஏற்படும் அன்புரிமை மிகப் பரிசுத்த மானதாகவும் சிறந்ததாகவும் கருதப்படுகிறது. இந்த அன்புரிமையே "காதல்" என்று புகழ்ந்து பாராட்டப்படுகிறது. உண்மையான காதலனுக்குள்ளும் காதலிக்குள்ளும் எத்தகைய வேற்றுமையும் காணப்படமாட்டாது. அவர்கள் இரண்டு உடலில் வசிக்கும் ஒரே உயிர் போன்றவர்கள். உடம்பும் உயிரும் வேறுயினும் உடம்புக்கு உறுதுயர் உயிரால் உணரப்படும், உயிரின் இச்சைவழி உடல் இயக்கப்படும் ஒன்றுக்

கொன்று பேதந் தோன்றுவாறு உடம்பும் உயிரும் ஒன்றேயாய் நிற்றல் போல், உண்மைஅன்பு பாராட்டும் காதலனும் காதலியும் எல்லா விஷயங்களிலும் எக் காலத்தும் ஒரே மனத்துடன் விளங்குவார்கள். இவ் விதம் பாராட்டப்படும் அன்பே,—அதாவது ஒரு வனும் ஒருத்தியும் என்றும் ஒரே தன்மையாய் அன் பைத்தவிர வேறு காரணங்கருதி நேசியாது அன்பிற் காகவே அன்பு செலுத்தும் அன்பே,—பரிசுத்தமான உண்மைக் காதலாம்; அதுவே மனிதர்களுக்கு இவ்வுல கத்தில் வாய்க்கக் கூடிய இன்பத்துட்சிறந்த பேரின்ப மாம்." என்று சிவப்பிரகாசம் என்னை நோக்கி ஒரு நாள் கூறினர்.

அவர் கூறிய விஷயங்கள் என்னுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவைகளாயும், என்னுடைய அங்கீகாரத் தைப் பெறுதற்கு யோக்கியதை அற்றவைகளாயும் இருந்தன. ஏனெனில் "கடவுள் ஒருவர் உண்டு" என்னும் கொள்கையில் நம்பிக்கை எனக்குச் சிறிது மில்லை. "ஆன்மா என்பது ஒன்றுண்டு" என்பது என் னுடைய சித்தாந்தமன்று. "கொண்டதே கோலம் கண்டதே காட்சி" என்று வாதிக்கும் உலகாயதக் கொள்கையை நான் உடையவன். அதிகம் சொல்லுவா னேன்? "கடவுள் இல்லை; ஆன்மா இல்லை; முற்பிறவி பிற்பிறவி இல்லை; நல்வினை தீவினை இல்லை; மோட்ச நரகமில்லை; இவ்வுலகத்தில் வயிறார உண்டு, உடலார உடுத்து, மனமாரச் சுகிக்கவேண்டுவதே கடமை; பிர பஞ்சத்தைத் தவிர வேறு பிர்மம் இல்லை" என்னும் இத்தகைய கொள்கைகள் என் மனத்தில் வேரூன்றிப் பதிந்துவிட்டன. இத்தகைய கொள்கைகளையுடைய என்னை நோக்கிக் கடவுளைப் பற்றியும், ஆன்மாவைப்

பற்றியும், பேரின்பப் பெருஞ்சுகத்தைப் பற்றியும், அன்பைப் பற்றியும், காதலைப் பற்றியும் சிவப்பிரகாசம் வாசாமகோசரமாய்ப் பேசினால், அவருடைய உபதேசங்கள் என் செவியில் நுழையுமா? "செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கம்" போல் அவருடைய உபதேசமும், "நாய்வாலைக் குணக்கெடுக்க" முயன்றது போல் அவருடைய முயற்சியும் என்விஷயத்தில் பயன் பயவா தொழிந்தன.

செல்வப் பெருக்கும், நாகரிக விருத்தியும், கல்விச் சிறப்பும் இனிது வாய்ந்த திரிசிரபுரத்தில் நான் ஒரு வைத்தியனாக 1898-ம் வருஷத்தில் அமர்ந்தேன். நான் மிக இளம்பருவத்தினனாயினும் வைத்தியத் தொழிலில் எனக்குச் சொற்பமான அனுபவமும் அதிகமான கைராசியும் உண்டாதலால், தென் ஜில்லாக்களில் எனக்கு மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் உண்டென்பதை என்னுடைய விரோதிகளும் மறுக்கமுடியாது. ஸ்காத்லாந்து தேசத்திலுள்ள எடிம்பரோ நகரிலும், பிரான்ஸ்தேசத்தின் தலைநகராகிய பாரிஸ் பட்டணத்திலுமுள்ள பிரக்யாதிபெற்ற வைத்திய வித்தியாசாலைகளில் படித்துப்பரீட்சையில்தேறி உயர்தரப்பட்டங்களை நான்பெற்றிருந்தபடியால், ஆங்கில வைத்தியர்கள் கூட என்னைப் புகழ்ந்து பாராட்டுவார்கள். உண்மையைக் கூறுமிடத்து; வைத்தியதொழிலில் எனக்கு நல்ல ஞானமுண்டு; பிரக்யாதியுமுண்டு.

வைத்தியகலாசாலைகளில் என்னுடைய படிப்பு முடிந்தவுடன், சென்னை நகரில் ஒரு வைத்தியசாலை ஸ்தாபித்துத் தொழில் புரிவதற்கு நான் ஆதியில் தீர்மானித்திருந்தேன். ஆனால் மனிதன் தான் நினைப்பது போல் ஒரு காரியத்தைச்செய்துமுடிப்பதற்கு முயலும்

போது, அம்முயற்சியைப் பயனற்றதாகச் செய்து, வேறு வகையில் அவனை அவனறியாமலே முயலும்படி செய்கின்ற "விதிவலி" என்பது ஒன்று தனியாக இருக்கிறதன்றோ; அந்த விதியானது முதலிற் செய்யப் பட்ட என்னுடைய தீர்மானத்தை அடியோடு மாற்றி விட்டது. அத்தகைய மாறுதல் ஏற்படுவதற்குச் சாதக மான எதிர்பாராத சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. அதாவது, திரிசிரபுரத்திற்கு என்னுடைய சொந்த விஷயம் ஒன்றைக் குறித்துப் போக நேர்ந்தபோது, அங்குள்ள ஒரு சத்திரத்தில் வயோதிகர் ஒருவர் நோயி னல் வருந்திக் கூக்குரலிடும் சத்தம் என்னுடைய காதில் விழுந்தது. நான் உடனே அந்தச் சத்திரத்திற் குச் சென்று நோயாளியைப் பார்த்தேன். அவர் ஒரு பிரயாணியைப்போல் காணப்பட்டார். அவருக்கு வயது அறுபதாம் வருஷத்தின் அப்புறம் இருக்குமென்றே யாரும் சொல்லுவார்கள். அவர் முடக்குவாதத்தினல் பெரிதும் பிரலாபித்துக்கொண்டிருந்தார். நான் அந்தச் சத்திரத்திலேயே சுமார் ஒரு வாரம் வரையில் தங்கி யிருந்து அவருக்கு வேண்டிய சிகிச்சைகளை மிகுந்த ஜாக்கிரதையுடனும் ஊக்கத்துடனும் செய்துவந்தேன். இறுதியில் அவர் பூரணகுணமடைந்தார். அவரைப் பற்றிப் பிறகு விசாரித்தபோது திருச்சியில் பிரக்யாதி பெற்ற ஒரு வைத்தியர் என்றும், அவருடைய பெயர் சிவப்பிரகாசம் என்றும் நான் அறியலானேன். அவ ருக்கு உற்றருமில்லை; உறவினருமில்லை— "இந்த உல கத்தில் அவருக்குத் துணை அவர்தான்" என்று சொல் லும்படியான நிலைமையில் அவர் இருந்தார். ஆனல், வைத்தியத்தொழிலினல் சம்பாதித்தபெரும்பொருள்,— சுமார் இரண்டு லட்சம் ரூபாய்க்குமேல்,—அவர்வச

மிருந்தது. அவருக்கு என்னிடம் மிருந்த அன்பு எக் காரணம்பற்றியோ ஏற்பட்டுவிட்டது. அவருடைய ஆஸ்தியை எனக்கே உரிமையாக்கி விடுவதாகவும், அவருடைய வீட்டிலேயே என்னை இருக்கும்படியாக வும் அவர் கூறி, என்னைக்கட்டாயப்படுத்தினர். ஆகவே திருச்சிராப்பள்ளியிலேயே நான் வசிக்கும்படியான சந்தர்ப்பம் நேர்ந்தது.

சிவப்பிரகாசம் வைத்தியத்தொழிலில் நீண்ட அனுபவம் உடையவராதலால், அனுபவஞானம் இல்லா மல் வெறும் நூலறிவு மாத்திரம் வாய்க்கப்பெற்ற எனக்கு அவருடைய கூட்டுறவு பெரும்பயனை விளை வித்தது. இதற்கு முன் அறியாத பல நூதன வைத் திய முறைகளையும் மருந்துவகைகளையும் சிகிச்சை நுட் பங்களையும் நான் அவரிடமிருந்துகற்றுக்கொண்டேன். தாம் வழக்கமாக வைத்தியம் பார்க்கும் பெருங் குடும் பங்களில், வைத்தியம் பார்க்க நேரிடும்போது, சிவப் பிரகாசம் என்னையே அனுப்புவார். இதனால் பெரிய தனவந்தர்களின் சிநேகமும் எனக்கு வாய்த்தது.

ஏற்கனவே அளவுக்கு அதிகமாய் உலகத்தில் பரவி யிருக்கும் தொழில்கள், வக்கீல் தொழிலும், வைத்தி யத் தொழிலுமே என்பதை யாவரும் அறிவார்கள். மிகக்குறைந்த ஜனத்தொகையுள்ள சிறிய பட்டினத்தி லும் சுமார் நாற்பது ஐம்பது வக்கீல்களையும், பத்துப் பன்னிரண்டு வைத்தியசாலைகளையும், இருபது முப் பது வைத்தியர்களையும் இக்காலத்தில் நாம் பெரும் பாலும் பார்க்கிறோம். வக்கீல்கள் அதிகமாக அதிக மாக வியாச்சியங்கள் அதிகமாவதும், வைத்தியசாலை கள் பெருகப் பெருக வியாதியஸ்தர்கள் பெருகுவதும், வைத்தியர்கள் அதிகரிக்க அதிகரிக்கப் புதிதுபுதிதான

வியாதிகள் தோன்றுவதும், உண்மை என்பதை உலகானுபவமறிந்த எவர்தான் மறுப்பார்?

ஆகவே, காப்பிஹோட்டல்கள் ஊர்களில் மலிந்து காணப்படுதல் போல், வைத்திய சாலைகளும் வைத்தியர்களும் மலிந்து காணப்படும் இக்காலத்தில்,—அதிலும் திருச்சிராப்பள்ளியைப் போன்ற ஜன நெருக்கமும் நோய்ப்பெருக்கமும் கொண்ட இடத்தில்,—அதே தொழிலில் பிரவேசித்துள்ள எனக்கு எதிர்பாராத விதமாகப் பெரும் பொருளும் வியாபகமான தொழிலும், தக்க வருவாயும் கிடைத்தால், நான் மனமகிழ்தல் ஒரு வியப்பாமோ ? ஆகாது. ஏனெனில், என்னைப்போன்ற இளம்பருவத்தினர்க்கு இத்தகைய பேரதிர்ஷ்டம் உண்டாவது,—பெரும்பகுதி துன்பத்திற்கும் சிறுபகுதி நிலையற்ற இன்பத்திற்கும் இடமாயுள்ள இந்நிலவுலகத்தில்,—சாதாரணமாக நிகழக்கூடிய சம்பவமன்று. இத்தகைய உன்னத நிலைமை எனக்கு வாய்ந்த இரண்டு வருஷங்கள் கழிந்தவுடன் சிவப்பிரகாசம் தேசயாத்திரை செய்யப்புறப்பட்டு விட்டார். சிறிது காலம் வரையில் அவருக்கும் எனக்கும் கடிதப்போக்கு வரவு இருந்தது. பிறகு அவரிடமிருந்து கடிதம் வருவது நின்றேபோயிற்று.

என்னைவிட்டுப்பிரிவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்குமுன்னர் தான், முதலிற்சொல்லப்பட்ட "காதல் விஷயமாய்" மிகுந்த உற்சாகத்துடனும் சாமர்த்தியத்துடனும் சிவப்பிரகாசம் மிக விரிவாகப் பிரஸ்தாபித்தார். அவருடைய விரிந்த பிரஸ்தாபத்திற்கு நான் அளித்த பதில் மோன விருதமும் அலட்சிய நோக்கமுமேயாகும். அவர் எனக்குச் செய்த பேருதவியும், இயல்பாகவே கௌரவமும் கண்ணியமும் வாய்ந்த

ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்ததினால் எனக்கு ஏற்பட்டிருந்த இயல்பும் வைத்தியர்களுக்கு அவசியம் இருக்கவேண்டிய முகமலர்ச்சி, சாந்தநோக்கம், இனிய மொழியாதிய இவைகள் இயல்பாகவே என்னிடம் அமைந்திருந்தமையும், ஜனோபகாரமான பொது விஷயங்களில் நான் கொண்டிருந்த ஊக்கமும், இவை எல்லாவற்றையும் விடக்கடைசியாய்,—ஆனால் முதன்மை பெற்றதாய்,—“திறமையும் கைராசியுமுடைய வைத்தியர்” என்று வலியாரும் எளியாரும் ஒருங்கு புகழ்வதால் எனக்குண்டான கீர்த்தியும் ஒன்று சேர்ந்து திரிசிரபுரத்திலும் ஏனைய தமிழ் ஜில்லாக்களிலும் என்னுடைய மதிப்பையும் கௌரவத்தையும் நிலைநாட்டி விட்டன;

ஆனால், திரிசிரபுரத்திலேயே எனக்குப் போட்டியாக வைத்தியம் செய்து வந்த வைத்தியர் ஒருவர் இருந்தார். “இயற்கை நுண்ணறிவும் சமயோசித புத்தியும் இல்லாமலிருப்பது தான் சாமர்த்தியம்” என்று கொள்வது நியாயமானால், இவரைச் சாமர்த்தியசாலி என்று சொல்லுவதும் நியாயமேயாகும். “இரைப்பையும் இருதயமும் ஒன்றுதான்” எனப் போதிப்பதும், “மலபந்த மாத்திரை கைவசமில்லாத போது விரோசனக் குளிகையைப் பிரயோகிக்கலாம்” என்று வற்புறுத்துவதும் வைத்தியசாஸ்திரமானால், குலாம் காதிறு என்னும்பெயருடைய இந்தவைத்தியரும் வைத்திய சாஸ்திர நிபுணரேயாவார். நாகரீகமும், நூதன சாஸ்திர ஆராய்ச்சிகளும், புதிது புதிதான கொள்கைகளும், நவநவமான கல்வி முறைகளும் வரவர விருத்தியாகிவரும் இக்காலத்தில், மனிதர்களும் ஒரு விஷயத்தில்,—அதாவது சோம்பலினால் ஆழ்ந்த

ஆராய்ச்சி செய்வதை விடுவித்து நுனிப்புல் மேயும் விஷயத்தில்,—விருத்தியடைந்து வருகிறார்களன்றோ? ஒரு தொழிலை மேற்கொள்ளுகிறவர்களும், ஒரு சாஸ்திரத்தைப் படிப்பவர்களும் முனைந்து நின்று தாங்கள் பிரவேசித்துள்ள விஷயத்தில் பூரண அறிவைப் பெறுவது இக்காலத்தில் பெரும்பாலும் இல்லை. சிறு முயற்சியினால் பெரும்பலனை அடையவேண்டுமென்பதே பலருடைய நோக்கமாயிருக்கிறது. "எதுகை" "மோனை" என்பவை போன்ற சிலபதங்கள் தெரிந்தவுடன் "ஆசுகவி மாசிலாமணி" என்றும் "சீமான்களே!" "சீமாட்டிகளே!" என்பவை போன்ற இரண்டொரு வார்த்தைகளைப்பலர் முன்னிலையில் சொல்லத்தெரிந்தவுடன் "பிரசங்க பிரசண்ட மாருதம்" என்றும், "சரி" "கம" என்று சுரம்பிடிக்கச் சிறிது தெரிந்தவுடன் "சங்கீத சாகரம்" என்றும், சக்கரைப் பாகில் சுக்குத்தூளைக் கலவை செய்யத் தெரிந்தவுடன் "வைத்திய வரப்பிரசாதி" என்றும், "மதி முகம்" "ஆம்பல்வாய்" என்பவைபோன்ற சிலவார்த்தைகள் தெரிந்தவுடன் நூல்கள் எழுத ஆரம்பித்தும் நாவல்கள் எழுத முன்வந்தும் "ஆம்பல் முகம்" "மதிவாய்" என்று பிறழப் பிரயோகித்துப் பாஷைக்குக் கேடு சூழ்வதோடு அமையாது, தங்களுக்குத் தாங்களே ஆரவாரமான பட்டங்களைக் சூடிக்கொண்டு மனமகிழும் போலிவேடதாரிகள் பலர் இக்காலத்தில் இருக்கின்றார்களன்றோ ? இவர்களுடைய வகுப்பைச் சேர்ந்தவர் தான் வைத்தியம் குலாம் காதிறு என்பவர்.

சிவப்பிரகாசத்துடன் இருந்தபோதும், அவர் தேசயாத்திரை சென்ற பின்பு ஆறுமாதமும் நான், ஏற்கனவே எந்தக்கட்டிடத்தில் அவர் வைத்தியசாலை

ஸ்தாபித்திருந்தாரோ, அந்தக் கட்டிடத்திலேயே வசித்து வந்தேன். ஆனால் இதற்குள் என்னுடைய பிரக்யாதி எங்கும் பரவி விட்டபடியால், நோயாளிகள் சிகிச்சைக்காகப் பிரதிதினமும் நூற்றுக்கணக்காய் வர ஆரம்பித்தார்கள். ஆதலால் நகருக்கு நடுவே பஹிரங்க மான இடத்தி லிருக்கக்கூடியதும் விசாலமுடையது மான வேறொரு கட்டிடத்திற்கு நான் குடிபோகும்படி யாய்நேர்ந்தது. இவ்விஷயமாய் நான் பலரிடம் சொல்லி யிருந்தேன்.

ஒரு நாள் வேதவதி என்னும் வயது முதிர்ந்த கன்னிகா ஸ்திரீ என்னிடம் வந்து "வைத்தியரே! ஒருமாளிகை காலியாயிருக்கிறது. அதை நீங்கள் நேரில் வந்து பாருங்கள்," என்று கூறினாள்.

உடனே நான் அவளுடன் சென்று அந்த மாளி கையைப் பார்த்தேன். அது ஒரு பெரிய அரண்மனை போல் இருந்தது.

நான் வேதவதியை நோக்கி "அம்மா! இந்த வீடு மிக அழகாயும் வசதியாயுமே இருக்கிறது. ஆனால், எனக்கோ இன்னும் விவாகம் ஆகவில்லை; எனக்குரிய உள்ளூர் உறவினர்களுள் எவரும் இவ்வூரில் இல்லை. ஒரு மனிதனுக்கு இவ்வளவு பெரிய வீடு அவசிய மென்று, எனக்குத் தோன்றவில்லை." என்று சொன் னேன்.

"ஐயா! ஒரு மனிதன் வசிப்பதற்கு இவ்வளவு பெரிய வீடு வேண்டுவதில்லை; என்று நீங்கள் கூறு வது உண்மையே. ஆனாலும் சிறந்த அழகும், தகுந்த வயதும், உயர்ந்த பதவியும் ஒருங்கு வாய்ந்துள்ள நீங் கள், நெடுநாளைக்குத் தனியாக இருக்கும்படி நேராது

என்றே நான் நினைக்கிறேன்." என்று வேதவதி புன் சிரிப்போடு புகன்றாள்.

"இருக்கட்டும்; இவ்விஷயமாய் ஆலோசனைசெய்து பிறகு தெரிவிக்கிறேன்." என்று நான்வேதவதிக்கு விடைபகர்ந்துவிட்டு அம்மாளிகையிலிருந்து நீங்கினேன்.

இரண்டு மூன்று தினங்கள் கழிந்தன. நான்காம் நாள் அந்த மாளிகையைக் குலாம்காதிறு வாடகைக்குப் பிடித்து விட்டார் என்றும், அந்த வீட்டில் அவர் தம்முடைய குடும்பத்தாருடன் வசிக்கப்போகிறார் என்றும், நான் அறிந்தேன். இவ்விஷயம் எனக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது. இச்சம்பவம் நிகழ்ந்ததற்குக் காரணம் யாதென விசாரித்ததில், மோஹனாங்கி செய்த சூழ்ச்சியே காரணம் என்பது புலப்பட்டது. மோஹனாங்கி என்பவள் திருச்சியில் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் வாய்ந்த ஒரு ஸ்திரீயாவாள். எல்லோரையும் தன்னுடைய விருப்பத்திற்கு இணங்கியும், அதிகாரத்திற்கு உட்பட்டும் நடக்கும்படி செய்வதில் இவள் சாமர்த்தியம் நிகரறக் கொண்டவள். பல வருஷம் சைனியத்தில் தளகர்த்தனாயிருந்து இப்போது உபகாரச் சம்பளம் பெறுகிறவனும், அஞ்சா நெஞ்சம் படைத்த மகாவீரனுமான இவளுடைய கணவன், இவளுடைய அதிகாரத்திற்கு உட்பட்டும் ஆக்கினைக்குப் பயந்தும் நடப்பவனென்றால், மற்றவர்களைப் பற்றிக் கூறுவானேன்?

நான் எவ்விஷயத்திலும் சுதந்தரமும் சுயேச்சையும் பாராட்டுவதில் விருப்பமுடையவன். பிறருக்கு அடங்கி நடப்பது என்னுடைய சுபாவமன்று. மோஹனாங்கி தன்னுடைய அதிகாரத்துக்கு உட்பட்டு நான்

நடக்கவேண்டுமென்று விரும்பினாள். ஆனால் நானோ அவளை என்னுடைய அதிகாரத்திற்கு உட்படுத்த முயன்றேன். இதனால் எங்கள் இருவருக்குள்ளும் ஒருவகையான விரோதபாவம் ஏற்பட்டது. ஆனால் மோஹனாங்கி மிகுந்த செல்வாக்குடையவளாதலாலும், பிறரைத் தன் விருப்பப்படி நடக்குமாறு செய்வதில் சாமார்த்திய முடையவளாதலாலும், என்னிடம் இனி வைத்தியம் பார்த்துக்கொள்ளக் கூடாதென்றும், குலாம்காதிறு விடமே எல்லோரும் வைத்தியம்செய்து கொள்ள வேண்டுமென்றும் ஜனங்களுக்குப் போதித்து அவர்களைத் தன் வழியில் திருப்பிவிட்டாள். இதனால் என்னுடைய தொழிலுக்குப் போட்டியாகத் தொழில் நடத்தும் மகமதிய வைத்தியருக்கு அதிகமான வருவாயும், மிகுதியான புகழும் உண்டாகத் தலைப்பட்டன. ஆனால், குலாம்காதிறுவின் வெற்றியினால் எனக்கு வருத்தமாவது பொறாமையாவது உண்டாகவில்லை. அவருடைய தொழில் விருத்தியால் என்னுடைய தொழிலுக்கு இடையூறுவது, என்னுடைய புகழுக்குப் பங்கமாவது உண்மையில் விளையவில்லை. வைத்திய சாஸ்திர விஷயத்தில் அவருடைய கொள்கைகள் என்னுடைய கொள்கைகளுடன் பெரிதும் மாறுபட்டன. மதவிஷயத்திலும், தத்துவ சாஸ்திர விஷயத்திலும் இவ்விதமே அபிப்பிராயபேதம் எங்களுக்குள் ஏற்பட்டிருந்தது.

குலாம்காதிறு “கடவுள் ஒருவர் உண்டு” என்று கொள்ளும் ஆஸ்திக சமயத்தினராவர். நானோ “கடவுள் இல்லை” என்று வாதிக்கும் நாஸ்திக மதத்தினன். “நமக்கு வாய்த்துள்ள அறிவு இவ்வுலகத்தையும் இவ்வுலக இயற்கையும் பற்றியது தான்.

இயற்கையின் போதனையிலிருந்து நாம் ஆலோசனை செய்து யுக்திக்கும் அனுபவத்திற்கும் இயைந்த முடிவுக்கு வருவதே தத்துவ சாஸ்திரம்" என்பது என்னுடைய கொள்கையாகும். "மதம்" என்பது, மூடத்தனமான நம்பிக்கைக்கு ஏற்ற விஷயமேயன்றி தத்துவ ஆராய்ச்சிக்கு ஏற்ற விஷயமன்று என்பது என்னுடைய சித்தாந்தமாகும். சரீரம், மனம், ஆன்மா ஆகிய இம்மூன்றுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பது குலாம் காதிறுவின் கொள்கையாகும். "மனம்" என்னும் வார்த்தையும் "ஆன்மா" என்னும் சொல்லும் எனக்கு ஏற்ற பதங்களல்ல. "காணப்படுகின்ற உலகம் காணப்படுகின்ற சரீரமாகிய இவை இரண்டுமே உண்மை. மற்றவை உண்மையல்ல" என்பது என்னுடைய தேர்ந்த அபிப்பிராயம்.

இரண்டாம் அதிகாரம்.

வசந்தகால சந்திரன்.

" ஆரமு மாரச் சேறு மரும்பனி நீரும் பூவு
மீரவெண் மதிநி லாவு மின்னிளந் தென்றற் காலு
மோருயி ரிரண்டு மெய்யா யுருகுவா ருருகும் வண்ண
மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்த காலம்."

[—**வில்லி பாரதம்.**

இவ்வுலகத்தில் மனிதர்களுக்கு வாழ்வு சிலகாலம், தாழ்வு சிலகாலம் என்னும் உண்மையை யறிவிக்கப் புகுந்தவன்போல், சூரியன் காலையிலிருந்து நண்பகல்வரையும் கீழ்த்திசையிலிருந்து மேலேறியும் அதன்பின் ஆகாயத்தின் உச்சியிலிருந்து மேற்றிசை நோக்கிக் கீழிறங்கியும் பையப் பையச் சென்று இறுதியில் மேலச் சமுத்திரத்தில் மறைந்தான். வெண்மதியாகிய இளமங்கை ஆதித்தனின் பிரிவாற்றாமையால் வருந்தும் நிலமளுக்குத் தேறுதல் கூறப் புறப்பட்டவளைப்போல், உடுக்கணங்களாகிய தோழியருடன் ஆகாயத்தில் தோன்றினாள்; அவளுடைய அழகிய தோற்றத்தாலும் அவளுடைய புன்முறுவலாகிய நிலவொளியாலும் பார்மகள் துயரவிருள் நீங்கி, வசீகரத்துடனும் உற்சாகத்துடனும், பொலிந்தாள். பொதியமலைத் தென்றல் நறுமணம் பொதிந்த இளங் காற்றைக் கொண்டு பூமாதேவியின் ஆயாசத்தைத் தீர்த்தது. குளிர்ச்சியான பச்சிலைகளை நெருங்கக் கொண்ட வான்தோய் மரங்கள் தலையசைத்துத் தண்

மதியை வரவேற்றன. மல்லிகை, முல்லை, ரோஜா, செவந்தியாதி நறுமலர்கள் செடிகளில் நிறைந்தும் மலர்ந்தும் காணப்பட்டமை கட்புலனுக்கு இன்பத்தையும், அவற்றின் சுகந்தம் மணமறியும் இந்திரியத்துக்குச் சுகத்தையும் கொடுத்தன. மணிக் கூண்டில் அமைக்கப்பட்டுள்ள கடிகாரம் ஏழுமணி அடித்தது. பழங்களையும், காய்கறிகளையும், புஷ்பவகைகளையும் சுற்றுப் புறங்களிலுள்ள கிராமங்களிருந்து கொண்டு வந்து விற்பனை செய்த அங்காடிக்காரிகள், நகரிலிருந்து மீண்டும் புறப்பட்டுத் தங்கள் தங்கள் கிராமங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். சந்திரனுடைய கதிர்கள் பாய்வதால் உருக்கி வார்த்த வெள்ளியைப் போல் தோன்றிய காவிரியாற்று ஜலம், அமைதியுடன் ஓடிக்கொண்டிருந்தது. வேத வழிப்பட்ட அந்தணர்கள் காவிரியாற்றில் தங்கள் மாலைக் கடனை மகிழ்வுடன் செய்து கொண்டிருந்தார்கள். அன்று திரசிரபுரம் ஒருவகையான வசீகரத் தோற்றத் துடனேயே விளங்கிற்று.

குலாம்காதிருக்கு மோஹனாங்கியின் உதவியால், வைத்தியத் தொழில் பிரபலமானவுடன்; அவர் அந்தக் கீர்த்தியுடன் திருப்தியடைய மனமற்றவராய் உலகை வேறு வழிகளில் வஞ்சிக்க ஆரம்பித்தார். மனிதர்களில் பெரும்பாலார்க்கு வாய்க்காத பல தெய்வீக சக்திகளும், அமானுஷிகமான ஆற்றல்களும் தமக்கு இருப்பதாக உலகத்தாருக்குக் கூறினார். கூறினதோடு மட்டும் அமையாது, ஜனங்களிற் பெரும்பாலரை நம்பும்படியும் செய்தார். மனோவசியம், ஆத்மகாட்சி, யோகப்பார்வை, பிர்மஞானம், தொலை விலுணர்தல் என்னும் இவை போன்ற பல பதங்களைப்

பிரயோகித்துப் பஹிரங்கத்தில் பேசுவது குலாம்காதிறுவின் வழக்கமாகும்.

"மனிதனிடத்தில் மூன்று பதார்த்தங்கள் பொருந்தி யிருக்கின்றன. அவையாவன:—(1) கட்புலனுக்குத் தோன்றுவதும், மெய். வாய், கண், மூக்கு, செவியாதிய பஞ்சேந்திரியங்களை யுடையது மான சரீரம் (2) இச்சரீரத்தின் வழியாய்ப் புறப்பொருள்களையும் அகப்பொருள்களையும் அறியும் மனம். (3) சரீரத்தையும் மனத்தையும் இயக்கி அவைகளை அடக்கியாளுகின்ற ஆன்மா. இந்த மூன்றினுள் சரீரம் பருப்பொருளான சடப்பொருளாதலாலும், மனம் இயக்கினாலன்றி அது தானே இயங்காதா தலாலும் அது அவ்வளவு பயனுடைய தன்று. மனம் என்பது சடவஸ்துவேயாயினும் அது சரீரத்தைப் போல் கட்புலனுக்குத் தோன்றும் பருப் பொருளாயில்லாமல் நுட்பமும் வியாபகமும் வாய்ந்த அற்புதமான சக்தியாக இருப்பதால் அதன் அருமை பெருமை அளப்பரும் தரத்தனவல்ல. இந்த மனம் அகமனம், புறமனம் என்று இருவகைப்படும். மனிதர்களின் உறக்க நிலையிலும், கனவு நிலையிலும் பஞ்சேந்திரியங்களின் உதவியின்றி புறம்பே நிகழும் நிகழ்ச்சிகளை அறிவது அகமனம் என்று பெயர் பெறும். சாக்கிராவஸ்தையில் பஞ்சேந்திரியங்களின் துணைகொண்டு வெளிப் பிரபஞ்சத்தை அறிவது புறமனம் என்று சொல்லப்படும். புறமனம் என்று சொல்லப்படும் ஸ்தூலமனத்திற்கு மூளையின் உதவி இன்றியமையாதுவேண்டப்படும். அகமனம் என்று சொல்லப்படும் சூக்கும மனத்திற்கு மூளையின் உதவிவேண்டுவதில்லை. சூக்கும மனம் எப்போதும்விழிப்பு நிலையிலேயே இருக்கும். ஆதலால்

இந்தச் சூக்கும மனோசக்தியை மனிதர்கள் விருத்தி செய்யவேண்டும். இந்த மனத்தின் உதவியைக்கொண்டு மனிதர்கள் சாதிக்க முடியாத பல அரிய காரியங்களைச் செய்து முடித்தல் கூடும். ஒவ்வொரு மனிதனிடத்தும் ஒருவகையான வசீகர சக்தி இருக்கின்றது. இச்சக்தி பலரிடம் குறைந்தும், சிலரிடம் மிகுந்தும் தோன்றும். மனிதனுடைய பார்வையிலிருந்தும், கை விரல்களின் நுனிகளிலிருந்தும் கட்புலனுக்குத் தோன்றாத மின்சார சக்தியைப்போன்ற ஒரு வகையான சக்தி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. மனிதன் தன்னுடைய மனோசக்தியில் பூரண நம்பிக்கையுடனும் தான் மேற்கொள்ளும் காரியத்தை எவ்விதத்திலும் சாதித்து விடலாம் என்னும் உறுதியான எண்ணத்துடனும் இருந்தால், அவன் எத்தகைய காரியங்களையும் நிறைவேற்றுதல் கூடும். நோயாளிகளைக் கண்ணினால் பார்ப்பதினாலும், அவருடைய சரீரத்தை மேலிருந்து கீழ் நோக்கிக் கையால் தடவி விரல் நுனிகளை உதறுவதினாலும், சில மந்திரங்களை ஜெபிப்பதினாலும் நாம் வியாதியை நீக்குதல் கூடும். இந்தச் சக்தியைக் கொண்டு பேய் முதலிய துஷ்ட ஆவேசம் பிடித்திருப்பவர்களைக் குணமாக்கலாம். தூரதேசத்தில் நிகழும் சம்பவங்களை அறியவும், தொலைவில் உள்ள ஒருவர் நினைப்பதை அறியவும், தூரதேசத்திலிருப்பவர்களுடன் சம்பாஷணை புரியவும், இறந்துபோனவர்களுடன் உரையாடவும், இறந்து போனவர்களைச் சூட்சும சரீரத்தில் பார்க்கவும் இன்னும் இவை போன்ற பல அற்புதமான செய்கைகளைச் செய்யவும் இந்த மனோசக்தி ஆற்றல் வாய்ந்ததாயிருக்கிறது. இந்த மனோசக்தியை விருத்திசெய்வதற்கு உரிய வழி, தளராத பழக்கத்தினால் மனத்தை ஒரே நிலையில்

குவியும்படி செய்தலேயாகும். ஆன்மா என்பது இச்சா ஞானக்கிரியா சக்திகளையுடையதும், அருவமானதும், ஏகதேசவியாபக முடையதும், இறைவனுடைய அருட் பிரகாசத்திற்கு உரிமையுடையதுமான சேதன சித்துப் பொருளாகும். மனத்தைவிட ஆன்மா மிகுந்த ஆற்ற லும் அருமையும் வாய்ந்தது. சரீரம் இயங்குவதற்கு மனத்தின் உதவியும் மனம் இயங்குவதற்கு ஆன்மா வின் உதவியும் வேண்டப்படுவதால் இம்மூன்றும் ஒன்றுக் கொன்று நெருங்கிய சம்பந்த முடையன.'' என்று குலாம்காதிறு அன்றிரவு ஓரிடத்தில் உபந்நி யாசம் செய்துவிட்டுத் தம் வீட்டுக்குச்சென்றார்.

இவருடைய உபந்நியாசத்தைக் கேட்பதற்கு நான் சென்றிருந்தேனாயினும், இவர் சொல்லிய விஷயங்கள் அனைத்தும் பொருத்தமற்றவைகளாகவே எனக்குத் தோன்றின. இவருடைய உபந்நியாசத்தைக் கண்டனம் செய்து மறுநாள் பேசுகிறதென்னும் தீர்மானத்துடன் நான் வீட்டுக்குச் சென்றேன். அப்போது, மணி ஒன் பது இருக்கும். நான் போஜனம் செய்துவிட்டு மஞ்சத் திற் படுத்து உறங்கலானேன். அயர்ந்த நித்திரையில் நான் ஆழ்ந்திருந்தபோது, வீட்டின் தெருவாயிற் கதவை யாரோ தட்டுவதுபோன்ற ஒரு சத்தம் என் னுடைய காதில் விழுந்தது. உடனே திடுக்கிட்டு விழித் துக்கொண்டு, எழுந்து சென்று கதவைத் திறந்தேன்; கையில் ஒரு மெழுகுவர்த்தி விளக்குடன் வேதவதி நின்றாள். அவள் வந்தபோது மணி இரண்டுக்கு மேல் இருக்கும். அவளைக் கண்டவுடன் நான், நடுநிசியில் அவள் தனித்து வந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமும் அச்சமும் ஒருங்கு கொண்டவனாய், ''வேதவதீ! இந்

நேரத்தில் நீ தனித்துவரக் காரணம் யாது?" என்று வினவினேன்.

"ஆத்மநாதரே! நான் அவசரகாரியமாய் உம்மிடம் வந்தேன்," என்று வேதவதி சொல்லிக்கொண்டே 'இன்னமும் நான் தனியாக இருப்பது அவளுடைய குற்றமன்று.' என்பதை நான் அறிந்துகொள்ளும் விதமாய் ஒரு கடைக்கண் பார்வையை என்மீது செலுத்தினாள்.

"அவசரகாரியமா? என்ன சங்கதி? விவரமாய்ச் சொல்." என்று நான் பரபரப்புடன் கேட்டேன்.

"வைத்தியரே! குலாம்காதிறு மரணவஸ்தையிலிருக்கிறார். அவர் உம்முடைய விரோதியாயிருந்தபோதிலும், இச்சமயம் நீரே அவரைக் காத்தல் வேண்டும். நன்றாய்ப் பேசிக்கொண்டிருந்தவர், திடீரென்று ஏதோ ஒருவகை மயக்கத்தினால் சாய்ந்துவிட்டார். உடம்பு சில்லென்று குளிர்ந்துவிட்டது. பேச்சுமில்லை; மூச்சுமில்லை; நீர்தான் சிகிச்சை செய்து அவரைக் காத்தல் வேண்டும். ஆதலால் தயைசெய்து என்னுடன் இப்போதே தாமதியாமல் வாரும்;" என்று வேதவதி பரிதாபத்தோடு கூறினாள்.

விரோதியேயாயினும், ஆபத்துக்காலத்தில் உதவி செய்யவேண்டியது கடமை என்று நினைத்து நான் வேதவதியுடன் குலாம்காதிறுவின் வீட்டுக்குச் சென்றேன்.

குலாம்காதிறு படுத்திருந்த அறைக்குள் சென்று அவரையும் அந்த அறையையும் சுற்றி ஒருமுறை பார்த்தவுடனேயே, என்னுடைய சிகிச்சை பயன்படாதென்பதை நான் இனிதறிந்துகொண்டேன். சுமார் ஒரு வருஷத்திற்கு முன்பு தன்னுடைய அருமை மனை

வியை இழந்து, அவளுடைய மரணத்தால் அதுமுதல் மிக வருந்தியவரும், அந்த மரணத்தை இப்போது தாம் அடையும் நிலைமையில் படுக்கையில் கிடப்பவரு மான நோயாளியைச் சுற்றி, அவருடைய புத்திரர்கள் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். மூத்த புத்திரனுக்குப் சுமார் பதினைந்து வயதிருக்கும். கடைசிப் புத்திரனுக் குச் சுமார் நான்குவயதிருக்கும். சுமார் ஏழுவயதுள்ள ஒரு பெண் நோயாளியின் கழுத்தைத் தழுவியபடியும் தன் முகத்தை அவர் மார்பின் மீது சாய்த்தபடியும் வாய்விட்டு அழுதுகொண்டிருந்தாள். இந்தப்பெண் நோயாளியுடைய புத்திரியேயாவாள், என்னைக்கண்ட வுடன், தம்மைச்சுற்றியிருந்தவர்களை அப்புறம்போகும் படி நோயாளி கையினுற் சைக்கினை செய்தார். எல் லோரும் அந்த அறையைவிட்டுவெளியே, மிகுந்தவருத் தத்துடனும் அமைதியுடனும் சென்றூர்கள். ஆனுல் அந்தப்பெண் மாத்திரம் வாய்விட்டு அலறிக்கொண்டே வெளியே சென்றுள். அந்தப்பரிதாபமான காட்சியைப் பார்ப்பதற்கு என்மனம் சிறிதும் சகிக்கவில்லை. குலாம் காதிறு என்னுடையகையைப்பிடித்துக்கொண்டு ஏதோ சொல்லமுயன்றூர். ஆனுல் முதலில் அவரால்பேசமுடிய வில்லை. பிறகு திடீரென்று ஏதோ ஒரு வகையான சக்தியால் உந்தப்பட்டுப் புதிய பலம் பெற்றவரைப் போல் பேச ஆரம்பித்து "ஆத்மநாதரே! மோஹ னுங்கியே உம்மை வேதவதி மூலமாய் இங்கு வா வழைத்தாள். உம்மிடம் சிகிச்சை செய்து கொள்ளு வதற்காக உம்மை நான் இங்கு அழைத்துவரச்சொல்ல வில்லை. ஆனுல்,—" என்று கூறினுர்.

"ஆனுல், என்னை எதற்காக இங்குவரவழைத்தீர்?" என்று நான் இடை மறித்துக்கேட்டேன்.

"எதற்காகவா! நீர் செய்துள்ள கொடிய வேலையை உம்மிடம் அறிவிப்பதற்காகவே நான் உம்மை இங்கு வரவழைத்தேன். என்னுடைய வாழ்நாளை நீர் அநியாயமாகக் கெடுத்து விட்டீர். எந்தச்சமயத்தில் என்னுடைய வாழ்நாள் என்புத்திரர்களுக்கு அவசியமாய் வேண்டப்படுகிறதோ, எந்தச்சமயத்தில் என்னுடைய வாழ்நாள் மனிதசமுகத்திற்கு மிகவும் பயன்படக் கூடியதோ, அந்தச்சமயத்தில் நீர் அதை அழித்து விட்டீர். இன்னும் சில வருஷங்களுக்கு மாத்திரம் நான் ஜீவித்திருக்கக்கூடுமானால், அக்காலத்திற்குள் என்னுடையகுழந்தைகள் தகுந்தபருவத்தை அடைந்து தங்களைத்தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் படியான நிலைமைக்கு வந்துவிடுவார்கள். அவர்களைப்பற்றிய கவலை சிறிதுமின்றி நான் இரத்தல் கூடும். ஆனால் இப்போதோ அவர்களை நான் அநாதைகளாயும் புகலற்றவர்களாயும் விட்டுச்செல்லவேண்டியவனா யிருக்கிறேன். உம்முடைய மருந்தினால் குணமடையாமல் துன்புற்ற எண்ணிறந்த நோயாளிகள் என்னுடைய சிகிச்சையினால் குணமடைந்து என்னை வாழ்த்தினார்கள். அவர்களுக்கும் நான் இனிப் பயன்படப்போவதில்லை. நான் மனோ வசியத்தாலும் யோகக் காட்சியாலும் வியாதிஸ்தர்களைக் குணப்படுத்தினால் 'மனோபாவனையின் பலன்' என்று கூறி என்னை ஏளனஞ் செய்தீர். எதுவாயிருந்தால் என்ன ? சாஸ்திர ஆராய்ச்சி செய்து புதிதான உண்மையைக் கண்டு பிடிப்பதாயும் நூதன மருந்து வகைகளை உண்டாக்குவதாயும் கூறி, நோயாளிகளை இன்னும் அதிகமான துன்பத்திற்கு உட்படுத்துவதைவிட, நான் மருந்தில்லாமலே அவர்களைச் சொஸ்தப்படுத்துவது சிறந்ததன்றோ? வீணுகப்பாசாங்கு

செய்பவரே! உம்முடைய புத்திக்குப் புலப்படாமலும் அறிவுக்கு எட்டாமலும் ஏதாவதொரு அதிசயசம்பவம் நிகழ்ந்தால், ‘அச்சம்பவம் நம்பத்தகுந்ததன்று; அச்சம்பவம் இயற்கைக்குவிரோதமானது’ என்று கூறுகிறீர். முற்றறிவும் முடிவிலாற்றலுமுடைய முழுமுதற் கடவுளின் அற்புதச்செயலை அறிவதற்கு உமக்கு வன்மை உண்டா? ஆ! என் கண்முன் தூய்மையான வெண்புகைபோல் ஒன்றுசேரும் அவ்வுருவத்தை—” என்று குலாம்காதிறு மிகுந்த வேகத்துடனும் ஆத்திரத்துடனும் பேசிக்கொண்டிருந்தபோது அவருடைய பேச்சு நின்றுவிட்டது. அவரைக்கூர்ந்து கவனித்தபோது, அவர் இறந்துபோனார் என்பதை நான் அறிந்தேன். சிறிது நேரம் அங்கிருந்துவிட்டு நான் என் வீட்டிற்குத் திரும்பினேன்.

குலாம்காதிறு என்னை இவ்விதம் நிந்தித்துப் பேசியதற்குக் காரணம் யாதெனநான் வீட்டிற்குச் சென்றபிறகு ஆலோசித்துப்பார்த்தேன். முதலில் காரணம்கண்டுபிடிக்க நான் அசக்தனானேன். உண்மையில் நான் அவருக்கு எத்தகைய தீங்கும் இழைக்கவில்லை. அவர் ஆஸ்திக மதத்தினரானபடியால் தம்முடைய கொள்கையை அவர் ஜனங்களுக்குப் போதித்தார். நான் நாஸ்திகமதத்தினனாதலால், என்னுடைய கொள்கைகளை நான் ஜனங்களுக்குப் போதித்தேன். அவர் மகம்மதியரானதால், இந்துக்களுக்கு அவருடைய வார்த்தையில் அதிகமானநம்பிக்கையில்லை. நான் இந்து குடும்பத்தில் உதித்தவனாதலால், என்னுடையவார்த்தைகளில் ஜனங்களுக்கு அதிகமான நம்பிக்கை இருந்தது. தவிர அவர்போதித்த போதனையை விட என்னுடைய வார்த்தைகளில் ஜனங்களுக்கு அதிகமான

நம்பிக்கை இருந்தது. தவிர அவருடையபோதனையை நம்புவதைவிட என்னுடைய போதனையை நம்புவது ஜனங்களுக்குசுலபமாயிருந்தது. மேலும், திருச்சியில் மகமதியர்களைவிட இந்துக்கள் அதிகமாயிருந்தார்கள்; இருக்கிறார்கள். ஆகவே, நாளடைவில் திருச்சிவாசிகளுள் பெரும்பாலர் என்னுடைய கட்சியைச் சேர்ந்தார்கள். இதனால் குலாம்காதிறுவுக்கு மதிப்பும் செல்வாக்கும் குறையத்தலைப்பட்டன. தவிர, மகம்மதியர்கள் இயல்பாகவே முரட்டுத்தனமும் இந்துக்களை அலட்சியமாய் நினைக்கிற சுபாவமும் உடையவர்கள் என்பது என்னுடைய கொள்கையாதலால், இவ்விரு வகுப்பாருக்குள்ளும் வேற்றுமையுண்டாக்கும் படியாக நான் உபந்நியசிப்பது வழக்கும். இதனால் பொது ஜனங்களுக்குக் குலாம்காதிறிடம்,—பொதுவாகவே மகம்மதியரிடம்,—ஒருவகையான வெறுப்புண்டானது. இக்காரணங்களால், குலாம்காதிறுக்குஎன்னிடம் பகைமையுண்டாயிருத்தல் கூடுமென்றும், அதனாலேயே அவர் இவ்விதம் என்னைத் தூஷித்தார் என்றும் நான் எனக்குள்ளேயே ஒருவாறு முடிவு செய்து கொண்டேன். ஆனாலும், குலாம்காதிறு தன்னுடைய மரணாவஸ்தையில் அவ்வளவு ஆத்திரத்துடன் என்னை நிந்தித்துப் பேசினதானது எனக்கு வருத்தத்தையும் அச்சத்தையுமே விளைவித்தது. இப்போது நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறது.

குலாம்காதிறு வைத்தியத் தொழிலினால் ஏராளமாய்ச் சம்பாதித்திருப்பார் என்றே ஜனங்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் அவர் இறந்தபிறகே உண்மை வெளியாயிற்று. "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு" என்னும் பழமொழிக்கு அவர் ஒரு உதாரண

மானூர். மாதம் ஒன்றிற்கு இருநூறு ரூபாய்க்குமேல் அவருக்கு வரும்படி வந்தும், இறந்தபோது ஆயிரம் ரூபாய் அவருக்குக் கடன் இருந்ததென்றால், யாருக்குத்தான் வியப்புண்டாகாது? இக்காலத்தில் இத்தகைய சம்பவம் சர்வ சாதாரணமாயிருக்கிறது. ஏராளமான வரும்படியிருந்தும், தரித்திரம் சிலரைவிட்டு நீங்குவதே இல்லை. இதற்குக் காரணம் என்னவென்று ஆழ்ந்து யோசிக்கும்போது நல்லவழியில் பொருளீட்டாமல் பிறரை முகஸ்துதி செய்தும், செய்யத்தகாத கேவலமான தொழில்களை இயற்றியும், பிறர் பொருளை அபகரித்தும், பொது நன்மைக்காகப் பாடுபடுவதாய் வேடம்பூண்டு அதற்காக வரும்பொருளைச் சுயப்பிரயோஜனப் படுத்தியும் உலகத்தாரை வஞ்சித்துப் பொருளீட்டுவதுந் தான் என்பது இனிது புலப்படுகிறது. குலாம்காதிறு 'மனோவசியம், யோகக்காட்சி' என்னும் இத்தகைய அமானுஷிகமான சக்திகள் நிரம்ப வாய்ந்த வனைப்போல் நடித்துப் பொது ஜனங்களை வஞ்சித்துப் பொருளீட்டினான். ஆகவே எந்தவழியாக அவனுக்குப் பொருள் வந்ததோ அந்தவழியாகவே அது சென்றுவிட்டது.

குலாம்காதிறுசாயபுவைப் போன்ற குணவிசேஷமுடைய மனிதர்கள் பலர் இக்காலத்தில் இல்லாமலில்லை. எத்தனையோ மனிதர்கள்—பண்டிதர்கள் என்றும், வித்வான்களென்றும், புலவர்களென்றும், பத்திராதிபர்களென்றும் பெயர் வைத்துக் கொண்டு தங்கள் கல்விக்குத் தகுந்த சிறந்த குணம் ஒரு சிறிது மின்றித் தாசிகள் வீடே கதியென்றும், பெரிய பிரபுக்களுக்கும் ஜமீன் தாரர்களுக்கும் பரத்தையர்களைச் (சமயம் வாய்த்தால் குலஸ்திரீகளையும்) கூட்டுறவு செய்து

வைப்பதே மேலான தொழிலென்றும், பிறர் தம்மிடம் அடைக்கலமாக வைத்த பொருளைச் சமயம் பார்த்து அபகரிப்பதே உயர்ந்த செயலென்றும், ஊரார் சொத்திற்குப் பேயாய்ப்பறந்து எந்த வகையினுலாவது அச்சொத்தை அடைய வேண்டுவதே ஜன்மம் எடுத்ததின் பலன் என்றும் நினைத்து நடப்பவர்களும், அவ்விதம் நடப்பதால் உலகத்தாருக்கு அருவருப்பை விளைவிப்பவர்களும், 'கல்லாத பேர்களே நல்லவர்கள் கற்றுமறிவில்லாத வென் கன்மத்தை யென்சொல்கேன்' என்னும் ஸ்ரீதாயுமானவர் அருமைத் திருவாக்கை மெய்ப்படுத்துகிறவர்களுமான எத்தனையோ மனிதர்கள், —மானத்தையும் தற்பெருமையையும் அடியோடு ஒழித்துவிட்டுப் பொதுஜன நன்மைக்காகப் புத்தகசாலை ஏற்படுத்துவதாயும், வாசகசாலை ஸ்தாபிப்பதாயும், பத்திரிகை நடத்துவதாயும் தேசத்திலுள்ள பெரிய பிரபுக்களிடத்திலும், ஜமீன்தாரர்களிடத்திலும், சிற்றரசர் களிடத்திலும், மடாதிபதிகளிடத்திலும் கூறித் தங்கள் 'பல்லெல்லாந் தெரியக் காட்டி' யாசித்துப் பொருள் கவர்கின்றார்கள். இவ்விதம் ஈட்டுவது போதாதென்று வாழ்த்துக்கவிபாடியும், இரங்கற்பாக்கள் இயற்றியும் பணம் சப்பாதிக்கின்றார்கள். இப்படிப் பல வகையில் கிடைக்கும் பொருள்களைத் தாங்களே சுயப்பிரயோஜனப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இறுதியில் அவர்களுடைய நிலைமையைக் கவனிப்போமானால், மிகவும் பரிதபிக்கத் தகுந்ததாயிருக்கிறது. தரித்திரம் அவர்களிடமே குடியிருக்கிறது. பிரதிதினமும் கடன்காரர்களின் நிர்பந்தமும், நியாயஸ்தலத்தாரின் 'சம்மனும்' 'வாரண்டும்' அவர்களைச் சூழ்ந்து கொண்டே யிருக்கின்றன. பொது

நன்மைக்காக அவர்கள் வசூல் செய்த பணம் யாதா யிற்றென்பதை ஈசனே அறிவார்! அவர்கள் ஏற்படுத்திய புத்தகசாலையில் புத்தகங்கள் இரா; ஸ்தாபித்த வாசக சாலையில் தெருப்புழுதியும் வௌவால் புழுக்கையுமே இருக்கும்; நடத்தும் பத்திரிகையோ, சூரிய கிரகண சந்திர கிரகணங்கள் ஒருவருஷத்தில் அபூர்வமாகத் தோன்றுதல் போல அபூர்வமாகவே வெளியாகும்,—அதுவும்பெரும் பொருளுதவி செய்கிறவர்கள் வீட்டில் ஏதாவது ஒரு விசேஷம் நேர்ந்தால்—இவ்வளவு பெரும் பொருள் இவர்களுக்கு வந்தும் இவர்கள் தரித்திரத்தால் பீடிக்கப்படுவதற்கு என்ன காரணம் 'பிறரை மோசம் செய்யும் கெட்ட எண்ணமே' காரணம் !

இத்தகை கற்றறிமூடர்களுள் குலாம்காதிறுவும் ஒருவனே யாதலால் இறந்தபோது அவன் தன் குடும்பத்தைத் தரித்திர ஸ்திதியில் விட்டுப்போனது ஒரு அதிசயமாகாது.

ஆனால் அவன் குடும்பத்தை நோக்கியபோது எனக்குச் சிறிது அனுதாபம் உண்டாயிற்று. மரணாவஸ்தையில் அவன் இருந்தபோது அவனுடைய புத்திரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு வாய்விட்டுக் கதறிய காட்சி என் கண் முன் அடிக்கடி தோன்றும். அவனுடைய பெண் குழந்தை மிகுந்த வருத்தத்துடன் அன்று பிரலாபித்த அழுகுரலோசை அடிக்கடி என் செவியில் நுழைவது போல் எனக்குத் தோன்றும். ஆகவே நான் அவனுடைய குடும்பத்தாருக்குச் சிறிது பொருளுதவி செய்து சுமார் இரண்டு மூன்று மாதம் அவர்களை ஆதரித்து வந்தேன்.

குலாம்காதிறுவின் மாளிகையைப் பொதுஜன

நன்மை புரிவதில் பெரிதும் விருப்பமுடைய ஒரு கன வான் விலைக்கு வாங்கி விட்டார்.

இதற்கிடையில் திருச்சி மலைக்கோட்டையிலிருப் பவரும், குலாம்காதிறுக்கு ஏதோ ஒரு வகையில் உற வினருமான மகம்மதாலி என்பவர் குலாம்காதிறுவின் குழந்தைகளைத் தம் வீட்டிற்கு அழைத்துப் போய் அவர்களைத் தாமே காப்பாற்றுவதாக ஒப்புக்கொண் டார். இவர் நுட்ப மதியும் உயர்ந்த கல்வியும் வாய்ந் தவரல்லராயினும், மகமதியர்களுக்குள் ஆங்கிலம் படித்து உயர்தரப் பரிட்சையில் தேறுகிறவர்கள் அதிக மில்லை என்பதையும், பொதுவாகவே மழுங்கிய மதியுடையவர்களெனப்பலரால் கருதப்படும் அவ்வ குப்பினருள் சிலர் உயர்ந்த கல்வியில் தேறினால் அவர் களுக்கு இந்துக்களைக் காட்டினும் அதிகமான சாதகம் புரியவேண்டியது முறை என்பதையும் கருதித் துரைத்தனத்தார் இவருக்கு ஒரு 'மாஜிஸ்டிரேட்' உத்தியோகம் கொடுத்திருந்தார்கள். இந்த மாஜிஸ் டிரேட் வீட்டில் குலாம்காதிறுவின் புத்திரர்களும் புத் திரியும் வளர்ந்து வந்தார்கள்.

மூன்றும் அதிகாரம்.

கன்னிகையாற் கருத்தழிதல்.

" விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல்—பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரை யென் னுள்ளத் தடத்து." நளவெண்பா.

ஆ! என்னே காலத்தின் மாறுதல்! இடைவிடாமல் சுழன்று கொண்டிருக்கும் காலசக்கரம், புறப்பொருளாகிய பிரபஞ்சத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் எண்ணிறந்த மாறுதல்களை உண்டாக்குவது போலவே, அகப்பிரபஞ்சமாகிய மனிதன் மனத்திலும் கணத்திற்குக் கணம் எண்ணிறந்த மாறுதல்களை உண்டாக்குகிற தென்றால், அதன் ஆற்றலை என்னென்றுரைப்பது? மனிதன் மனதில் ஒரு சமயம் கோபமும், இன்னொரு சமயம் அன்பும், மற்றொரு சமயம் காதலும், வேறொரு சமயம் பகைமையும் ஜனிப்பதற்குக் காரணம் காலமேயானால் அக்காலத்தின் செயலால் வெளிப் பிரபஞ்சத்தில் மழை பெய்தல் ஒரு காலமும் வெயிலெரித்தல் ஒரு காலமும், பனி பொழிதல் ஒரு காலமும், இலை யுதிர்தல் ஒரு காலமும், மரந்தழைதல் ஒரு காலமுமாகப் பல வகையான மாறுதல் நிகழ்வது ஒரு வியப்பாமோ? ஆ! என்னுடைய மனம், சிலவருஷ காலங்களுக்குள் எத்தகைய மாறுதலடைந்து விட்டது? சிவப்பிரகாசம் காதலைப்பற்றி எனக்கு அப்போது செய்த உபந்நியா

சத்தின் அருமையை இப்போது தான் ஒருவாறு நான் உணர ஆரம்பித்தேன். 'அன்பு' என்பதும் 'காதல்' என்பதும் வெறுஞ் சொற்கள் என்றும், சரீரத்தில் அளவுக்கு மிஞ்சி இரத்தம் அதிகரிப்பதனுல், அவயவங்களுக்கு ஏற்படும் நிலை பிறழ்வைத் தடுப்பதற்கு ஒரு சாதனமாக இருக்கும் சிற்றின்பத்திற்கு மனிதன் அடிமையாகும் அவசரத்தில், பெண்களிடம் அவன் வைக்கும் பற்றுதலை "அன்பு" "காதல்" என்று புகழ்ந்துரைக்கப் படுகிறதே தவிர வேறில்லையென்றும் இதுவரையில் கருதிவந்த நான், இப்போது வேறுவிதமான அபிப்பிராயங் கொண்டேன்.

எனக்குச் சிறந்த புகழும், ஏராளமான பொருளும், அளவுக்கு அதிகமான மதிப்பும், கௌரவமும் இப்போது இவ்வுலகத்தில் வாய்த்துவிட்டன. ஆனுல், இவைகளை அடைந்தும் என்மனம் திருப்தியடையவில்லை. தனியாக நான் இவ்வுலகத்தில் இருக்கிறவரையில் இவையிருந்தும், இல்லாதனவேயாமென்றும், மனதிற்கியைந்த மங்கைநல்லாள் ஒருத்தியை மணந்து அவளுடன் கலந்து வாழ்வதே என் மனக்குறையைத் தீர்க்கும் என்றும், நான் கருதினேன். அதிகம் சொல்லுவானேன்? விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்னும் ஆவல் என்மனதில் வேரூன்றிப் பதிந்துவிட்டது.

"எவ்விதமான பெண்ணை விவாகம் செய்துகொள்வது?" என்னும் எண்ணம் என் மனத்தில் உதித்தது. இக்காலத்தில் விவாகம் பல ஜாதியாருள் பலவிதமாய் நடைபெறுகிறது. பிராமணர்கள், எந்த மங்கை அதிகமான பணம் கொடுக்கின்றுளோ அந்த மங்கையை மணப்பதே பொருத்தமானதென்று

கருதி அவ்விதமே செய்து வருகிறார்கள். அவர்க ளுக்குள் விவாகமும் சதிபதிகளின் அன்பும், பெண் வீட்டார் புருஷனுக்குக் கொடுக்கும் வரதட்சணையைப் பொறுத்ததா யிருக்கின்றன. மற்ற ஜாதியார்களோ பணத்தையும், குலத்தையும், முக்கியமாகக் கருதி விவாகம் செய்கிறார்கள். நூறு வயதுள்ள வயோதி கனு யிருந்த போதிலும், ஆயிரம் ரூபாவுக்கு நகை போடக் கூடியவனு யிருந்தால், பதினாறு வயதுள்ள இளமங்கையர்களைச் சிறிதும் மனங் கூசாமல் அவ னுக்கு மணம் புரிவிக்கும் பெற்றோர்கள் பலர் இருக் கின்றார்கள்! பெண் அழகிற் சிறந்தவளாயிருந்தால், குலத்தையும் குணத்தையும் கவனியாமல் ஆயிரக் கணக்கான ரூபாயைக் கொடுத்து அவளை விவாகம் செய்து கொள்ள விரும்பும் வாலிபர்களும் இக்காலத் தில் இருக்கிறார்கள்! ஆனல் நான் இத்தகைய விவா கங்களை விரும்பவில்லை. பெருந் தனவந்தன் வீட்டுப் பெண்ணினை மணக்கவேண்டு மென்பது என்னுடைய கொள்கை யன்று;—ஏனெனில், போதுமான பொரு ளும் வருவாயும் எனக்கிருந்தமையால், தனவந்தன் வீட்டுப் பெண்ணை விவாகம் செய்துவிட்டு அவளு டைய அதிகாரத்திற்கும் ஆக்கினைக்கும் உட்பட்டு நடக்கவேண்டிய அவசியம் எனக்கில்லை,—அவ்விதம் செய்வதற்கு என்னுடைய சுதந்தர உணர்ச்சி இடங் கொடுக்கவுமில்லை. அழகில் மாத்திரம் மிகச்சிறந்த பெண்ணை விவாகம் செய்ய வேண்டும் மென்ப தும் என்னுடைய நோக்க மன்று. ஏனெனில், ‘அழகு’ என்றும் 'நீடித்திரா தென்பதையும்; காலை யில் அரும்பி மாலையில் மலர்ந்து நள்ளிரவில் வாடி உதிரும் ரோஜா மலரெனச் சிறிது காலத்திற்குள்

'அழகு' என்பது தோன்றி மறையும் இயல்புடைய தென்பதையும் நான் நன்கறிந்துளேன். ஆகவே சிறந்த குணமும், சாதாரணமான அழகும், மனமொத்து நடக்கும் திறமும் வாய்ந்த ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்பதே என்னுடைய விருப்பமாகும்.

ஒரு நாள் சாயந்திரம் நான் ஒரு நோயாளி வீட்டுக்குச் சென்று சிகிச்சை செய்துவிட்டுத் திரும்பும்போது, குலாம்காதிறு முன் வசித்து வந்த மாளிகை வழியாக வரும்படி நேரிட்டது. அம்மாளிகையின் தெரு வாயிற் படிக்கு நேராக வந்தபோது அம்மாளிகைக்குள் சிலர் பேசிக்கொண்ட சத்தம் என் காதில் விழுந்தது. ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தேன்.—ஏனெனில் குலாம் காதிறு இறந்த பிறகு அம்மாளிகையை ஒரு கனவான் விலைக்கு வாங்கி விட்டார் என்று எனக்குத் தெரிந்திருந்த போதிலும், அந்த மாளிகையில் குடியில்லை என்பதையும், நெடுநாளாக அது பூட்டப்பட்டிருந்த தென்பதையும் நான் அறிவேன். இப்போது அந்த மாளிகைக்குப் புதிதாய்க் குடிவந்திருப்பவர்கள் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் அவா ஏதோ காரணத்தால் எனக் கெழுந்தது. உடனே நான் அம்மாளிகையினுள் நுழைந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பவனைப் போல், மெதுவாக நடந்து கொண்டே சென்று மாளிகையின் பின்புறத்தை அடைந்தேன். அங்கே ஒரு மரத்தடியில் ஓர் இந்து ஸ்திரீயும், மகமதியக் கனவானும் சம்பாஷித்திருப்பதைக் கண்டேன். கூர்ந்து நோக்கவே, அங்கே நின்ற கனவான் மாஜிஸ்டிரேட் மகம்மதாலி என்பதை நான் அறிந்து கொண்டேன்,—ஆனால் அந்த ஸ்திரீ யார்

என்பது எனக்கு விளங்கவில்லை. அவள் அணிந்திருந்த ஆடை யாபரணங்களைக் கொண்டு அவள் ஒரு பெரிய தனவந்தன் வீட்டைச் சேர்ந்தவளா யிருக்கவேண்டு மென்பதை நான் அறிந்து கொண்டேன். அவர்களுடைய கண்ணில் அகப்படக் கூடாதென்று கருதி மாளிகையின் தென்புற மதிளோரமாய் மெதுவாக நடந்து சென்று, மாளிகையின் பின் புறமாயுள்ள தென்னந் தோப்புக்குள் நுழைந்து விட்டேன். அத்தோப்பி லிருந்தபடி தெருவிற்குச் செல்லுவதற்கு ஒரு வழியும் இருந்தது. தோப்பிற்குள் நுழைந்தபோது அங்கே ஓர் அதிசயமான காட்சியை நான் கண்டேன்,—ஸ்தம் பித்து நின்றேன்.

வெண் மலரும் மருக் கொழுந்தும் கலந்து சூடிய கருங் கூந்தலும், பிறைமதி நிகர்த்த திருநுதலும், காமன் வில்லனைய கரும்புருவமும், பாலென வெளுத்த வெண்விழி நடுவே நஞ்செனக் கரிய கண்மணி சுழலும் அஞ்சனந் தீட்டிய விசாலமான நேத்திரமும், மாங் கனிக்கதுப்பெனப் பாங்குட னமைந்த ஓங்கு சீர்க்கன்னமும், குமிழம் பூப்போன்ற அமைவுறு நாசியும், வள்ளை யிலை யென நீண்டு ஊசல்போ லசையும் மாசிலாச் செவியும், பவழ இதழையும் அமிழ்த மொழியையும் முத் தனைய பல்லையும் நவையற்ற நாவையும் ஒருங்கே கொண்ட வாயும், வலம்புரிக் கழுத்தும், பச்சை மூங் கிலைப்போல வழுவழுப்பாயும் கரவு சரிவாயு முள்ள புஜமும், கரும்பினைப்போல் திரண்டுருண்ட முன்கையும், காந்தள் நிகர்த்த கரமும், தாமரை முகையினைப்போன்ற தனமும், படிப்புடைய சிறு வயிறும், பிடியுளடங்கும் துடியிடையும், வாழையைப் பழித்த பெருந்துடையும், சிறூர்விளையாடும் சில்லினையொத்த முழந்தாளும், சிலம்பு

கிடந்து சிலம்பும் புறங்காலும், நாயின் நாவை நிகர்த்த மென்சீறடியும், இன்னோரன்ன பல்வகைச் சிறப்பும் ஒருங்கமைந்த ஒரு மங்கைநல்லாள் தன்னந் தனியே அத்தென்னந் தோப்பினுள் ஒரு மரத்தடியி லுட்கார்ந் தாழ்ந்த சிந்தையோடு தன் கையிலொரு புத்தகத்தை வைத்து வாசித்துக்கொண்டிருந்த அற்புதக்காட்சியே என்னை ஸ்தம்பித்து நிற்கும்படி செய்தது. அவள் மாந் தளிர் மேனியள்; பங்கயமலரையும் பங்கமில்மதியையும் நிகர்த்த முகத்தினள்; அன்பு ததும்பும் அகத்தினள்!

அவள் என்னை நோக்காமல் தன் கையில் விரித்து வைத்திருந்த புத்தகத்தை நோக்கியபடியே உட்கார்ந் திருந்தாள். நான் சில நிமிஷங்கள் வரையில், தம்மாற் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் அமைந்திருக்கும் இயற்கை அற்புதங்களை இறைவன் அருவமாயும் வியா பகமாயும் மறைந்திருந்து நோக்கி வியப்பதைப்போல், அப்பைந்தொடியின் பேரழகை மறைந்திருந்து நோக் கியபடியே வியந்து நின்றேன். கைவன்மை வாய்ந்த ஓவியக்காரன் ஒருவன் அவளை அச்சமயம் பார்த் திருப்பானாயின், 'அவளுடைய அழகைப் படத்தி லெழு திப் பார்க்கவேண்டும்' என்று நினைப்பான். இயற் றமிழ்ப் புலவர் ஒருவர் அவளை அவ்வமயம் கண்டிருப்ப ராயின், 'அப்பாவையின் சரீர உறுப்புக்களைப் பாவி லமைத்தே பாராட்டவேண்டும்' என்று கருதுவார். ஆனால் நானோ கைவன்மை வாய்ந்த ஓவியனுமல்லன். நாவன்மை பெற்ற கவிவாணனுமல்லன். ஆகவே "நான் மணந்து இன்புறுதற்காகவே இறைவன் அவளைச் சிருஷ்டித்தார்" என்று நான் கருதினேன். ஏன்? குலாம் காதிறுவினுடைய பிரசங்கத்தாலும், சிவப்பிரகாசம் ஆதியில்மிக விரித்துக் கூறிய உபதேசத்தாலும், நான்

அறிய முடியாதிருந்த ஓர் உண்மையை, அறியும்படியும் நம்பும்படியும் அந்த மங்கை செய்துவிட்டாள்,—அதாவது காதலின் சிறப்பை ஒரு நிமிஷத்தில் நான் அறிந்துகொண்டேன்.

இவ்வுலகத்தையும், இவ்வுலகில் காணப்படும் ஏனைய பொருள்களையும் நான் அறவே மறந்து, அக்கட்டழகியின் தோற்றத்தில் கட்டுப்பட்டவனாய் அறிவொருங்கி நின்றபோது, என் பின்புறமாக யாரோ நடந்துவருவது போன்ற ஒரு சத்தம் என் காதில் விழுந்தது. நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். மாஜிஸ்டிரேட் மகம்மதாலி தோப்பின்வழியாக நான் நின்ற இடத்தை அணுகி வருவதைக் கண்டேன். ஆனாலவர் என்னோடாவது அம்மங்கையோடாவது ஏதும் வார்த்தையாடாமல், மிகுந்த வேகத்துடன் மாளிகையின் பின்புறத்திலுள்ள தோப்பின்வழியாக வெளியே நடந்து சென்றார். அவர் என்னை அந்த விடத்தில் பார்த்துவிட்டே அவ்விதம் சென்றிருக்க வேண்டுமென்று நான் சந்தேகித்தேன். அவரால் என்னுடைய விருப்பத்திற்கு,—அந்த நங்கைமீது காதல்கொண்டு அவளை மணக்க வேண்டுமென்று கருதிய என்னுடைய விருப்பத்திற்கு,—ஏதாவது இடையூறு நேருமோ என நான் அஞ்சினேன். அவர் குலாம்காதிறுவினுடைய உறவினரா யிருந்ததும், நானும் குலாம்காதிறுவும் விரோதபாவம் பாராட்டினோம் என்பதை அவர் அறிந்திருந்ததும், அவரும் மற்றொரு ஸ்திரீயும் அந்த மாளிகையில் பேசிக்கொண் டிருந்ததைக்கொண்டு அந்த ஸ்திரீயே அவ்வீட்டுக்குப் புதிதாய்க் குடிவந்தவளா யிருக்கவேண்டுமென்பதையும், அவளுக்கும் அவருக்கும் சிநேகபாவம் இருக்கக்கூடுமென்பதை

யும் ஒருவாறு நான் ஊகித்திருந்ததும், இன்னும் இவைபோன்ற சில காரணங்களும், நான் அந்தப்பெண் ணையும் அவளுடைய மறுவற்ற காதலையும் அடைவ தற்கு இடையூறாக, மகம்மதாலி ஏதாவது சூழ்ச்சி செய்யக்கூடும் என்னும் சந்தேகத்தை என் மனத்தில் எழுப்பிவிட்டன. அவ்விதம் அவர் ஏதாவது இடை யூறு இயற்றினால் யாது செய்வது என்னும் விஷயத் தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டே நான் என் னுடைய வீட்டிற்குச் சென்றேன். வீட்டிற்குப்போன வுடன் வேலைக்காரன் என்னை நோக்கி "எஜமானனே! மாதுஸ்ரீ மோஹனாங்கி அம்மையவர்கள் தங்களை அரை மணி நேரத்திற்கு முன்பு இங்குவந்து விசாரித்தார்கள்; தாங்கள் வெளியே சென்றிருக்கிறீர்கள் 'என்றும், இன் னும் வரவில்லை என்றும் சொன்னேன். அதிகாலையில் தங்களை அவர்கள் வீட்டுக்கு வரும்படி சொல்லிச்சென் றார்கள்." என்று கூறினான்.

மறுநாட்காலையில் மோஹனாங்கியைப் போய்ப் பார்ப்பதென்று நான் உடனே தீர்மானித்துவிட்டேன். ஏனெனில், அவளை விசாரித்தால் புதிதாய் அந்த மாளிகையில் குடிவந்திருப்பவர்கள் யார் என்பதை நிச் சயமாய் அறிந்துகொள்ளக்கூடு மென்னும் நம்பிக்கை எனக்கிருந்தது.

நான்காம் அதிகாரம்

மோஹனாங்கியின் குணாதிசயம்

" விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் தன்னைக்
கண்டிலன் வினவக்கேட்டான் கைகயள் கோயினண்ணித்
தொண்டைவாய் மடந்தைமாரிற் சொல்ல மற்றவருஞ் சொல்
[லப்
பெண்டிரிற் கூற்றமன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்
றாள் "

[கம்பராமாயணம்.

நான் அதிகாலையில் மலைக்கோட்டைக்குச்சென்று மோஹனாங்கியைச் சந்தித்தேன். அவள் அப்போது பத்மவிலாஸத்தில்,— 'பத்ம விலாஸம்' என்று மோஹனாங்கியின் மாளிகைக்குப் பெயர்,—வேறு இரண்டொரு ஸ்திரீகளுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். ஒரு ஜமீன்தாருடைய பௌத்திரியாகிய சாந்தை என்பவளும், விவாகமாகாத வயது முதிர்ந்த கன்னிகா ஸ்திரீயாகிய வேதவதியும் அங்கிருந்த ஸ்திரீகளுள் முக்கியமானவர்க ளாவார்கள்.

"ஆத்மநாதரே! வரவேண்டும், வரவேண்டும்!" என்று என்னை நோக்கியவுடன் மோஹனாங்கி உபசாரங் கூறி, ஒரு நாற்காலியில் என்னை உட்காரும்படி குறிப்பித்துவிட்டு "வைத்தியரே! கடைசியாகச் 'சரவண விலாசம்' வாடகைக்கு விடப்பட்டுப் போயிற்று. என்னுடைய நண்பரொருவர் அந்த மாளிகையை வாடகைக்குப் பேசி, அதில் குடிவந்திருக்கின்றார். அவருடைய

பெயர் சபாநாயகம் என்பது; அவருடைய மனைவி பெயர் சிவகாமியம்மை என்பது. சபாநாயகம் பேசும்போது, மிக இனிமையாக அவருடைய முகம் தோன்றும்;—ஆனால் அவர் அதிகமாகப் பேசமாட்டார்! சிவகாமி பேசுவதற்கு ஆரம்பித்தால், அவளுடைய முகம் மிகக் கோரமாகத் தோன்றும்,—ஆனால் அவள் இடைவிடாமல் பேசுவாள்! அவளும் நானும் பாலிய சிநேகிதர்கள்; அவளுக்கும் எனக்கும் ஒரே வருஷத்திற்றான் விவாகம் நடந்தது. ஒருவருஷம் அவளும் நானும் உறையூரில் வசித்து வந்தோம்! ஆனால் ஆத்மநாதரே, நட்பு விசாலமாயும் வாழ் நாள் குறுகியதாயும் இருக்கின்றன! அவளை விட்டு நான் பிரியும்படி நேரிட்டது. என்னுடைய புத்திரியாகிய விசாலாட்சியும், அவளுடைய புத்திரியும் உடலும் உயிரும்போல் ஒருவரையொருவர் நேசித்து வந்தார்கள்" என்று மீண்டும் உரைத்தாள்.

மோஹனங்கியின் வாய் மொழியினால் 'சரவண விலாஸம்' என்பது முன் குலாம்காதிறு வசித்துவந்ததும், பிறகு ஒரு கனவானால் விலைக்கு வாங்கப் பெற்றதுமான மாளிகையின் பெயர் என்பதை நான் அறிந்துகொண்டேன். அந்த மாளிகைக்குப் புதிதாய்க் குடிவந்திருப்பவர் பெயர் சபாநாயகம் என்பதையும், அவருடைய மனைவி பெயர் சிவகாமி என்பதையும், அவர்களுக்கு ஒரு புத்திரி உண்டு என்பதையும் மோஹனங்கி மூலமாய் நான் அறியலானேன். அன்று அந்த மாளிகையில் மகம்மதாலியோடு பேசிக்கொண்டிருந்தவள் சிவகாமியாயிருக்கக் கூடுமோ வென்றும், மாளிகையின் பின் புறமுள்ள தென்னந் தோப்பில் உட்கார்ந்திருந்தவளும் என் மனத்தைக் கொள்ளை கொண்டவளுமான

பெண்மணி அவளுடைய புத்திரியாயிருக்கக் கூடுமோ வென்றும் ஒரு சந்தேகம் என் மனதில் உதித்தது.

“உறையூர்க் கிராமம் சபாநாயகத்தின் ஜீவிய தசைக்குப் பிறகு அவருடைய புத்திரியைத் தான் சேருமோ?” என்று சாந்தை என்பவள் மோஹனாங்கியை ஆவலோடு வினவினாள். ஏனெனில், சாந்தை என்பவளுக்கு ஒரு புத்திரன்,—இன்னமும் விவாகம் செய்யப்படாதவன்,—இருந்தான்.

“இல்லை; அவளைச் சேராது! அந்த ஆஸ்தியை அடைவதற்கு ஆண் வார்சு இருக்கிறது. சபாநாயகத்தின் சகோதரர் ஒருவர் இருந்தார். வச்சிரபாணி என்னும் பெயருடைய ஒரு புத்திரனை விட்டு விட்டு அவர் இறந்துபோனார். அந்தப் புத்திரனுக்குப் போதிய வயது இன்னும் வரவில்லை. அவனுக்குக் கார்டியனாகச் சபாநாயகம் இருந்துவருகிறார். தகுந்த வயது வச்சிரபாணிக்கு வந்தவுடன் உறையூர்க் கிராமத்தில் பெரும் பாகம் அவனைச் சேரும். ஆனால் சிறுபாகத்திற்குச் சிவகாமியின் புத்திரியே உரியவளாவாள்.” என்று மோஹனாங்கி சாந்தைக்குப் பதில் கூறினாள்.

நாங்கள் எல்லோரும் சிறிது நேரம் வரையில் பொது விஷயங்களைக் குறித்து வேடிக்கையாக வார்த்தையாடிக் கொண்டிருந்தோம். அதன் பிறகு அங்கிருந்த ஸ்திரீகள் எல்லோரும், மோஹனாங்கியிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். நானும் மோஹனாங்கியும் மாத்திரம் தனியாக இருந்தோம்.

மோஹனாங்கி திருச்சியில் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் வாய்ந்த ஸ்திரீ என்றும், எல்லோரையும்

தன் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்கும்படி செய்வதில் விருப்பமுடையவள் என்றும், அவள் கணவன் சைனியத்தில் தளகர்த்தனாயிருந்து இப்போது உபகாரச் சம்பளம் பெறுபவன் என்றும் முன்னமே கூறியிருக்கிறேன். ஆனாலும் இவளைப் பற்றி இன்னும் சிறிது விஸ்தாரமாகக் கூறவேண்டுவது அவசியமாகிறது.

மோஹனாங்கி சாதாரண ஸ்திரீகளைவிட உயரமாயும் பருமனாயு மிருந்தாள். அவளுக்கு வயது நாற்பதிற்கு மேல் இராது. கரிய நிறமும், கம்பீரமான தோற்றமும், அகன்று பரந்த முகமும், அதிகார தோரணையைக் காட்டும் குரலும், பிடிவாதமும் தைரியமும் ஒருங்கமைந்த மனமும், இரக்க மின்மையையும் அன்பையும் மாறி மாறித் தோற்றுவிக்கும் பார்வையுமுடையவள்.

"ஆத்மநாதரே! நான் உம்மைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், நீரோ வேறொரு ஸ்திரீயைப்பற்றி நினைத்துக்கொண் டிருக்கிறீர். ஆ! நீர் நன்றியற்ற மனிதர்!" என்று திடீரென்று மோஹனாங்கி என்னை நோக்கிக் கூறினாள்.

"நீங்கள் கூறுவது சரியன்று. நான் உங்களைப் பற்றியே இப்போது நினைத்துக் கொண்டிருந்தேன்." என்று சிறிது சிரித்துக்கொண்டே பதில் சொல்லலானேன்.

"அப்படியா! ஆனால், யாரைக் குறித்து நீர் என்னை நினைத்தீர்? நாற்பது வயதிற்கும் இருபத்து நான்கு வயதிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள வித்தியாசம் சிறிதன்று. வேதவதி எனக்கு ஐந்து வருஷத்திற்கு இளையவள். ஆதலால் எங்கள் இருவரையும் நீர் நினைப்பதற்கு நியாயமில்லை. ஆகவே, வேறொரு பெண்மணி

யைப் பற்றியே நீர் சிந்தித்துக்கொண் டிருந்திருக்க வேண்டும். என்னைப்பற்றி நீர் நினைத்திருந்தாலும், அஃது அப்பெண்மணியின் சம்பந்தமாகவே இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.'' என்று மோஹனாங்கி உரக்கக் கூறி, ''ஆத்மநாதரே! நீர் காதல் நோயால் வருந்துகின்றீர்.'' என்று அதிரகசியமாக மீண்டும் என் காதிற்குள் உரைத்தாள்.

''இவ்விதம் நீங்கள் நினைப்பதற்குக் காரணம் யாது?'' என்று நான் உசாவினேன்.

''அவ்விதம் நினைப்பதற்குரிய குணம் குறிகள் உம்மிடம் வியக்தமாய்க் காணப்படுகின்றன. உம்முடைய நடையுடை பாவனைகள் மாறியிருக்கின்றன. முன் நான் உம்மைப் பார்த்தபோது காணப்படாத சில வேறுபாடுகள் இப்போது உம்முடைய முகத்தில் காணப்படுகின்றன. அமைதியோடும் ஸ்திர புத்தியோடும் இருக்கும் நீர், இப்போது அமைதியற்றவராயும் ஸ்திரபுத்தி யற்றவராயும் இருப்பதற்குக் காரணம் என்ன? கம்பீரமாயும் சந்தோஷகரமாயும் எப்போதும் காணப்படும் உம்முடைய முகம், தாழ்மையோடும் கவலைக்குறியோடும் காணப் படுவதற்கு முகாந்திரம் யாது?'' என்று மோஹனாங்கி வினவினாள்.

அவள் அவ்விதங் கேட்டவுடன் நான் ஏதும் தோன்றாமல் ஸ்தம்பித்து நின்றேன். திடீரென்றுண்டான மனக் கலக்கத்தை மறைக்க நான் முயன்றும், அந்த முயற்சி பயன்படாமையால் வெறும் புன்னகையால் அவளுக்குப் பதில் கூறவேண்டியவனானேன்.

''எப்போது காதல் நோய் என்னைப் பற்றியது? யாரால் பற்றியது?'' என்று நான் வினவினேன்.

"எப்போது என்பதையும் யாரால் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல என்னால் முடியாவிட்டாலும், நீர் காதல் வசப்பட்டிருக்கின்றீர் என்று உறுதியாய்க் கூற என்னால் முடியும். வைத்தியரே! காதலோடு செய்யப்பட்ட போதிலும் சரியே, அல்லது காதலில்லாமற் செய்யப் பட்டபோதிலும் சரியே!—விவாகம் என்பது ஆராய்ந்து செய்யப்படவேண்டிய ஒரு முக்கியமான விஷயமாகும். ஆதலால் ஜாக்கிரதையாக இரும்!" என்று மோஹனாங்கி கூறி, "என்னுடைய புத்திரி விசாலாட்சிக்கு இன்னும் நான் விவாகம் செய்யாமலிருப்பதற்குக் காரணம், சாமானிய ஏழையாயிருந்தபோதிலும் யோக்கியமுள்ளவனும் நற்குணமுடையவனுமுள்ள ஒருவனைக் கணவனாக அவளுக்குத் தேடவேண்டும் என்னும் விருப்பந்தான். ஆத்மநாதரே! நீர்தான் என்னுடைய புதல்வியைப் பார்த்திருக்கின்றீரே? அவளைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?' என்று மீண்டும் வினவினாள்.

"விசாலாட்சி நற்குணமுடையவள் என்பதை மறுப்பதற்கு என்னால் முடியாது. அழகுள்ளவள் என்பதை அங்கீகரிக்காம லிருக்கவும் என்னால் முடியாது." என்று நான் பதில் சொன்னேன்.

மோஹனாங்கியின் கேள்வியிலிருந்து, அவளுடைய புத்திரியை நான் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணம் அவளுக்கிருக்கக் கூடுமென்று நான் ஒருவாறு ஊகித்தறிந்தேன்.

"விசாலாட்சியை நான் பார்த்துப் பல தினங்களாகின்றனவே? அவள் எங்கே? வீட்டில் இல்லையோ?" என்று நான் மோஹனாங்கியை வினவினேன்.

"இல்லை; அவள் சபாநாயகம் வீட்டிற்குப் போயிருப்பாள்." என்று மோஹனாங்கி பதிலுரைத்தாள்.

"ஓ! அப்படியா? விசாலாட்சியும் சபாநாயகத்தின் புத்திரியும் ஒருவரையொருவர் மிகுந்த அன்புடன் நேசிக்கிறார்கள் என்று சற்று முன்பு கூறினீர்களே? அதை நான் மறந்து விட்டேன். சபாநாயகத்தின் புத்திரி எப்படிப் பட்டவள்?" என்று நான் அலட்சியமாய்க் கேட்டேன். ஆனாலும், என்னுடைய அந்தரங்கக் கருத்தை மோஹனாங்கி அறிந்து கொள்ளாமலில்லை.

"ஓ! காந்திமதி ஆச்சரியப்படத்தக்க தேகக் கட்டும், வியக்கத்தக்க பேரழகும் இனிது வாய்ந்தவளே யாவாள். ஆனாலும், அவளுடைய மனத்தின் போக்கு ஒருவிதமான பிறழ்வடைந்திருக்கிறது. அவளுடைய பேச்சும் செயலும், பித்தம் பிடித்தவர்களின் பேச்சையும் செயலையும் பெரும்பாலும் ஒத்திருக்கும். இந்த உலகத்தை அடியோடு மறந்தவள் போலும், வேறொரு பிரபஞ்சத்தில் வசிப்பவள் போலும் அவள் சிற்சில சமயங்களில் காணப்படுவாள். அவள் ஏதோ வியாதியால் வருந்துவதாகவும், தகுந்த வைத்தியர் ஒருவரை அனுப்பவேண்டுமென்பதாகவும் சிவகாமி அதிகாலையில் எனக்குச் சொல்லியனுப்பி யிருக்கிறாள். வியாதியால் வருந்தும் காந்திமதியைப் பார்ப்பதற்காகவே விசாலாட்சி 'சரணவிலாஸ'த்திற்குப் போயிருப்பாள்." என்று மோஹனாங்கி சொன்னாள்.

"காந்திமதி நோயினால் வருந்துகிறாள்" என்று மோஹனாங்கி சொன்னவுடன், என்னை யறியாமலே ஒருவிதமான மாறுதல் என் மனதிலுண்டாகி, அது முகத்திலும் பிரதிபலித்தது. என்னுடைய முகத்தி

லும் பேச்சிலும் ஏற்பட்ட மாறுதலைக் கண்டவுடன் மோஹனங்கி தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டாள். ஏனெனில், என் மனத்திலிருந்த அதிரகசியம் யாதென்பதை அவள் அறிந்துகொண்டாள் என்பதை நான் கண்டுகொண்டேன்.

ஆ! இரகசியம்! அதை நான் என்னென்றுரைப்பது? இதற்கு முன் ஒருபோதும் கண்டிராததும், எவ்விதமான சம்பந்தமும் இதுவரையில் என்னோடு பெற்றிராததுமான ஒரு முகத்தை,—ஆண், பெண் என்னும் இருவகைப்பட்ட அமைப்பினுள் பின் வகையினைச் சார்ந்த ஒரு முகத்தை,—முதன் முதல் சர்வ சாதாரணமாக நான் பார்த்தவுடனேயே, இதுவரையில் நான் கொண்டிருந்த கொள்கைகளும், எண்ணியிருந்த எண்ணங்களும் நிலை பிறழ்ந்தன வென்றால், அதன் ஆற்றலை நான் எவ்வாறு புகழ்வேன்? அவ்வளவு சக்தி ஒரு பெண்ணுக்கு எவ்விதம் வாய்த்தது? அவளை நான் முன்னறியேன்,—அவளுடைய மனம் எத்தகையதென்பதையும், அவளுடைய குணதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பதையும் நான் ஒரு சிறிதும் அறிந்திலேன். அவ்வித மிருந்தும் 'நோயால் வருந்துகிறாள்' என்னும் இரண்டு வார்த்தைகள் என் செவியில் நுழைந்தவுடன் என் மனம் அச்சத்தையும் அனுதாபத்தையும் ஒருங்கே கொண்டதாய் அலைகடலி லகப்பட்ட துரும்புபோல் சலனமடையக் காரணம் யாது? அந்த இரகசியந்தான் காரணம்! மோகனங்கி அதை அறிந்துகொண்ட பிறகு அவளிடம் நான் மறைத்துப் பேசுவதால் பயனென்னை? நான் 'காதல்' என்னும் பேய் பிடித்தாடுகின்றேன்' என்று மோஹனங்கி கருதியது உண்மையே! உலகத்தில் மனிதர்கள் எல்லோரும் ஒருகாலம்

இல்லாவிட்டால் ஒரு காலத்தில் காதலுக்கு அடிமையாகிறார்கள். ஆனால், அமைதியோடும் சாந்தத்தோடும் சிலரிடம் மெதுவாக இந்தக்காதல் வந்திறங்குகிறது. இன்னும் சிலரிடம், கழுகு தன் இரைமீது திடீரென்று பாய்ந்து பிடிப்பதுபோல், மிகுந்த வேகத்தோடும் ஆற்றலோடும் வந்து பாய்கிறது. ஆனால், நான் காதலித்ததைப்போல் இந்த உலகத்தில் எந்த மனிதனும் ஒரு ஸ்திரீயை அவ்வளவு ஆர்வத்தோடு காதலித்திருக்க மாட்டான் என்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன்.

காந்திமதி நோயினால் வருந்துகின்றாள் என்னும் செய்தியைக் கேட்டு நான் மனங்கலங்கினவனாய்ப் பல விதமான ஆலோசனையில் ஆழ்ந்திருந்த சமயத்தில் வேலைக்காரி ஒருத்தி ஒரு கடிதத்தை மோஹனாங்கியிடம் கொண்டுவந்து கொடுத்தாள். அவள் அக்கடிதத்தைப் பிரித்து வாசித்துவிட்டு என்னிடம் கொடுத்தாள். நான் அதைப் படித்தபோது அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

"என் பிரியமுள்ள மோஹனாங்கியே,—காந்திமதியின் சரீர நிலைமை எனக்கு மிகுந்த கவலையையும் அச்சத்தையும் கொடுக்கிறது. அவளுடைய வியாதி வரவர அதிகரிக்கிறது. எந்த வைத்தியரை அழைத்துக் காட்டினால் அவள் குணமடைவாள் என்பதை இக்கடிதம் கொண்டுவரும் வேலைக்காரியிடம் சொல்லியனுப்பவும். மிகவும் அவசரமான காரியம்.

"உன் அன்பார்ந்த

"சிவகாமி"

நான் கடிதத்தைப் படித்த பிறகு "வைத்தியரே! ஆயுர்வேத பண்டிதர் பத்மநாபரை வரவழைத்துப்

பார்த்தால், நலமாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.'' என்று மோஹனாங்கி கூறி அவருடைய பெயரையும் விலாசத்தையும் ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதி அதை வேலைக்காரியிடம் கொடுக்கப் போனாள்.

"அம்மா! நீங்கள் என் விஷயத்தில் இவ்வளவு கொடுமை பாராட்டக் காரணம் என்ன? எனக்கும், நான் கொண்டுள்ள எண்ணத்திற்கும் நீங்கள் யமனைப் போல் குறுக்கே நிற்கின்றீர்களே? 'பெண்டிரிற் கூற்றமன்னாள்' என்று கம்பர் கூறியது உங்கள் விஷயத்திலும் பொருத்தமுடையது என்பதை தாங்கள் கூறிய வார்த்தைகளால் இப்போது நான் உணர்ந்தேன். நான் உங்களுக்கு எந்த விதமான தீங்கும் இழைக்கவில்லையே? அவ்விதமிருந்தும் என்னை நீங்கள் விரோதிபோல் பாவித்து, நானிருக்கும்போது வேறொரு வைத்தியரைத் தேடுவதற்குக் காரண மென்ன?'' என்று நான் மிகுந்த பரிவுடனும் அனுதாபத்துடனும் மோஹனாங்கியை வினவினேன்.

"விரோதியா? இல்லை; நான் உம்முடைய விரோதியல்லேன். ஆனால், உம்முடைய சிநேகிதியாக நான் இருக்கவேண்டு மென்று இன்னமும் நீர் என்னைக் கேட்டுக் கொள்ள வில்லையே?'' என்று புன்சிரிப்போடு மோஹனாங்கி கூறினாள்.

இவ்வார்த்தைகளினால், மோஹனாங்கியின் சுபாவம் இத்தகைய தென்பதையும், அவளுடைய குணாதிசயங்கள் இத்தகைய வென்பதையும் நான் நன்கறிந்து கொண்டேன். பிறர் தன்னைப் புகழ்வதையும், பிறர் தன்னிடம் அடங்கி நடப்பதையும் தனக்கொரு பெரிய கௌரவமாகவும் மதிப்பாகவும் கருதும்

இயல்புடையவள் அவள் என்பது, எனக்கு அங்கையில் நெல்லியென விளங்கிற்று. நான் அவளைச் சிறிதும் பொருட்படுத்த வில்லை என்பதையும் அவள் நன்கறிந்திருக்கிறாள் என்பதும் எனக்கு இனிது புலப்பட்டது. திருச்சியிலுள்ள மற்றவர்களை அவள் எவ்விதம் தன் அதிகாரத்திற்கும் ஆக்கினைக்கும் உட்பட்டு நடக்கும்படி செய்துகொண் டிருக்கிறாளோ, அவ்விதமே என்னையும் தன் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்கும்படி செய்து விடவேண்டுமென்பது அவளுடைய முக்கியமான நோக்கமாகும். இந்த நோக்கத்தை அவள் பூர்த்தி செய்து கொள்ளும்படியான விதமாய் இப்போது நான் நடக்க வேண்டியவனானேன்.

ஆ! ஆசை வெட்கமறியுமா? 'அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்?' காதல் பெருமை சிறுமையைக் கருதுமா? காந்திமதியின் நிமித்தம் நான் என்னுடைய சுதந்தரவுணர்ச்சியையும், தற்பெருமையையும் அடியோடு ஒழித்து விட்டு, மோஹனாங்கிக்கு அடிமையானேன். அவளுடைய காலில் விழுந்தாவது, என்னையே காந்திமதிக்கு வைத்தியம் பார்க்கும்படி சிபார்சு செய்ய வேண்டும் என்று அவளைக் கேட்டுக் கொள்ளுவதாகத் தீர்மானித்தேன்;—தீர்மானித்தபடியே நான் செய்தேன். கடைசியில் கூற்றினுங் கொடிய அவளுடைய மனம், ஒரு சிறிது இளக ஆரம்பித்தது.

"வைத்தியரே! உம்முடைய விருப்பத்தை நான் கெடுப்பானேன்? காந்திமதிக்கு நீரே வைத்தியம் செய்யும்." என்று மோஹனாங்கி என்னிடம் கூறி, ஒரு சிபார்சுக் கடிதமும் கொடுத்தாள். நான் அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சபாநாயகத்தின் மாளிகைக்குச் சென்றேன்.

ஐந்தாம் அதிகாரம்
சிகிச்சை செய்து குணப்படுத்தல்

" கருஞ்சிரங்கு வெண்டொழுநோய் கல்வளி காயும்
பெருஞ்சிரங்கு பேர்வயிற்றுத் தீயார்க்கு—அருஞ்சிரம
மாற்றி யூணீத்தவை தீர்த்தார்—அரசராய்ப்
போற்றி யூணுண்பார் புரந்து.—ஏலாதி

வைத்தியனுடைய தொழில் எவ்வளவு பொறுப்புள்ளதும் கடினமானதுமான தொழில் என்பதையும், அத்தொழில் செய்பவன் எவ்வளவு இளகிய நெஞ்சையும் கடின மனத்தையும் ஒருங்கே பெற்றவனுய் இருக்கவேண்டி யிருக்கிறதென்பதையும், சாதாரண ஜனங்கள் பெரும்பாலும் அறியார்கள். உண்மையான வைத்தியன், நோயாளி படுத்திருக்கும் அறையினுள் நுழைந்தவுடன், இன்னதென்று புலப்படுத்த முடியாத ஒருவித உணர்ச்சி அவன் மனத்தில் எழுகின்றது. சாதாரண ஜனங்களுக்கு இயல்பாயுள்ள மனப் போக்குகளையும், ஆவல்களையும் அவன் தன்னிடம் எழவொட்டாமல் தடுக்கவேண்டியவனுகின்றுன். காதல், அன்பு, இவைகளை அந்த இடத்தில் அவன் மறந்துவிடவேண்டியவனுயிருக்கிறுன். மற்றவர்கள் பாராட்டும் துக்கமும் துயரமும் அவன் மனத்தை நிலைகுலையச் செய்தபோதிலும், அவற்றுல் அவன் மனத்தளர்ச்சி யுறுமலும், அவற்றிற்குத் தன் மனத்தில் இடங்கொடாமலும், ஸ்திரபுத்தியோடும் மனேதிடத்துடனும் சிகிச்சை

செய்யவேண்டியவனாகிறான். நோயாளியின் அறைக்குள் நுழையும்போதே, அவன் அமைதியோடும் நுட்பமான மதியோடும் இருக்கவேண்டுவது அவசியமாகிறது. நோயாளியின் சரீர நிலைமையும், நோயாளியைச் சுற்றியுள்ள புறப்பொருள்களும் அவனுடைய மனத்தைக் கவருமாயின், அவன் தன்னுடைய தொழிலை முறைப்படி செய்வதற்கு அசக்தனாகிறான். நோயாளி, வயோதிகப் பருவமாயினும், வாலிபப்பருவமாயினும், பேரழகு வாய்ந்தவளாயினும், அங்கவீன முடையவளாயினும், நற்குணவதியாயினும், தீக்குணமுடையாளாயினும்,—அவைகளைப் பொருட்படுத்தாமலும், கவனியாமலும்,—'மானுடஜன்மம் படும் கஷ்டத்தை மானுட அறிவினால் நீக்கவேண்டும்' என்னும் மானுட இரக்கம் ஒன்றையே குறியாகக்கொண்டு வைத்தியன் சிகிச்சை செய்யவேண்டியவனாகின்றான். இன்னும் அரை நிமிஷத்தில் நோயாளிக்கு உயிர் போகும் என்று தனக்கு நன்றாய்த் தெரிந்திருந்த போதிலும், அவ்வுண்மையை வெளியிடாமல், அந்த நிமிஷத்திலும் தன்னுடைய சிகிச்சையை மிகுந்த சாமர்த்தியத்துடன் செலுத்தி, விதியுடனும் நமனுடனும் போர்புரியும்வைத்தியன் எவ்வளவு மனோதிடமும் நம்பிக்கையும் உடையவனா யிருக்கவேண்டும்? அவன் செய்யும் காரியம் எவ்வளவு பொறுப்புள்ளதாயிருக்க வேண்டும்?

நான் காந்திமதிக்கு வைத்தியம் பார்ப்பதற்காக அவளுடைய வீட்டிற்குச் சமீபத்திற் சென்றபோது, அவள் வீட்டிற்கு எதிரில் ஜனங்கள் கும்பலாய் நின்று பேசிக்கொண் டிருந்தார்கள். நான் சிறிதுநேரம் தெருவாயிற்படியிலேயே நின்றேன்.

"என்னைப் பேசாமல் விட்டுவிடுங்கள். நான்

அங்கே வரமாட்டேன். ஆ! இவ்விடத்தில் காணப்படும் காட்சிகள் எவ்வளவு அழகாயும் மனோரம்மியமாயும் இருக்கின்றன. இங்கே இருக்கும் கனி மரங்களும், புஷ்பச் செடிகளும், மலர்க் கொடிகளும் இதற்குமுன் நான் காணாதவைகளாய் இருக்கின்றனவே? ஆ! எவ்வளவு மந்தகாசமான காற்று! சுகந்தமான நறுமணம்! ஆ! இந்த ஆற்றில் ஜலம் பால்போல் வெளுத்திருக்கின்றதே? ஒரு சமயம் பாலாகவே இருக்குமோ? வாயில் ஊற்றினால் பாலைப்போன்ற ருசியும் மணமும் இருக்கின்றதே? காராவின் பாலும் இதற்கு இணையன்று. [சிறிதுநேரம் மௌனம்] ஆஹா! இச்சயனக்கிருகம் எவ்வளவு அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது? இன்னிசையோடு கூடிய பாட்டுகள், என் செவியில் அமிர்த மழை வருஷிப்பதுபோல் நுழைகின்றனவே? ஆ! நான் அங்கே பார்த்த கட்டழகன் இங்கே வந்து என் பக்கத்தில் வீற்றிருக்கின்றாரே. இவர் இங்கே எவ்விதம் வந்தார்? இவர்தானே என் மனத்தைக் கொள்ளைகொண்டவர்? [மௌனம் சிறிது நேரம்] ஓ! இஃதென்ன பயங்கரமான காட்சி? இந்த மனிதர்கள் நெருப்பின் மத்தியில் நடந்து செல்லுகின்றார்களே. இவர்களுடைய சரீரம் முழுவதும் தீயினால் எரிந்துகொண் டிருக்கும்போது இவர்கள் எவ்விதம் உயிரோடு இருக்கின்றார்கள்? பேரிடியும் பெருமழையும் பயங்கரமான காற்றும் கண்ணைப் பறிக்கும்படியான மின்னலும் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டுக்கொண்டு தத்தம் ஆற்றலைச் செலுத்துகின்றனவே! இவைகளுக்கு இடையில் நான் எவ்வாறு அச்சமற்றிருப்பேன்? ஆ! என்னை யாரோ தூக்கிக் கொண்டு போகின்றார்களே! என் செய்வேன்? [சிறிது நேரம் மௌனம்] சரி; இருக்கட்டும், நீங்கள் எல்

லோரும் அப்புறம் செல்லுங்கள்.'' என்று உரத்த குர லுடன் பேசிய சத்தம் வீட்டிற்குள்ளிருந்து வந்தது.

அங்கிருந்தவர்கள் ஒருவரோடொருவர் ஆச்சரியத் துடனும், அச்சத்துடனும் பேசிக்கொண்டார்கள். சங்கதி யாதென அவர்களை விசாரித்தபோது காந்தி மதியே அவ்விதம் பேசுகிறாள் என்றும் ஜன்னிபிறந்து விட்டதால் வாய்க்குவந்தபடி அவள் புலம்புகிறாளென் றும் அவர்கள் சொன்னார்கள். காந்திமதியின் வியாதி யாதென்பதையும், அவள் இவ்விதம் புலம்பினதற்குக் காரணம் யாதென்பதையும் நான் அறிந்துகொண்டேன்.

நான் 'சரவண விலாஸம்' என்னும் பெயருடைய மாளிகைக்குச் சென்று நோயாளியைப் பார்த்தவுடன், எனக்கு ஒருவிதமான அச்சமுண்டாயிற்று. பழைய சம்பவங்கள் என் ஞாபகத்திற்குவந்தன. முன்பு குலாம் காதிறு எந்த அறையில் எந்த இடத்தில் எந்தவிதமாய், நான் அவருக்கு வைத்தியம் பார்க்கும்பொருட்டுச் சென்றபோது, படுத்திருந்தாரோ அதே அறையில் அதே இடத்தில் அதேவிதமாய்ச் சிவகாமியின் புத்திரி காந்திமதி படுத்திருந்தாள். அவ்விதம் அவள் படுத் திருந்தது எனக்குப் பேராச்சரியத்தையும் அச்சத்தை யும் விளைவித்தது. குலாம்காதிறுவின் மரணசம்பவமும், அவன் உயிர் நீங்கியபோது அவனுடைய குழந்தைகள் அழுது புலம்பிய பரிதாபமான காட்சியும், என் கண் முன் தோன்றின. நான் சிறிதுநேரம் நோயாளியாகிய காந்திமதியைக் கூர்ந்து கவனித்தபடியே மெய்மறந்து நின்றேன். ஆனாலும், காந்திமதியைக் குணப்படுத்தி விடலாம் என்னும் நம்பிக்கை மாத்திரம், எக்காரணம் பற்றியோ, எனக்குப் பலமாய், அவளை நோக்கிய போதே ஏற்பட்டுவிட்டது.

"ஜுரம் முதன் முதல் எப்போது கண்டது? இதற்குமுன் இம்மாதிரியான ஜுரம் வந்ததுண்டா?" என்று நான் சிவகாமியை வினவினேன்.

"நேற்று மாலை ஏழுமணி வரையில் காந்திமதி சுகமாய்த்தா னிருந்தாள். பின்புறமுள்ள தோப்பில் நெடு நேரம் வரையில் நேற்று மாலையில் உட்கார்ந்து படித்துக்கொண் டிருந்தாள். தோப்பிலிருந்து வீட்டுக்குள் வந்தபோது 'அம்மா! எனக்குத் தலைவலி அதிகமிருக்கின்றது. ஏதோ ஒருவிதமான மயக்கம் எனக்குண்டாகிறது.' என்று சொல்லிக்கொண்டே வந்து கட்டிலிற் படுத்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஜுரம் வந்து விட்டது." என்று சிவகாமி பதில் உரைத்து, "இதற்கு முன் இம்மாதிரியான ஜுரம் அவளுக்கு வந்ததே இல்லை." என்று மீண்டு வற்புறுத்திக் கூறினாள்.

"இதற்கு முன் இம்மாதிரியான மயக்கம் வந்ததுண்டா?" என்று மீண்டும் நான் வினவினேன்.

"இல்லை; வந்ததே இல்லை. அந்திப் பொழுதில் தோப்பில் நெடுநேரமாக வாசித்துக்கொண் டிருந்ததால், களைப்புற்று ஒருசமயம் மயக்கம் வந்திருக்கக் கூடுமென்று நான் நினைத்தேன். நான் நினைத்தபடியே சுமார் ஒரு மணிநேரம் சென்ற பிறகு, மயக்கம் நீங்கிப் பேசினாள். பிறகு சிறிது ஆகாரம் கொடுத்தேன். ஜுரம் மாத்திரம் கடுமையாக இருந்தது,—ஆனால் அயர்ந்துறங்கினாள். நாளையதினம் ஜுரம் சௌக்கியமாய் விடுமென்று நினைத்து நானும் ஒருவாறு தைரியமாயிருந்தேன். ஆனால் அதிகாலையில், —சுமார் மூன்றுமணி இருக்கும்,—நித்திரை செய்துகொண் டிருந்தவள் திடீரென்று வாய்விட்டுக் கதறினாள். தானாகவே அழுவதும், பேசுவதும், சிரிப்பதுமாக

அது முதல் இருக்கின்றாள். நான் என்ன கேட்ட போதிலும் பதில் சொல்லாமல் மௌனம் சாதிக்கிறாள். சிற்சில சமயங்களில் அவளுடைய கண்கள் ஒருவிதமாய்ச் சுழல்கின்றன; உடல் நடுங்குகிறது.'' என்று சிவகாமி பதில் கூறினாள்.

நோயாளிக்குச் சமீபத்தில் சென்று, நான் அவளுடைய இடக்கையைப் பிடித்துத் தாது பார்த்துவிட்டுக் கண்களையும் முகத்தையும் கூர்ந்து கவனித்தேன். அன்று தோப்பில் நான் பார்த்தபோது ஒருவகையான இன்பத்தையும சந்தோஷத்தையும் எனக்குக்கொடுத்த அவளுடைய முகம்,—என்னைக் 'காதல்' என்னும் குளிர்ந்த அக்கினியில் மூழ்குவித்த அவளுடைய முகம்,—இப்போது சகிக்கமுடியாத வருத்தத்தையும் வரைகடந்த அனுதாபத்தையும் என் மனத்தில் தோன்றச்செய்தது. நான் அவளுடைய கையைப்பிடித்தவுடன் அவள் என் பக்கமாகத் திரும்பி என்னைக் கூர்ந்து கவனித்தாள்; தானே புன்முறுவல் கொண்டாள். ஆனாலுமவளுடைய கை நடுங்கிற்று; வாய் குழறிற்று.

"அவராயிருக்க முடியுமா? அவராயிருக்கமுடியுமா? நான் விழித்துக்கொண்டாயிருக்கிறேன்? அம்மா! இவர் யார்?'' என்று நோயாளியாகிய காந்திமதி மிக இளைந்த குரலுடன் சிவகாமியைக் கேட்டாள்.

"குழந்தாய் பயப்படாதே! இவர்தான் ஆத்மநாதர் என்னும் பெயருடைய வைத்தியர். மோஹனாங்கி உனக்கு வைத்தியம் செய்வதற்காக இவரை அனுப்பியிருக்கிறாள்.'' என்று காந்திமதிக்குப் பதில் வந்தது.

காந்திமதி ஒருவகையான அன்புடனும் பச்சாத்தாபத்துடனும் என்னைக் கூர்ந்துநோக்கினாள். இமையாதிருந்த அவளுடைய விழிகளில் நீர்த்துளிகள் காணப்

பட்டன. நான் அவளுடைய முகத்தைக் கையினாற் றடவி, கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்தேன்.

"கண்ணே! உனக்கு உடம்பு இப்போது எவ்வித மிருக்கிறது?" என்று சிவகாமி தன் புத்திரியை வினவினாள்.

" அம்மா! இவர் என் முகத்தைத் தடவிய போது எனக்கு ஒருவிதமான உள்ளக் கிளர்ச்சி உண்டாயிற்று. என்னை இவர் விழித்த கண்களோடு கூர்ந்து நோக்கிய போது, கதிரவன் கதிரைப்போன்ற ஒரு ஜோதி என் கண்ணுக்குத் தோன்றியது. முதலில் நான் ஒருவகை யான அச்சங்கொண்டபோதிலும் இப்போது உடம்பு சிறிது குணமா யிருக்கின்றது." என்று காந்திமதி பதிலுரைத்தாள்.

காந்திமதி கூறிய இந்த மறுமொழி எனக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது. என்னை அறியாமலே எனக்கு ஏற்பட்ட மாறுதல்களையும், நான் ஆதியிற் கொண்டிருந்த கொள்கைகள் சிறிதுசிறிதாக மாறிவரு வதையும் இப்போது நான் உணர்ந்தேன். ஆ! என்னே காலத்தின் செயல்! மனிதனுடைய சிற்றறிவு இருந்த வாறு என்னே, என்னே!

சிவப்பிரகாசம் முதன் முதல் காதலைப்பற்றியும் இல்லற தருமத்தைப்பற்றியும் மிக விரிவாய்க் கூறிய போது அவருடைய வார்த்தையில் நம்பிக்கை யில்லாத நான், இப்போது 'காதல்' என்பது ஒன்று நிச்சயமா யிருக்கிறதென்றும், அது மிகுந்த ஆற்றலுடைய தென் றும் அறிந்தேன்,—அறிந்தது மாத்திரமா? இல்லை உள்ளபடியே உணர்ந்தேன். குலாம்காதிறு மனோ வசியத்தைப் பற்றியும் ஆத்மக்காட்சியைப் பற்றியும் இன்னும் இவைபோன்ற பல அரிய விஷயங்களைப்பற்றி

யும் பிரசங்கம் செய்தபோது 'அவன் பொய்யன்' 'உலகை வஞ்சிப்பவன்' 'பைத்தியம் பிடித்தவன்' என்று அவனை இகழ்ந்து பேசினேன்? ஆனால் இப் போதோ அவனுடைய கொள்கைகளிலும் சிறிது உண்மையிருக்கிறதென்பதை அறிந்தேன்.

"நோயாளிகளைக் கண்ணினால் பார்ப்பதினாலும், அவர்களுடைய சரீரத்தை மேலிருந்து கீழ்நோக்கிக் கையாற் றடவி விரல் நுனிகளை உதறுவதினாலும், சில மந்திரங்களை ஜபிப்பதினாலும் நாம் வியாதியை நீக் குதல் கூடும்." என்று குலாம்காதிறு அன்றிரவு தாம் செய்த பிரசங்கத்தில் கூறியது, அப்படியே இப்போது என் ஞாபகத்திற்கு வந்தது. இதற்கு முன் மனத்தையாவது, மனோசக்தியையாவது நம்பா திருந்த நான், இப்போது அவைகளின் இருப்பில் பூரண நம்பிக்கைகொண்டேன். அதிகம் சொல்லுவானேன்? காந்திமதியை முதன் முதல் தோப்பில் சந்தித்த காட்சி யானது, இவ்வுலகத்திலுள்ள நூல்கள் போதிப்பதைக் காட்டினும், சிவப்பிரகாசத்தின் வாசாமகோசரமான பேச்சைக் காட்டினும் சுலபமாகவும், தெளிவாகவும், 'காதல்' என்பதைப்பற்றி எனக்குப் போதித்தது. இரண்டாம் முறையாகக் காந்திமதியை, அவள் நோயினால் வருந்திய சமயத்தில், நான் சந்தித்த போது, "மனம்" "மனோசக்தி" "ஆத்மக்காட்சி" இவைகளைப் பற்றி எவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவும் தெரிந்து கொண்டேன். ஆகவே சிவப்பிரகாசத்தின் போதனைசக்தியைக் காட்டி லும், குலாம்காதிறுவின் உபந்நியாச ஆற்றலைக் காட்டி லும் காந்திமதியின் சரீரத் தோற்றம்,—நான் சம்பந்தப் பட்ட மட்டில், மிகச் சிறந்ததென்பதிற் சந்தேக

முண்டோ ? நிரீசுரவாதக் கொள்கை என்னும் பாழடைந்த இருட் குகைக்குள் வீழ்ந்து கிடந்த என்னை அக்குகைக்குள்ளிருந்து மெதுவாக மேலேறி வந்து ஆஸ்திக ஞானபானுவைக் காணும்படி தூண்டியவள் காந்திமதியே.

ஜுரம் தணிவதற்கும் பலவீனம் நீங்குவதற்கும் நான் அன்று காந்திமதிக்கு மருந்து கொடுத்தேன். அன்று முதல் மூன்று நாள் வரையில் காலை மாலை இரு வேளையிலும் அவள் வீட்டிற்குச் சென்று தகுந்த சிகிச்சை செய்தேன். காந்திமதியின் வியாதி ஒருவாறு நீங்கி, அவள் பூரணமான குணமடையும் நிலைமையில் இருந்தாள். ஆனால், நான்காம் நாட்காலையில் வழக்கம்போல் வைத்தியம் பார்ப்பதற்காக நான் காந்திமதியின் வீட்டிற்குச் சென்றேன். என்னைக் கண்டதும் வேலைக்காரி வெளியில் வந்து "ஐயா! காந்திமதி ஊரில் இல்லை; அவள் நேற்றிரவு புறப்பட்டு மதுரைக்குச் சென்று விட்டாள்." என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் வருத்தமும் ஆச்சரியமும் என்னிடம் கலந்து தோன்றின. வேலைக்காரி சொன்ன செய்தியை நம்புவதற்கு என்னால் முடியவில்லை. படுக்கையை விட்டு எழுந்து சிறிது தூரம் நடப்பதற்கும் சக்தியற்றிருந்த 'காந்திமதி' மதுரைக்குப் போய்விட்டாள் என்று சொன்னால் யார் தான் நம்புவார்கள் ? நான் மாளிகையை விட்டு வெளியே வந்து எங்கு செல்வது, யாது செய்வதென்று அறியாதவனாய்த் தெருவிலேயே சிறிது நேரம் உலாவிக்கொண்டு நின்றேன். அவ்விதம் உலாவிக் கொண்டு நின்ற போது 'சரவண விலாஸ' மாளிகைக்குள்ளிருந்து ஆயுர்வேத பண்டிதர் பத்ம

நாபர் வெளியே சென்றதை நான் கண்டேன். உடனே எனக்கு உண்மை புலப்பட்டுவிட்டது. காந்திமதி மதுரைக்குச் செல்லவில்லை என்றும், மோஹனாங்கி செய்த சூழ்ச்சியினாலோ அல்லது மாஜிஸ்டிரேட் மகம்மதாலி செய்த சூழ்ச்சியினாலோ பண்டிதர் பத்மநாபர் காந்திமதிக்கு வைத்தியம் பார்க்க நேர்ந்ததென்றும் நான் ஊகித்தறிந்து கொண்டேன். கடைசியாக ஒரு யோசனை எனக்கு உண்டாயிற்று. மோஹனாங்கியைப் போய்ப் பார்த்தால் உண்மை விளங்குமென்றும், அவளிடம் விஷயங்களை விவரமாய் எடுத்துக் கூறினால் அவள் ஏதாவது ஒரு பரிகாரம் தேடுவாள் என்றும் நான் கருதி, உடனே 'பத்மவிலாஸ' மாளிகைக்குச் சென்று மோஹனாங்கியைக்கண்டு பத்மநாபர் 'சரண விலாஸ'த்திலிருந்து வெளிவந்ததையும், காந்திமதி மதுரைக்குப்போய் விட்டாள் என்று வேலைக்காரி பொய்புகன்றதையும் விவரித்துரைத்து காந்திமதி மீது நான் காதல்கொண்டிருக்கிறேன் என்றும் அவளை எவ்விதத்திலும் மணம்புரிய வேண்டும் என்றும் வியக்தமாக எடுத்துக் கூறினேன்.

"ஆத்மநாதரே! நீர் காந்திமதியின் மீது காதல் கொண்டிருப்பது உண்மையேயாயினும், அவள் உமக்கு ஏற்ற மனைவியாகாள் என்று நான் நினைக்கிறேன். அவ்விதம் நான் நினைப்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவதாக அழகும், வாலிபப்பவருமும் ஒருங்கமைந்த ஒரு வைத்தியருடைய மனைவி, திடசரீர முடையவளாயும் நோயற்றவளாயும் இருக்க வேண்டும். ஆனால், காந்திமதியோ அடிக்கடி வியாதியினால் பீடிக்கப்படுகிறாள்; அவள் சரீரமோ மிகமலினமுற்றிருக்கிறது. இரண்டாவதாக நீர் இவ்வுலகத்தை

யும் இவ்வுலகத்தில் அநுபவிக்கப்படுகின்ற சுகதுக்கங்களையும் தவிர வேறு உலகங்களாவது சுக துக்கங்களாவது, ஆத்மாவாவது, கடவுளாவது இல்லை யென்னும் கொள்கை யுடையவராக இருக்கின்றீர். காந்திமதியோ தான் அடிக்கடி சூக்கும சரீரத்தோடு பிரயாணம் செய்வதாயும், இவ்வுலகத்தினைக் காட்டிலும் சிறந்தவைகளாயும் அருமையுடையவைகளாயு முள்ள பல உலகங்களைப் பார்ப்பதாயும் சொல்லுகிறாள். காந்திமதி கடவுள் உண்டென வாதிக்கும் ஆஸ்திக மதத்தைச் சேர்ந்தவள்; நீரோ கடவுள் இல்லையென்று போராடும் நாஸ்திக மதத்தினர். இக்காரணங்களால் உமக்கு ஏற்ற மனைவி காந்திமதி அல்லள் என்று எனக்குத் தோன்றுகிறது." என்று மோஹனாங்கி கூறினாள்.

நான் பல காரணங்கள் கூறி வாதித்த பிறகு "வைத்தியரே! நான் உம்முடைய காரியத்திற்குக் குறுக்கே நிற்பதாக நினைக்கவேண்டாம். தீர ஆலோசித்து அதன் பிறகு உம்முடைய சௌகரியப்படி செய்து கொள்ளும். இருந்தபோதிலும் முதலிலே காந்திமதியை நீரே சந்தித்து உம்முடைய கருத்தை அவளிடம் தெரிவித்து அவளுடைய சம்மதத்தைத் தெரிந்து கொள்வதுநலம்." என்று மோஹனாங்கி கூறினாள். நான் "சரி; அவ்விதமே செய்கிறேன்" என்று பதில் கூறி விட்டு, அவ்விடமிருந்து நீங்கினேன். இரண்டொரு தினங்கள் கழிந்தன. காந்திமதிக்கு மறுபடியும் ஜுரம் கடுமையாக வந்துவிட்ட தென்றும், நான் போய்ப்பார்த்து அவளுக்கு மருந்து கொடுக்கவேண்டுமென்றும் மோஹனாங்கியிட மிருந்து ஒருகடிதம் வந்தது. ஒரு கணமும் தாமதியாது உடனே நான் 'சரவண விலாஸ்'த்திற்குச் சென்று சிவகாமியைச் சந்தித்தேன்.

"வைத்தியரே! குழந்தைக்கு மறுபடியும் ஜுரம் வந்துவிட்டது. நாடிகள் சரியாய்ப்பேசவில்லை என்றும், கபம் மேலோங்கி நிற்கிறதென்றும் பண்டிதர் பத்மநாபர் கூறி, இனித் தம்முடைய சிகிச்சை பயன்படாதென்றும் வேறு வைத்தியர்களைக்கொண்டு பார்க்கலாமென்றும் சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால் உம்மை அழைத்துக் காட்டவேண்டாமென்று அவரும் மகம்மதாலியும் வற்புறுத்தி யுரைத்தார்கள். ஆனாலும், முதலில் உம்மாலேயே அவள் குணமடைந்தாளாதலால், அவர்களுடைய பேச்சைக் கேட்காமல் உம்மை அனுப்பும்படி நான் மோஹனுங்கிக்குக் கடித மூலமாய்த் தெரிவித்தேன்." என்று சிவகாமி என்னைக் கண்டதும் கூறினாள்.

"தங்களுடைய புத்திரியை நான் விஷங் கொடுத்துக் கொன்றுவிடுவேன் என்று பத்மநாபரும் மகம்மதாலியும் கருதினார்களோ?" என்று நான் சிரித்துக் கொண்டே சிவகாமியை வினவினேன்.

"அவர்கள் அவ்விதம் கூறவில்லை. சரி, இருக்கட்டும்; காந்தமதி பிரக்ஞை யற்றுப் படுக்கையிற் கிடக்கின்றாள். அவளை வந்துபாரும்." என்று சிவகாமி கூறி என்னை நோயாளி படுத்திருந்த அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

நான் உள்ளே சென்று காந்திமதியைப் பார்த்தேன். அவளுடைய நெற்றியில் பற்றும், கண்களில் கலிக்கமும்போடப்பட்டிருந்தன. அவள் கண்ணைமூடியபடியே ஸ்மரணையற்றுக் கிடந்தாள். சரீரம் முழுமையும் ஒரு கம்பளியினால் போர்த்தப்பட்டிருந்தது. நான் கையைப்பிடித்து நாடி எவ்விதம் ஓடுகிறதென்று பார்த்தபோது, மூன்று நாடிகளும் தத்தம் நிலைபிறழாமலும்

ஒழுங்காகவும் ஓடிக்கொண் டிருந்தன. சிதோஷ்ண மானியைக் கட்கத்திலும் நாவிலும் வைத்துப் பார்த்தேன். சுகமான சரீரமுடையவர்களுக்கு எத்தனை 'டிகிரி' நியாயமாய் இருக்கவேண்டுமோ அத்தனை டிகிரியே காந்திமதிக்கும் இருந்தது. ஆகவே, அவளுடைய சரீரத்தில் எத்தகைய கெடுதியுமில்லை என்பதை நான் நிச்சயமாய் அறிந்துகொண்டேன். ஆனால், சரீரம் சரியான நிலையில் இருக்கும்போது அவள் இவ்விதமிருப்பதற்குக் காரணம் புலப்படவில்லை.

"கடந்த ஐந்தாறு தினங்களாய்க் காந்திமதி எழுந்து வெளியே சென்று உலாவினளா? பத்மநாபர் ஏதாவது மருந்து கொடுத்தாரா?" என்று நான் சிவகாமியை வினவினேன்.

"பத்மநாபர் ஏதோ மருந்து கொடுத்தார்; ஆனால் காந்திமதி வெளியே போகக்கூடா தென்றும் அவளுடைய சரீரத்தில் காற்றுப் படக்கூடா தென்றும் அவர் கண்டிப்பாய் உத்தரவு செய்திருந்தார்." என்று சிவகாமி பதிலுரைத்தாள்.

உடனே எனக்கு உண்மை புலப்பட்டது. சுத்தமான காற்றும், இலேசான ஆகாரமும், மனோரம்மியமான காட்சியும், சந்தோஷகரமான சம்பாஷணையும், இச்சமயத்தில் காந்திமதிக்கு அவசியம் வேண்டுமென்பதையும், அவைகளே அவளுக்குத் தகுந்த ஔஷதங்கள் என்பதையும் பத்மநாபர் அறியாதிருக்கவேண்டும்; அல்லது அறிந்திருந்தபோதிலும், வேண்டுமென்றே,—ஒருசமயம் என்னையும் அவளையும் சந்திக்கும்படி விடக்கூடாதென்னும் நோக்கத்தோடிருப்பினுமிருக்கலாம்,—அவளை வெளியே போகக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கவேண்டும் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

நான் வெந்நீரில் துணியை நனைத்துப் பிழிந்து காந்திமதியின் நெற்றியில், மரத்துண்டில் பிடித்துள்ள வச்சிரப் பசையைப்போல், பலமாய்ப்பிடித்திருந்த பற்றைத் துடைத்துவிட்டு, மெல்லிய வெள்ளைத் துணியினால் தைக்கப்பட்ட உடையை அணிந்துகொள்ளச் செய்து, அவளை மெதுவாக நடத்தி அழைத்துக் கொண்டு தோட்டத்தினுள்சென்றேன். சிவகாமி கோதுமைக்கஞ்சிகொண்டுவந்து காந்திமதிக்குக்கொடுத்தாள். கால்மணி நேரம் வரையில் தோட்டத்தின் அற்புதக் காட்சியைக்கண்டு அவள் வியந்துகொண்டிருந்தாள். நறுமலர் மணத்தோடு கலந்து வீசிய மெல்லிய பூங்காற்று அவளுடைய சரீரத்திற் படவே, அவள் ஒரு விதமான உற்சாகமும் சந்தோஷமும் கொண்டாள். உள்ளத்திற்கு உவப்பினை உண்டாக்கக்கூடிய விஷயங்களைக் குறித்து நானும் சிவகாமியும் அவளுடன் சம்பாஷித்துக்கொண் டிருந்தோம். அதன் பிறகு காந்திமதியை வீட்டுக்குள் அழைத்துவந்தோம். அன்றுமுதல் நான் பிரதி தினமும் காலை மாலை இருவேளைகளிலும் ‘சரவணவிலாஸ்’த்திற்குச் சென்று, காந்திமதியை அழைத்துக்கொண்டு தோட்டத்திற்குப் போவதும், சிறிதுநேரம் சம்பாஷித்துக்கொண் டிருப்பதும், பிறகு அவளை வீட்டிற்குள் அழைத்து வருவதுமாகச் செய்துவந்தேன். வைத்தியர்களுடைய செயற்கை மருந்தைக் காட்டிலும், இறைவனுடைய இயற்கை அமைப்பில் அமைந்திருக்கும் இயற்கை மருந்து அவளுக்குப் பூரண சுகத்தையும் தீவிர குணத்தையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய்க் கொடுத்தது. காந்திமதி நோயிலிருந்து முற்றும் விடுபட்டாள்.

ஆரும் அதிகாரம்

ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்

"கழித்திலேன் காமவெந்நோய் காதன்மை என்னும் பாசம்
ஒழித்திலேன் ஊன்கணேக்கி யுணர்வெனு மிமை திறந்து
விழித்திலேன் வெளிறுதோன்ற வினையெனுஞ் சரக்குக்
[கொண்டேன்
அழித்திலேன் அயர்த்துப்போனே னதிகைவீரட்டனரே.

[தேவாரம்.

காந்திமதியும் நானும் இவ்விதமாகத் தோப்பிற்குச் செல்லுவதும், மீண்டும் வீட்டுக்குத் திரும்புவதுமாகச் சில தினங்கள் கழிந்தன. ஆனல் இதுவரையில் என்னுடைய விருப்பத்தை வெளிப்படையாக நான் அவளிடம் தெரிவிக்க வில்லை. ஒரு நாள் அவள் மிகுந்த உற்சாகத்தோடு என்னிடம் வார்த்தையாடிக்கொண் டிருந்தபோது, நான் சமயமறிந்து, வாழைக்கனியில் ஊசிநுழைப்பது போல், என் விருப்பத்தைக் குறிப்பாக அவளிடம் தெரிவிக்கத் துணிந்தேன்.

"அன்பே! நான் உன்னிடம் ஒரு விஷயம் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்." என்று நான் காந்திமதியைநோக்கிக் கூறினேன்.

"அவ்விஷயம் யாது? அதை என்னிடம் தெரிவிப்பதற்குத் தயங்குவானேன்?" என்று காந்திமதி கேட்டாள்.

"தெரிவித்தால் என்மீது கோபங் கொள்வாயோ என்று அஞ்சுகிறேன்!" என நான் பதில் பகர்ந்தேன்.

"இல்லை நான் கோபிக்கவில்லை; சொல்லுங்கள்!" என்று காந்திமதி கூறினார்.

"கண்மணி—அன்பே—நான்—நான்—உன்னைக்-கா—காதலிக்கின்றேன்!" என்று நான் தயங்கித் தயங்கி மெதுவாகக் கூறினேன். இவ்விதம் நான் கூறிய போது, என் உடம்பு சிலிர்த்தது; நெஞ்சம் துடித்தது; வாய் குழறிற்று; கண் சுழன்றது; மெய் வியர்த்தது. காந்திமதி எதும் பதில் சொல்லாமல் ஸ்தம்பித்து நின்றாள். அவளுடைய முகம் வெளுத்தது. ஒருவித மான நாணக் குறிப்பும் அனுதாப நோக்கமும் அவளுடைய கண்களில் தோன்றின. சிறிது நேரம் பூமியை நோக்கியபடியே நின்றாள். பிறகு என்னைக் கடைக் கண்ணால் நோக்குவதும், ஆழ்ந்து சிந்திப்பவளைப் போல் ஆகாயத்தைப் பார்ப்பதுமாக அவளிருந்தாள். பதில் கூறுவதற்கு அவள் முயன்றபோதிலும், வார்த்தைகள் அவளுடைய வாயிலிருந்து வெளிப்படவில்லை. சுமார் கால்மணி நேரம் அவ்விதமிருந்தாள்.

"நண்பரே! நீரா, என்னைக் காதலிக்கின்றீர்? நீர் சொன்னது எனக்கு விளங்கவில்லையே? காதல் என்றால் என்ன?" என்று காந்திமதி என்னை வினவினாள்.

"அன்பே! காதல் என்பது ஒரு புருஷன் ஒரே ஸ்திரீயினிடத்தில் எக்காலமும் ஒரே தன்மையாகப் பாராட்டும் உண்மையான உள்ளன்பாகும். இவ்விதமே ஒரு ஸ்திரீ ஒரே புருஷனிடத்தில் பாராட்டும் உண்மை அன்புரிமையும் காதல் என்றே பெயர் பெறும்!" என்று நான் விடை பகர்ந்தேன்.

"இந்தக் காதல் முதன்முதல் எவ்விதம் உண்டாகிறது?" என்று காந்திமதி வினவினாள்.

"அழகிய சரீர உறுப்புக்கள் அமையப்பெற்ற ஒரு பருவ மங்கையை முதன் முதல் ஒரு வாலிபன் கண்ணுறும் போதும், அவ்விதமே அழகிலும் ஆண்மையிலும் சிறந்த ஒரு வாலிபனை ஒரு யுவதி கண்ணுறும்போதும், ஒருவகையான அன்புரிமை அவர்களுக்குள் ஏற்படுவதால், அழகே காதலுக்கு முக்கிய காரணம் என்று தெரிகிறது. ஆனால் குணம், தொழில், இயல்பு, கல்வி முதலியவைகளும் ஸ்திரீ புருஷர்களுக்குள் காதலைத் தோற்றுவிக்கும் இயல்புடையவா யிருக்கின்றன. இருந்தபோதிலும், தோற்றத்தினாயினும் காதலை உண்டாக்குவது அழகே யாதலால், அதனை முக்கிய காரணம் என்று நாம் கருதவேண்டி யிருக்கிறது," என்று நான்விடை இறுத்தேன்.

"நண்பரே! 'அழகு' என்பதுயாது? அஃது எவ்விதம் உண்டாகிறது?" என்று காந்திமதி உசாவினாள்.

"சரீரத்தின் வெளித் தோற்றம் பார்ப்பதற்கு இனிமையாகவும், சரீரத்தின் அவயவங்கள் பூரணமான முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் பெற்று காண்பதற்கு மிக வசீகரமாகவும் இருப்பதுதான், 'அழகு' என்று சொல்லப்படும். சரீரத்திலுள்ள உட்கருவிகள் தத்தம் வேலைகளைச் சரியாய்ச் செய்வதனாலும், அதனால் சரீரம் நோய் வசப்படாமல் நல்ல நிலைமையில் நிலைபெறுவதினாலும் 'அழகு' உண்டாகிறது." என்று நான் பதிலளித்தேன்.

"சரீரத்தில் அமைந்துள்ள உட்கருவிகள் தத்தம் வேலைகளைச் சரியாய்ச் செய்கின்றனவா என்பதையும் அவ்விதம் செய்யாதபோது நாம் செய்யவேண்டுவது

யாதென்பதையும், நோய் வசப்படாமல் சரீரத்தை நல்ல நிலையில் எவ்விதம் வைத்துக் கொள்வதென்பதையும் நாம் அறிந்து கொள்வது யாங்ஙனம்?" என்று காந்திமதி வினவினாள்.

"அன்பே! 'தேகதத்துவம்', 'சரீரக்கூறுபாடு" இவைகளைப்பற்றிக் கூறும் நூல்களைப்படித்துத்தெரிந்து கொள்ளவேண்டும்;" என்று நான் மறுமொழி பகர்ந்தேன்.

"அத்தகைய நூல்களை நான்படித்ததில்லை; இனிப் படித்தறிந்து கொள்ளவும் எனக்குச் சக்தியில்லை. உம்மாற் கூடுமானால், சுருக்கமாகச் சொல்லும். நான் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்," என்று காந்திமதி கூறினாள்.

"கண்மணி! அவ்விதமே சொல்லுகிறேன், கேட்பாயாக!* ஒரு பெரிய மாளிகையானது கல், மண், சுண்ணாம்பு, சேறு, மரம், இரும்பு முதலிய பொருள்களின் உதவியினாலும், அவற்றுட் சிலவற்றின் சேர்க்கையினாலும், கட்டப்படுதல் போல, சரீரமானது எலும்பு, தோல், நரம்பு, இரத்தம், சுக்கிலம், சதை, மூளை என்னும் ஏழு தாதுக்களின் சேர்க்கையால் அமைக்கப்பட்டிருக்கிறது. வெண்மையாயும் கடினமாயும் உறுதியாயும் மற்றத் தாதுக்களைக் காட்டினும் பெரிதாயும் இருக்கின்ற வஸ்துவே, எலும்பு என்று

---

* இவ்வதிகாரத்தில் வரும் தேகதத்துவ சம்பந்தமான விஷயங்களிற் பெரும்பாலன ஆங்கில பாஷையில் மிஸ்டர் பீல் (Beal) என்பவராலும், மிஸ்டர் டிரால் (Trall) என்பவராலும் இயற்றப்பெற்ற தேக தத்துவ நூல்களில் (Physiology) சொல்லப்படும் சிற்சில விஷயங்களைத் தழுவி எழுதப்பட்டனவாகும்.

சொல்லப்படும். மாளிகை நீடித்த நாள் நிலை பெறுவதற்கு அவசியமான சுவர்களும் அஸ்திவாரங்களும் தூண்களும் சுண்ணும்பினுலும் சேற்றினுலும் கட்டப்படுகின்றன. கெட்டியாய் இருப்பதற்காகச் சுண்ணும்பும், வெயில் காலத்தில் உலர்ந்து வெடிக்காமலிருப்பதற்காகச் சேறும் கட்டிடங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. இது போலவே சரீரத்தைத் தாங்குவதற்கும், சரீரத்தை நீடித்த நாள் நிலை பெறச் செய்வதற்கும் பெரிதும் பயன்படும் எலும்புகளும், சுண்ணும்புச் சத்தினுலும், பிசுபிசுப்பான ஒருவகைச் சத்தினுலும் அமைந்திருக்கின்றன. எலும்பிலுள்ள சுண்ணும்புச் சத்து அதற்கு உறுதியையும் பலத்தையும் கொடுக்கிறது. எலும்பில் வச்சிரம்போல அமைந்துள்ள பிசுபிசுப்பான திரவபதார்த்தம், எலும்புகள் சீக்கிரம் ஒடிந்து போகாமலும் முறிந்து போகாமலும் காக்கிறது. தவிர வீடுகட்டுகிறவர்கள் சுண்ணும்பைப் பக்குவமான நிலையில் வைப்பதற்காகச் சுண்ணும்பு குழைக்கும்போது வெல்லத்தைத் தண்ணீரிற் கரைத்து அதில் ஊற்றிக் குழைப்பதை நீ பார்த்திருக்கலாம். இது போலவே, எலும்பில் சம்பந்தப்பட்டிருக்கும் சுண்ணும்பு, பதங்கெடாம லிருப்பதற்குச் சாதகமாக எலும்பில் தித்திப்பான ஒருவகைச் சத்து கலந்திருக்கிறது. நாய் முதலிய மிருகங்கள், எலும்புகளை மிகுந்த விருப்பத்துடன் கடித்துத் தின்பதற்குக் காரணம், எலும்பில் அமைந்திருக்கும் தித்திப்பேயாகும். இரத்த நரம்புகள் ஓடுவதற்கு ஏற்ற சிறிய துவாரங்கள் இந்த எலும்பில் அமைந்திருக்கின்றன. குழந்தைகளினுடைய எலும்பில் சுண்ணும்புச் சத்து குறைந்தும், பிசுபிசுப்பான திரவபதார்த்தம் அதிகமாயுமிருப்பதால், குழந்தை

களின் எலும்புகள் சுலபமாய் வளைகின்றன. வயது முதிர்ந்தவர்களுடைய எலும்புகளில் சுண்ணும்புச் சத்தே அதிகமாக இருப்பதால் அவை வளையமாட்டா; முறிந்துபோம். மக்களுடைய சரீரத்தில் சுமார் 240 எலும்புகளுக்கு மேலிருக்கின்றன. தேகத்தில், பல நுண்ணிய கருவிகள் அமைந்திருக்கின்றன வாதலால், அவைகளுக்குக் கெடுதி நேராவண்ணம் இந்த எலும்புகள் பாதுகாக்கின்றன. எலும்பில் பெரிய துவாரங்கள் ஏற்பட்டு அவைகளின் வழியாய், மூளையிலுள்ள தித்திப்பு நீர் அளவுக்கு அதிகமாய் வெளிப்படுவதுதான் 'மதுமேகம்', 'நீரிழிவு' என்று சொல்லப்படும். இவ் வியாதி, எலும்பை உருக்கி விடுவதுமுண்டு. எலும்புகள் சரியாய்ப் பாதுகாக்கப்படா விட்டால், சரீரத்தின் மற்ற நுட்பமான கருவிகள் சீர்குலைந்து போம். ஆதலால் எலும்பினுள் கலந்திருக்கும் சுண்ணும்புச் சத்து அதிகமாய் விரயமாகாதபடியும், எலும்பினுள் அமைந்திருக்கும் சிறிய துவாரங்கள் விசாலமடையாதபடியும், நாம் பாதுகாக்க வேண்டும். போககாலத்தில் வெளிப்படும் விந்துவில், எலும்பிலுள்ள சுண்ணும்புச் சத்து அதிகமாய்க் கலப்பதால், கலவியில் ஜாக்கிரதையாயும் மிதமாயும் இருந்துவந்தால், எலும்பிலுள்ள சுண்ணும்புச் சத்து வியர்த்தமாகாமல், எலும்பு உறுதியும் பலமுமடையும். தித்திப்புப் பண்டங்களை அதிகமாய் உண்ணுமலிருந்தால் நீரிழிவு வியாதியைத் தடுக்கலாம். அதாவது இயற்கையிலேயே அதிகமான தித்திப்பு அமைந்திருக்கும் காய் கனி கிழங்குகளையும் தானியங்களையும் மிதமாக உண்ணவேண்டும். செயற்கைத் தித்திப்புப்பண்டங்களை,—அதாவது கற்கண்டு, சர்க்கரைபோன்றவைகளை,—அளவுக்கு அதிகமாய்ச் சேர்ப்

பதனால் பாதக மின்று. ஏனெனில், இயற்கைத் தித்திப்பு எவ்வளவு அதிகமாயும் தீவிரமாயும் இரத்தத்தில் கலக்கிறதோ அவ்வளவு அதிகமாயும் தீவிரமாயும் செயற்கைத் தித்திப்பு இரத்தத்தில் கலக்கிறதில்லை." என்று நான் காந்திமதிக்கு எடுத்துரைத்தேன்.

"வைத்தியரே! இவ்விதமாகவே மற்றத் தாதுக்களைப்பற்றியும் சுருக்கமாகக் கூறும்" என்று காந்திமதி கேட்டாள்.

எலும்புகளை மூடிக்கொண்டும், அவைகளைச் சுற்றிக்கொண்டும், தனித்தும் இருக்கின்ற தடிப்பான மாமிசமே சதை என்று சொல்லப்படும். இந்த மாமிசங்கள் சிவப்பாயும், வெங்காயத் தோலைப்போல் அடுக்கடுக்காயு மிருக்கும். சில மாமிசங்கள் நீண்டும் சில அகன்று மிருக்கும். நம்முடைய சரீரத்தில் அமைந்திருக்கும் சதைகள் 'தாமே இயங்கும் சதைகள்', 'மனத்தின் வழிப்பட்டு இயங்கும் சதைகள்' என இருவகைப்படும். இரைப்பை, இருதயம், குடல் முதலியசதைத் துண்டுகள் மனம் அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும் தாமே இயங்குகின்றன. நித்திரை புரியும்போதும் உண்ட ஆகாரம் ஜீரணமாவது இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். நீட்டல், முடக்கல், நடத்தலாதிய இத்தகைய தொழில்கள் சதையின் இயக்கத்தினால் நடைபெறுகின்றனவாயினும், மனம் நினைத்தாற்றான் இத்தொழில்கள் நடக்கின்றன வாதலால் சதைகளின் இந்த இயக்கம் "மன வழிப்பட்ட இயக்கம்" என்று சொல்லப்படும். நம்முடைய சரீரம், நாம் நினைக்கிறபடி இயங்குவதற்கு மாமிசத்தின் சலனம் ஒரு முக்கிய சாதனமாகும். கெட்டியாயும் பெரியதாயுமிருக்கும் எலும்புகளைத் தவிர, சிவப்பாயும் தடிப்பாயுமிருக்கும் சதை

களைத்தவிர, வேறுபலநுட்பமான மெல்லிய குழாய்களும் நமதுசரீரத்தில் அமைந்திருக்கின்றன. சுத்தமான இரத்தத்தை இருதயத்திலிருந்து சரீரம் முழுவதும் கொண்டு போவதற்கும், சரீரம் முழுவதும் பரவிக்கொண் டிருக்கிற அசுத்தமான இரத்தத்தை இருதயத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கும், இந்த மெல்லிய குழாய்கள் பயன்படுகின்றன. இருதயம் என்பது மார்பின் நடுவில் தாமரை முகையைப்போல் மேற்புறம் விரிந்தும், கீழ்ப்புறம் குவிந்தும் தொங்கிக்கொண்டிருக்கும் ஓர் அருமையான அவயவமாகும். இந்த இருதயம் தேகத்திலுள்ள மற்ற வுறுப்புகளைக் காட்டிலும்,—மூளை ஒன்றைத் தவிர,—மிக நுட்பமுடையதாகையால், நன்ருய்ப் பாதுகாக்கப்படும் பொருட்டு ஒரு மெல்லிய சவ்வுப்பைக்குள் இது வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இருதயத்தின் மேற்புற மிரண்டும் கீழ்ப்புறமிரண்டுமாக நான்கு அறைகள் இருக்கின்றன. இவ்வறைகள் தாமே மூடிக்கொள்ளுவதுந் திறந்து கொள்ளுவதுமாக எப்போது மிருந்துகொண்டிருக்கும். இருதயத்தின் இடப்புறத்தில் சுத்தமான சிவந்த இரத்தமும், வலப்புறத்தில் அசுத்தமான கரிய இரத்தமுமிருக்கும். இருதயத்தின் இடப்பக்கத்திலிருந்து ஒரு பெரிய நாடி உற்பத்தியாகிமேல்நோக்கிச்சென்று பிறகு இடப்புறமாகவே வளைந்து முள்ளந்தண்டு ஓரமாய்ப் போய் அங்கிருந்து இரண்டாய்ப் பிரிந்து இரண்டுகால்களுக்கும் போகிறது. இருதயத்திலிருந்து சரீரம் முழுதும் பரவுகின்ற சுத்தமான இரத்தம் இந்த நாடி வழியாகப்போய்த்தான் பிறகு மற்றநாடிகளில் பாய்ந்து செல்லும். இருதயத்திலிருந்து ஒரு முறை வெளியே சென்ற சுத்த இரத்தம் மறுபடியும் இருதயத்திற்குள்

வந்து சேர்ந்துவிடாமல் தடுப்பதற்காகச் சிறு கபாடங்கள் இருதயத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன. இந்தக் கபாடங்கள் இருதயத்திலிருந்து இரத்தம் வெளியே செல்லுகிறபோது தாமே திறந்துக்கொள்ளும்; பிறகு தாமே மூடிக்கொள்ளும். இருதயத்தின் வலப்புறத்தில் ஒரு பெரிய நாடி உற்பத்தியாகி நுரைஈரலுக்குப் போகிறது. நுரையீரல் என்பது மார்பிற்குக் கீழே வயிற்றின் வலப்புறமாக இருக்கும் ஓர் உறுப்பாகும். இஃது இருதயத்தைக் கௌவிக்கொண்டிருக்கும். நுரையீரலின் வெளிப்புறம் உப்பலாயும், உட்புறம் குடைவாயு மிருக்கும். நுரையீரலில் சுமார் 50 லட்சம் காற்றுக் குழாய்கள் இருக்கின்றன. இந்த அவயவத்தின் வலப்புறம் மூன்று பகுப்பாயும், இடப்புறம் இரண்டு பகுப்பாயு மிருக்கும். நுரையீரலானது கரிய சிவப்பு நிறமுள்ளதாயும், மற்ற உறுப்புகளைவிட அதிக நிறையுள்ளதாயு மிருக்கிறது. சுவாசக் குழாய்களும் இரத்த நாடிகளும் இந்த நுரையீரலுக்குள் வந்து சம்பந்தப்பட் டிருக்கும். இரைப் பையில் விழும் ஆகாரத்தை ஜீரணமாக்கிச் சுத்த இரத்தமாக அன்ன இரசத்தை மாற்றித் தேகத்தைப் போஷிப்பது இந்த நுரையீரலே யாகும். இருதயத்தின் வலப்புறத்திலிருந்து நுரையீரலுக்குப் போகும் நாடியானது தேகத்திலுள்ள அசுத்த இரத்தத்தை இருதயத்திற்குக் கொண்டு வந்துசேர்க்கும். இனி, நம்முடைய வயிறு இரண்டு துவாரங்களையுடைய ஒரு பெரிய தோற்பையினைப்போலிருக்கிறது. ஆகாரத்தை உள்ளே வாங்கிக் கொள்ளுவதற்கு ஒரு துவாரம் உபயோகப்படுகின்றது. உட்கொள்ளப்பட்ட ஆகாரத்தில் சத்து நீங்கலாக மீதமான உபயோகமற்ற கழிவுப் பொருள்

களை வெளியே கொண்டுபோவதற்கு மற்றொரு துவார மும் உபயோகப்படுகிறது. இவைகளைத் தவிர சிறுகுடல் பெருங்குடல் முதலியவைகளும் வயிற்றில் அமைந் திருக்கின்றன. மூளை என்பது நினைப்பதற்கும் அறிவ தற்கும் சாதகமாய் தலையில் அமைந்திருக்கும் ஓர் அற் புதக்கருவியாகும். அதுபனை நுங்குபோல் நீலவெண்மை யாயும் வழுவழுப்பாயு மிருக்கும். சரீரத்திலுள்ள எல் லா உறுப்புகளுக்கும் இதற்கும் சம்பந்தமுண்டு. இரத் தம் என்பது சிவந்தநிறமான ஒரு திரவப் பதார்த்தமா கும் இதுவே தேகத்திற்கு வளர்ச்சியையும் பலத்தை யும் சரீர உறுப்புகளுக்குப் புதியகிளர்ச்சியையும் கொடு க்கிறது. சுத்தமான இரத்த ஓட்டமே தேகத்திற்கு மினுமினுப்பையும் அழகையும் கொடுப்பதாகும். சரீ ரம் அழிவுறுமல் நீடித்த நாள் நிலைநிற்பதற்கு இந்த இரத்தமே முக்கியமானது. தவிர சுத்தமான இரத்த ஓட்டம் சரீரத்திற்கு அழகைக்கொடுப்பது போலவே, அழகிய சரீரத்தைக் கண்டு வியக்கும்படியும், அழ கிய பெண்களைக் கண்டபோது அவர்களை இச்சிக்கும் படியும் மனிதனைச் செய்கிறது. அதிகம் சொல்லு வானேன்? சுத்தமான இரத்த ஓட்டத்தினுல் பெண்க ளுக்கு ஏற்படும் பேரழகும், சுத்தமான இரத்தவோட்டத் தினுல் ஆண்மக்களுக்கு உண்டாகும் ஆண்மைத் தன் மையும், காம இச்சையை உற்பத்தி செய்வதற்குக் காரணமாகின்றன.'' என்று மீண்டும் நான் காந்தி மதியை நோக்கிக் கூறினேன்.

''வைத்தியரே! சரீர அமைப்பைப்பற்றி நீர் கூறிய வைகளை நான் அங்கீகரிக்கிறேன். ஆனுல் சிற்சில விஷ யங்கள் எனக்குப் பெரும் ஆசங்கைகளை விளைவிக்கின் றன. இரத்த ஓட்டமும், சுகசரீரமும், வாலிபப் பரு

வுமே காமவிச்சையை உண்டாக்குகின்றனவென்றும், அந்த இச்சையே 'காதல்' எனப் பெயர்பெறும் என்றும் நாம்கொள்ளுவோமானால், அவையெல்லாம் நீங்கும் போது காதலும் நீங்கவேண்டுமே? 'காதல்' என்பது 'ஒரு புருஷன் ஒரே ஸ்திரீயினிடத்தில் எக்காலமும் ஒரே தன்மையாகப் பாராட்டும் உண்மையான உள்ளன்பாகும்' என்று நீர் முதலிற் கூறினீரே? அதற்கும் இதற்கும் மாறுபாடு காணப்படுகிறதே? ஆதலால் அழகு, யௌவனம், சுகமான சரீரம், ஆகிய இவையெல்லாம் உண்டான காதலை மேலும் மேலும் பலப்படுத்துவதற்கு உபகரணங்களாக இருக்கக் கூடுமே தவிர, இவையே நேரிற் காதலை உண்டாக்காவென்பதும், காதலைக் கொடுப்பதும் காதலைப் பெறுவதுமான வஸ்து வேறொன்று இவற்றிலும் வேறாய் இருக்க வேண்டுமென்பதும் உமக்கு விளங்க வில்லையா?" என்று காந்திமதி கேட்டாள்.

"கண்மணி! நீ கேட்கும் கேள்வி எனக்கு விளங்கவில்லையே? வேறொரு வஸ்து இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லையே?" என்று நான் பதில் அளித்தேன்.

"வைத்தியரே! சரீர அமைப்பைப்பற்றி மிக விரிவாகக் கூறினீரே? அவ்வளவு சிறந்த சரீரம் எவ்விதம் உண்டாயிற்று? நீர் சொன்ன எலும்பு தோல் நரம் பாதிய சப்ததாதுக்களும் தாமே ஒன்று சேர்ந்து சரீரமாயிற்றா? அல்லது அவைகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து, கட்டிட வேலைக்காரன் கல் சுண்ணாம்பு முதலியவைகளைக்கொண்டு ஒரு மாளிகையை நிர்மாணம் செய்வதுபோல், ஒருவர் இச்சரீரத்தை உண்டாக்கினாரா?" என்று காந்திமதி என்னை நோக்கி வினவினாள்.

"சத்ததாதுக்களும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களின் திரிபேயாதலா லும், ஆகவே இந்த நான்கு பூதங்களின் கூட்டுறவே இச்சரீரம் என்று சொல்லுவது இழுக்காகா தாதலா லும் சரீரம் தானே உண்டானதுதான். இச்சரீரத்தை ஒருவர் சிருஷ்டித்தார் என்று நம்புவதற்கு இட மில்லை," என்று நான் மறுமொழி பகர்ந்தேன்.

"நண்பரே! நல்ல திருக்கட்டும். சரீர உறுப்பு கள் தாமே இயங்குகின்றனவா? அல்லது சரீரத்திற் குள் ளிருந்துகொண்டு ஒரு வஸ்து அவைகளை இயக்கு கின்றதா?" என்று காந்திமதி மீண்டும் வினவினாள்.

"சரீர உறுப்புகள் தாமே இயங்குகின்றன. அவைகளை வேறொரு வஸ்து இயக்குகிற தென்பது பொருந்தாது." என்று நான் பதில் கூறினேன்.

"நண்பரே! அறிவற்ற சடப்பொருள்களான நில மும், நீரும், நெருப்பும், காற்றும் தாமாகவே ஒன்று சேர்ந்து எலும்பு, தோல், நரம்பாதிய ஏழு தாதுக்க ளாகத் திரிந்தன வென்றும், அவற்றின் சேர்க்கையே உடம்பு என்றும் தாம் கூறியதே யுக்திக்கும் அனுப வத்திற்கும் பொருந்தியதாக இல்லை. இந்த சப்ததாதுக் களாற சமைந்த சரீரத்தின் உறுப்புகள் தாமே இயங்கு கின்றன வென்று நீர் கூறுவது, அறிவிற் பொருத்த மற்றதாக இருக்கின்றது. சடப்பொருள்களின் சேர்க் கையில் அறிவு நிகழுமா? ஒருகால் நிகழுமென்றே வைத்துக்கொண்ட போதிலும், அறிவது அறிவுடைய பொருளா யிருக்க வேண்டுமே தவிர அறிவற்ற சடப் பொருளாக இருக்க முடியாது" என்று காந்திமதி சொன்னாள்.

"அப்படியானால் உன்னுடைய கொள்கை என்ன?"

என்று காந்திமதியை நான் இடை மறித்துக் கேட்டேன்.

"சரீரத்திற் குள்ளேயே சரீரத்திற்கு வேறுய், ஆன்மா என்று சொல்லப்படும் சேதன அறிவுப் பொருள் ஒன்று இருக்கிறது. அது இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்று குணங்களையும் இயல்பாக வுடையது. சரீரத்திற் குள்ளிருக்கும் அந்த ஆன்மா ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினுல் சரீர உறுப்பு கள் அக்காரியத்தைச் செய்கின்றன. ஆன்மா அறிய விரும்பினுல் மனம் அறிகிறது. இப்படியே ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஆன்மாவினுலே சரீரத்தில் நிகழ்கின்றது. 'சரீரமாகிய பம்பரத்தை ஆன்மாவாகிய ஜாலவித்தைக் காரன் தன்னுடைய இச்சையாகிய கயிற்றினுற் கட்டி ஆட்டுகின்ருன்' என்பதே ஆன்ரேருடைய கொள்கை யாகும். இது பற்றியே 'ஆசைக்கயிற்றில் ஆடும் பம்பரம்' என்று நமது முன்ஞேர்கள் கூறினுர்கள். ஆதலால் நீர் சொன்னது பொருத்த மற்றதாய் எனக்குத் தோன்றுகிறது." என்று காந்திமதி உரைத்தாள்.

"நீ எதை வேண்டுமோனுலும் சொல்லு. கடவுள் ஒருவர் உண்டென்பதையும், ஆத்மா ஒன்று உண்டென் பதையும் இதுவரையில் நான் நம்பவில்லை; இனியும் நம்பேன்." என்று நான் கூறினேன்.

"வைத்தியரே! இருக்கட்டும்; இவ்விஷயங் களைக் குறித்து மற்ெருரு சமயம் உம்மிடம் விரிவாகப் பேசி உம்மை நம்பும்படி செய்கிறேன்." என்று காந்தி மதி சபதம் செய்தாள்.

சிறிது நேரங்கழித்து நானுங் காந்திமதியும் தோப்பிலிருந்து நீங்கி மாளிகைக்குள் சென்ருேம்.

ஏழாம் அதிகாரம்

சிறையிலகப்பட்டு சிந்தை கலங்கல்

"அணியார் பொழில் சூழரங்க நகரப்பா
துணியேன் இனி நின்னருளல்ல தெனக்கு
மணியே மணிமா மாணிக்கமே மதுசூதா
பணியா யெனக்கு உய்யும்வகை பரஞ்சோதீ."

—பெரிய திருமொழி

மறுநாட் காலையில் நான் காந்திமதியைச் சந்திப்பதற்காகச் 'சரவண விலாஸ' மாளிகைக்குச் சென்றேன். சிவகாமியை மாத்திரம் கண்டேன். மாளிகையில் வேறு எவரும் காணப்படவில்லை.

"அம்மா, ஏன் முகவாட்டத்துடன் இருக்கின்றீர்கள்? காந்திமதி எங்கே?" என்று நான் சிவகாமியை வினவினேன்.

காந்திமதியின் அன்னை ஏதும் பதில் சொல்லாமல் தேம்பித் தேம்பி அழுதாள். பிறகு ஒருவாறு அவளைச் சமாதானப்படுத்தி விஷயம் யாதெனக் கேட்டேன். படுக்கையில் சயனித்திருந்த காந்திமதியைக் காணவில்லை என்றும், இரவு இரண்டு மணிக்கு அவள் தன்னை எழுப்பித் தாகத்திற்குக் கேட்டாள் என்றும், ஆதலால் இரண்டுமணிக்குப் பிறகே அவள் காணமற்போயிருக்க வேண்டுமென்றும், மாளிகையின் தெருவாயிற் கதவும் பின்புறத்துள்ள வாயிற் கதவும் உட்பக்கம் தாளிட்டபடியே இருக்கும்போது அவள் காணமற் போனது

ஆச்சரியத்தை விளைவிக்கிறதென்றும், சிவகாமி என்னிடம் கூறினாள்.

"உறையூர்க் கிராமத்திற்கு ஒருசமய மவள் போயிருப்பாளோ?" என்று நான் சந்தேகத்தோடு உசாவினேன்.

"இல்லை; உறையூர்க் கிராமத்திற்கு நாங்கள் ஆள் அனுப்பி விசாரித்தோம். காந்திமதி அங்கே வரவில்லை என்று செய்திவந்து விட்டது" என்று சிவகாமி பதில் சொன்னாள்.

"நேற்றிரவு வீட்டில் யாரார் படுத்திருந்தார்கள்?" என்று நான் வினவினேன்.

"நானும், காந்திமதியின் தந்தையும் காந்திமதிக்குச் சமீபத்திலேயே படுத்திருந்தோம். விளக்கு மங்கலாகப் படுக்கை அறையில் எரிந்துகொண் டிருந்தது. தெருவாயிற்படியில் தோட்டக்காரன் வழக்கம்போல் படுத்துக்கொண் டிருந்தான். வீட்டின் முன்புறமுள்ள 'ஹாலில்' வேலைக்காரியும், வேதவதியும் படுத்திருந்தார்கள்" என்று சிவகாமி பதிலுரைத்தாள்.

"வேதவதி எப்போதும் உங்கள் வீட்டிற்றான் படுத்துக் கொள்ளுவாளோ?" என்று நான் சந்தேகத்தோடு உசாவினேன்.

"இல்லை; வேதவதி எங்கள் வீட்டில் படுத்துக் கொள்ளுகிற வழக்கமில்லை. நேற்றிரவு அவள் என்னிடம் வந்து 'காந்திமதிக்கு உடம்பு அசௌக்கியமாயிருப்பதால் நீ போய் அவள் வீட்டில் படுத்துக் கொள்' என்று மோகனாங்கி தனக்குக் கட்டளையிட்டதாகக் கூறினாள். நான் அவளை ஹாலில் படுத்துக் கொள்ளும்படி சொன்னேன்" என்று சிவகாமி எனக்கு விடையளித்தாள்.

"காந்திமதியின் தந்தை சபாநாயகம் எங்கே?" என்றுநான் காந்திமதியின் அன்னையைக் கேட்டேன்.

"காந்திமதியைத் தேடிப் பார்ப்பதற்காக வெளியிற் போயிருக்கின்றார். காந்திமதி காணமற்போன விஷயத்தைப் போலீஸில் எழுதிவைக்க வேண்டுமென்றும் சொல்லிக்கொண் டிருந்தார்" என்று சிவகாமி பதில் புகன்றாள்.

"காந்திமதி காணமற் போன விஷயமாய் வேதவதியை ஏதாவது கேட்டீர்களோ?" என்று நான் உசாவினேன்.

"கேட்டோம்; தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும், வேலைக்காரி சொன்னபிறகே தனக்குக் காந்திமதி காணமற்போன விஷயம் தெரியுமென்றும் வேதவதி கூறினாள்" என்று சிவகாமி உரைத்தாள்.

இப்போது எனக்கு உண்மை ஒருவாறு புலப்பட்டது. மோகனாங்கி மகம்மதாலி இவர்கள் இருவருடைய சூழ்ச்சியினாலேயே காந்திமதி காணமற்போயிருக்கிறாள் என்றும், வேதவதி இவர்கள் இருவருக்கும் ஒற்றுமையாயிருந்து காந்திமதியை வெளிப்படுத்தியிருக்கிறாள் என்றும் நான் ஊகித்தறிந்து கொண்டேன். எந்த விதத்திலும் காந்திமதியைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று நான் ஒரு சபதம் செய்து கொண்டேன். சிவகாமியிடம் விடை பெற்றுக்கொண்டு உடனே நான் 'சரவண விலாஸ' மாளிகையிலிருந்து நீங்கி மோகனாங்கியின் வாசஸ்தலமாகிய 'பத்ம விலாஸ' மாளிகைக்குச் சென்று மோகனாங்கியைச் சந்தித்தேன்.

"வைத்தியரே! காந்திமதி காணமற் போனாள் என்று ஒரு வதந்தி உலாவுகின்றதே? அது வாஸ்

தவந்தானு?" என்று மோகனுங்கி என்னைக் கண்டவுடன் கேட்டாள்.

"ஆம்; வாஸ்தவந்தான். அவளை நாம் எவ்விதமாகவாவது கண்டுபிடிக்க முயலவேண்டும்" என்று நான் சொன்னேன்.

"அவளை நாம் எவ்விதம் கண்டுபிடிக்க முடியும்? அவள் ஒருவிதமான மனப்போக்குடையவள் என்று முன்னமே நான் உமக்குச் சொல்லி யிருக்கின்றேன். அவள் தானுகவே புறப்பட்டு எங்கேயாவது ஓடியிருக்க வேண்டுமே தவிர அவளை வேருருவர் களவாடியிருக்கக் கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை" என்று மோகனுங்கி கூறினுள்.

மோகனுங்கி பேசிய மாதிரியிலிருந்து காந்திமதி காணுமற் போன விஷயத்தில் அவளுக்கு அனுதாபமாவது வருத்தமாவது சிறிதுமில்லை என்பதை நான் அறிந்துகொண்டபடியால், அவளிடம் உரையாடுவதாற் பயனில்லை என்று கருதி அவளிடம் விடை பெற்று நீங்கினேன். பிறகு அன்று பகல் முழுதும் பற்பல இடங்களில் காந்திமதியைப் பற்றி விசாரித்தேன்; ஆனுல் பயனில்லை. இரவு எட்டுமணிக்குமேல் மாஜிஸ்டிரேட் மகம்மதாலி வீட்டிற்குச் சென்றேன். அவர் வீட்டில் இல்லை என்றும், ஏதோ அவசர காரியமாய் ஜெயில் கட்டிடத்திற்குச் சென்றிருக்கிருரென்றும் வேலைக்காரன் சொன்னதினுல் நான் அறிந்துகொண்டேன். இரவு எட்டு மணிக்கு மேல் சிறைச்சாலைக் கட்டிடத்தில் மாஜிஸ்டிரேட்டிற்கு என்ன வேலை இருக்கக் கூடுமென்று எனக்கு ஒரு சந்தேக முண்டாயிற்று. நான் ஒரு நிமிஷமும் தாமதியாமல் உடனே ஜெயில் கட்டிடத்திற்குச் சென்றேன்.

"ஜெயில் கட்டிடத்திற்குள் இந்நேரத்தில் யார் வருகிறது?" என்று வாயிற்காப்போன் அதிகாரத் தோடு உசாவினான்.

"மாஜிஸ்டிரேட் மகம்மதாலி ஓர் இரகசியமும் அவசரமுமான காரியத்தை முன்னிட்டு என்னை வரச் சொன்னார். நான் அவரிடம் செல்லுகிறேன்" என்று நான் கம்பீரமாய்ப் பதில் கூறினேன்.

நான் சமயோசிதமாகக் கூறிய தீங்கற்ற இப்பொய் யுரையானது ஜெயிற் கட்டிடத்திற்குள் தாராளமாய் நுழைவதற்கு எனக்கு இடங்கொடுத்தது. நான் கட்டிடத்திற்குள் நுழைந்து கைதிகள் இருக்கும் ஒவ்வோர் அறையையும் பார்த்துக்கொண்டே சென்றேன். மாஜிஸ்டிரேட் காணப்பட்டாரில்லை. கடைசியாக ஜெயிலின் பின்புறத்தில் மற்றக் கட்டிடங்களோடு சம்பந்தப் படாமல்தனிமையாகக் கட்டப்பட்டிருந்த ஓர் அறைக்குள் விளக்கு மங்கலாகப் பிரகாசித்துக்கொண் டிருந்தது. நான் அந்த அறைக்குள் யாரிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் பொருட்டு காலோசை கேட்காமல் மெதுவாக நடந்துசென்று, மறைவாக நின்று, எட்டிப் பார்த்தேன். ஓர் ஆண் உருவம் முதலில் என் கண்ணுக்குத் தென்பட்டது. கூர்ந்து கவனிக்கவே மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் உருவமே அவ்வுருவமென்பதை அறியலானேன். அவர் அவ்வறையின் வாயிற் படிக்குச் சமீபத்தில் அறையை நோக்கியபடியே நின்று கொண்டிருந்தார். அறையின் மற்றொரு புறத்தில் ஒரு பெண் மிகுந்த துயரத்துடன் தேம்பித்தேம்பி அழுது கொண்டு நின்றாள். வேறு இரண்டு பெண்கள் அந்தப் பெண்ணுக்குத் தேறுதல் கூறிக்கொண் டிருந்தார்கள். இந்த அதிசயமான காட்சியைப் பார்த்தவுடன் இன்னும்

அங்கே என்ன நடக்கப்போகிற தென்பதை அறிந்து கொள்ளவேண்டு மென்னும் ஆவல் எனக்குள் எழுந்தது. அறையின் வடபுறமுள்ள ஒரு ஜன்னலுக்கு அருகாமையிற்சென்று அங்கிருந்த ஒரு பெரிய பூவரசுமரத் தடியில் மறைந்து நின்றேன். நான் நின்ற இடம் இருளால் சூழப்பட்டிருந்தபடியால் என்னை எவரும் பார்க்க முடியாது. ஆனால், அறைக்குள் நடைபெறும் காட்சிகளைக் கண்ணினால் பார்ப்பதற்கும் அங்கே நடைபெறும் சம்பாஷணைகளைக் காதினாற் கேட்பதற்கும் சாத்தியமாகும்படியான இடத்தில் நான் நின்றேன். சிறிது நேரம் வரையில் அறைக்குள் நிசப்தமான அமைதி குடிகொண் டிருந்தது. பிறகு மகம்மதாலியின் பேச்சுக்குரல் கேட்டது.

"ஏ! மாதர் திலகமே, என்னுடைய பரிதாபகரமான நிலைமை உன் மனத்தைச் சிறிதேனும் இளகும்படியாய்ச் செய்யாதிருப்பது, என்னுடைய துரதிர்ஷ்டமே. நான் மிகுந்த பணிவுடன் செய்துகொண்ட வேண்டுகோள் உன் செவியில் நுழையவில்லையா?" என்று மிகுந்த அனுதாபத்தோடு மகம்மதாலி கேட்டான்.

"பிரபுவே, தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லையே?" என்று மிக இளைந்த குரலுடன் அந்தப் பெண் கூறினாள்.

"மெய்த்தவ வேடம்பூண்ட மாதவத்தோரையும் மனங் கலங்கச்செய்யும் மொய்குழலாளே! கண்டார் கருத்தைக் கணத்தினிற் கவரும் கருவிழியாளே! புன்னகை தவழும் உன் மதிமுகமும் பன்னகை அணிந்த உன் திருக்கரமும் என்னை உன் பாதமலர்த் தாமரையில் வீழச்செய்தன. வேம்பின் இலைகளை மைக்குழம்

பிற் றேய்த்து மாறிவைத்தது போற்றேன்றும் புருவங் களுக்குக்கீழ் சேலனைப் பிறழ்ந்துகொண்டிருக்கும் நின் கண்கள் என் மனத்தைத் தம்கண் அகப்படுத்திக் கொண்டன. உன் பேரழகு என்னையும் என் மனத்தை யும் ‘காதல்’ என்னும் பேராழியில் அழுத்திவிட்டது. தயைசெய்து என் துயரத்தை நீக்கவேண்டும்” என்று மகம்மதாலி சொன்னன்.

“அற்பப் புழுவினும் கடைப்பட்ட என்னை இவ் வளவுதூரம் புகழ்ந்து பேசுவதும், நிலையற்ற அழகை மிகவியந்து பாராட்டுவதும் சான்றோருடைய செய்கை யாகமாட்டாது,—அதிலும் ஒரு ஸ்திரீயின் முன்னிலை யில் இத்தகைய வார்த்தைகளை ஆண்மக்கள் கூறுவார் களேயானல், அவர்களைக் கயவர்களுக்குள் தலைசிறந்த கடையர் என்றே ஆன்றோர் கூறுவார்கள்” என்று அந்த ஸ்திரீ பதில் சொன்னுள்.

அந்த ஸ்திரீயினுடைய பேச்சுக்குரலைக்கொண்டும் மங்கலான விளக்கு வெளிச்சத்தில் தோன்றிய முகச் சாயலைக்கண்டும் அந்த ஸ்திரீ யார் என்பதை நான் அறிந்துகொண்டேன். அந்த ஸ்திரீ யாரோவெனின்,— ஆ! அவளே காந்திமதி! அவளே என்னுடைய மனே நிலையை மாறச்செய்த மதிவதனி! அவளே காதற்றீயை என் இருதயத்தில் கொழுந்துவிட் டெரியும்படிசெய்த அமிர்தவசனி!

“பெண்ணே! உன்மீது எனக்கேற்பட்டுள்ள மோகத்தினல் நான் என்னுடைய அந்தஸ்தையும் உயர்ந்த உத்தியோக பதவியையும் சிறிதும் கவனியா மல் மிகுந்த பணிவுடனும் நயத்துடனும் இதுவரையில் உன்னோடு வார்த்தையாடினேன். ஆனல் நீயோ மிக அலட்சியத்துடன் என்னை நிந்தித்துப் பேசுகின்றாய்.

இனி அவ்விதம் வார்த்தையாடுவாயானால் என்னுடைய கோபத்திற்கு நீ பாத்திரமாகவேண்டும்; ஜாக்கிரதை! என்னுடைய விருப்பத்திற்கு இணங்குகின்றாயா? இல்லையா?" என்று மகம்மதாலி மிகுந்த கோபத்தோடும் அதிகாரத்தோடும் கேட்டான்.

"ஏ! கற்றறிந்த மூடனே, உன்னுடைய ஜாதிக்குப் பெரும்பாலும் இயல்பாயுள்ள துடுக்குத் தனத்தை என்னிடம் காட்டாதே. மிகுந்த அந்தஸ்துடையவனென்று உன்னையே நீ புகழ்ந்து பேசிக்கொள்ளுகின்றாயே? எந்தவிதமான அந்தஸ்து உனக்கிருக்கிறது? ஹே, மூடா! 'அந்தஸ்து' என்பது யாதென உனக்குத் தெரியுமா? சிறந்தகுணத்தினாலும் குற்றமற்ற நடத்தையினாலும் அந்தஸ்து ஒருவனுக்கு ஏற்படுமே ஒழிய தன்னைத்தானே 'அந்தஸ்துடையவன்' என்று தற்புகழ்ச்சியினால் கூறிக்கொள்வதால் அஃது ஏற்படமாட்டாது. உயர்ந்த உத்தியோக பதவியை வகித்திருப்பதாக நீ பெருமை பாராட்டுகின்றாயே? நீ வகித்திருக்கும் உத்தியோகத்திற்கு ஏற்ற நல்லொழுக்கம் உன்னிடம் தினைத்துணையாவது பொருந்தி யிருக்கிறதா? பொருந்தியிருந்தால் தகாதவிதமாய், நான் அயர்ந்த நித்திரையில் இருந்தபோது, மயக்கமருந்தை எனக்குக் கொடுத்துத் திருட்டுத்தனமாய் என்னை நீ இவ்விடத்திற்குத் தூக்கிக்கொண்டுவருவாயா?" என்று காந்திமதி ஆத்திரத்தோடு பேசினாள்.

"உனக்கு மயக்கமருந்தைக் கொடுத்து உன்னை நான் இவ்விடத்திற்குக்கொண்டுவந்தேன் என்று யார் சொன்னது?" என்று மகம்மதாலி வினவினான்.

"வேதவதி உனக்கு உளவாயும் சகாயமாயுமிருந்து இந்தத் துணிகரமான செயலைச் செய்திருக்கி

ருள். வேதவதியை நீயே நேற்றிரவு என் வீட்டிற்கு படுத்துக்கொள்ளும்படி அனுப்பினுய் என்றும், அவள் பாலில் மயக்கமருந்தை எனக்குக் கலந்துகொடுக்கவே நான் அறிவிழந்து பிணம்போற் கிடந்தே னென்றும், என்னுடைய நிலைமையை அவள் நீ அனுப்பியிருந்த ஆட்களுக்குக் குறிப்பாலறிவித்துத் தெருவாயிற் கதவைத் திறந்துவிடவே அவர்கள் என்னைத் தூக்கிக் கொண்டு வெளியே சென்றார்க ளென்றும், பிறகு அவள் கதவைத் தாளிட்டுக்கொண்டு ஏதுமறியாதவள் போல் படுத்துக்கொண்டா ளென்றும் அவள் மூலமாகவே நான் அறிந்தேன்" என்று காந்திமதி சொன்னுள்.

"வேதவதியே! நீ இவ்விஷயங்களை இவளிடம் சொன்னதுண்டா?" என்று மகம்மதாலி மிகுந்த கோபத்துடன் காந்திமதியின் பக்கலில் நின்ற இரண்டு ஸ்திரீகளுள் ஒருத்தியை நோக்கி வினவினுன்.

"எஜமானனே! அல்லாவின்மீது ஆணையிட்டு நடந்த விஷயங்களை உள்ளபடியே சொல்லவேண்டுமென்று காந்திமதி என்னை வற்புறுத்திபபடியால் நான் இவ்விஷயங்களைச் சொல்லும்படி நேர்ந்தது. ஆனுலும் உண்மைக்கு மாருக நான் ஏதும் சொல்லவில்லை" என்று மிகுந்த அச்சத்துடன் வேதவதி கூறினுள்.

"ஏ! அறிவில்லாதவளே! அல்லாவின் பெயரைச் சொன்னதால் நீ இச்சமயம் தப்பினுய்" என்று வேதவதியை நோக்கி மகம்மதாலி கோபத்தோடு கூறிவிட்டு "காந்திமதியே! உன்னுடைய நீதிபோதனையும் பிரசங்கமும் எனக்கு வேண்டாம். என் விருப்பத்திற்கிசைந்து என்னை அணைவதற்கு உனக்கு இஷ்டமுண்டா இல்லையா? அதை மாத்திரம் ஒரே வார்த்தையில் தெரி

வித்துவிடு. வீணாக வார்த்தைகளை வளர்த்த வேண்டாம்" என்று காந்திமதியைநோக்கி இன்னும் மிக்க கோபத்தோடு மகம்மதாலி கேட்டான்.

"இஷ்டமில்லை!" என்று காந்திமதி ஒரே வார்த்தையில் பதில் கூறினாள். ஆனால் அந்த வார்த்தையை அவள் எவ்வளவு கம்பீரத்துடனும் தைரியத்துடனும் உச்சரித்தாள் என்பதை இனிதறிந்துகொண்ட மகம்மதாலி சிறிதுநேரம் ஸ்தம்பித்து நின்றான்.

இதுவரையில் காந்திமதியோடு வாயினால் வார்த்தையாடிக்கொண்டிருந்த மகம்மதாலி, கோபத்தாலும் காமத்தாலும் உந்தப்பட்டவனாய், மதவெறி பிடித்தவனைப்போல் காந்திமதியின் மார்ச்சீலையைப் பிடித்திழுக்க முயன்றான்.

"ஆ! அன்பரைக் காக்கும் அன்புருவானவனே! நீயே இச்சமயத்தில் என்னை இப்பாதகன் கையினின்று விடுவிக்கவேண்டும்! என்னுடைய மானத்தை, அன்று துகில்வளர்த்துத் துரோபதையின் மானத்தைக் காத்துத் துயரத்தை நீக்கியதுபோல், இன்று நீயே காக்கவேண்டும்! அடியார்க் கெளியவனே! அல்லாதார்க்கு அரியவனே! பண்டொரு காலத்தில் 'ஆதிமூலமே' என்றலறிய கரிக்கு இடுக்கண்தீர்த்த முதற்பொருளே! இக்காரிகைக்கும் இடுக்கண்தீர்ப்பாய் பரம்பொருளே! உன்னருளன்றி எனக்குக் கதியுமில்லை! என்செய்வேன்; என்செய்வேன்! இச்சண்டாளனுடைய் கரம் என்மீது படுவதற்கு நான் யாது பாவம் புரிந்தேன்? எம்பெருமானே! உம்மிடம் முறையிடாமல் யான் வேறு யாரிடம் முறையிடுவேன்? ஏழையைக் காத்தருளும் ஐயனே" என்று காந்திமதி வாய்விட்டுக் கூவினாள்.

இதுவரையில் மறைந்து நின்று நடந்த விசேஷங்களைக் கவனித்துக்கொண்டிருந்த நான், இனி ஒரு கணமும் தாமதிக்கக்கூடாதென்றுகருதி மெதுவாக அறைக்குட்சென்று எரிந்துகொண்டிருந்த விளக்கை நிறுத்தினேன்,—மறுநிமிஷத்தில் அறைமுழுவதையும்,—ஒரே இருள் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாதபடி சூழ்ந்து கொண்டது. நான், காந்திமதியை,—ஏற்கெனவே அவள் நின்றுகொண்டிருந்த இடத்தை அடையாளமாக வைத்துக்கொண்டே ஞதலால்,—இரண்டு கைகளினுலும் அணைத்துத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தேன்; மறுநிமிஷத்தில் துப்பாக்கி ஓசை அறைக்குள் கேட்டது. அதனைக் கேட்டு மனம் திடுக்கிட்ட நான் திரும்பிப்பார்த்தேன்; அறையின்வாயிற் கதவில் பூட்டு இருந்ததைக் கண்டேன். காந்திமதியைக் கீழே விட்டுவிட்டு மிகுந்த பரபரப்புடன் அறைக் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிச் சாவியைக் கையில் எடுத்துக்கொண்டுமீண்டும் காந்திமதியைத் தூக்கிக்கொண்டு ஜெயிற் கட்டிடத்திற்கு வெளியே வந்தேன். வெளி வாயிற்படியில் நின்றுகொண்டிருந்த காவற்காரன், ஒரு பெண்மணியை நான் தூக்கிக்கொண்டு செல்வதைக் கண்டு சந்தேகங்கொண்டவனுய் என்னைப் பிடிப்பதற்கு நெருங்கினுன். நான் அவனைக் காலால் உதைத்துத் தள்ளவே, அவன் கீழே விழுந்துவிட்டான், இதுவே தகுந்த சமயம் என்று நினைத்து நான் காந்திமதியைத் தூக்கிக்கொண்டு ஜனசஞ்சாரமில்லாத வேறொரு வழியில் மிகுந்த வேகத்துடன் நடந்து சென்றேன். மகம் மதாலி இருந்த அறைக்குள் நுழைந்ததும், விளக்கை அணைத்ததும், காந்திமதியைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்ததும், பிறகு அவளைக் கீழேவிட்டுவிட்டு

மகம்மதாலியிருந்த அறைக்கதவைப் பூட்டியதும், மீண்டும் அவளைத் தூக்கிக்கொண்டு ஜெயிற்கட்டிடத்திற்கு வெளியே வந்ததும், காவற்காரனைக் காலாலுதைத்துக் கீழே வீழ்த்தியதுமாகிய இவ்வளவு காரியங்களையும் நான் சில நிமிஷங்களுக்குள் செய்துமுடித் திருக்கிறேன் என்பதைப் பிறகு அறிந்து என்னையே நான் வியந்துகொண்டேன். இவ்வளவு காரியங்களையும் அவ்வளவு சீக்கிரத்தில் எவ்விதம் நிறைவேற்றினேன் என்பதையும், அவ்விதம் நிறைவேற்றுவதற்குப் போதிய பலமும் தைரியமும் அச்சமயம் எனக்கு எவ்விதம் வந்தன என்பதையும் அறிந்துகொள்ள இன்னமும் என்னால் முடியவில்லை.

காந்திமதியைத் தூக்கிக்கொண்டு சென்ற நான் அவளைத் திருச்சியில் வைத்திருப்பது கூடாதென்று கருதினேன். அவளை ஒரு வீட்டுத் திண்ணையிற் படுக்கவைத்து அவளுடைய மயக்கத்தைத் தெளிய வைக்க முதலில் முயன்றேன். நான் திடீரென்று ஜெயிலறைக்குள் சென்று விளக்கை அணைத்ததும், அவளை அணைத்துத் தூக்கியதும் அவளை ஸ்தம்பிக்கும்படிசெய்தன. அச்சத்தால் அவள் மதிமயங்கி விட்டாள். ஆகவே, அவளை நல்லறிவுக்குக் கொண்டுவர வேண்டுவது அவசியமாயது. அவள் மயக்கம் நீங்கி எழுந்த பிறகு நான் யார் என்பதை அறிந்து கொண்டாள். ஆனால் என்னோடு நன்றாய்ப் பேசுதற்கு அவட்கு நாவெழவில்லை. அவளை நடத்தி அழைத்துக் கொண்டே வாடகை வண்டிகள் நிற்குமிடத்திற்குச் சென்றேன். அங்குச் சென்று ஒரு குதிரை வண்டியை வாடகைக்குப் பேசி நாங்கள் இருவரும் அதில் ஏறிக்கொண்டோம்.

“இப்பொழுது இந்த வண்டி எங்குச் செல்லு கிறது?” என்று காந்திமதி என்னை வினவினாள்.

“உறையூருக்குச் செல்லுகின்றது.” என்று நான் விடையளித்திட்டு, வண்டிக்காரனை நோக்கி, “அப்பா, வண்டியை உறையூர் வச்சிரபாணி வீட்டுக்கு விடு” என்று கூறினேன்.

“வச்சிரபாணி வீட்டுக்கு இந்நேரத்தில் நாம் ஏன் போகவேண்டும்?” என்று காந்திமதி என்னை வினவினாள்.

“அந்த விவரங்களை நான் பின்னர்த் தெரிவிக்கின்றேன்.” என்று நான் விடைகூறி இப்போது ஒன்றும் பேசவேண்டாமென்று அவளுக்குக் குறிப்பாலுணர்த்த வேண்டி, கையினால் வாயைப் பொத்திக் காட்டினேன். அக்குறிப்பறிந்து அவளும் பேசாதிருந்தாள். வண்டி சிறிது நேரத்திற்குள் உறையூர் சென்று வச்சிரபாணியின் வீட்டுக்கு எதிரில் நின்றது. வச்சிரபாணி, காந்திமதியைக் கண்டவுடன் ஆச்சரியமும் அன்பும் ஒருங்கு கொண்டவனாய் அவளை மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்றான். ஆனால் அவன் என்னை இதற்கு முன்பு பார்த்தவனல்லன்; நானும் அவனை முன்பு கண்டதில்லை. காந்திமதி என்னைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறிய பிறகு என்னையும் அவன் அன்புடன் வரவேற்றான். உறையூரில் அவன் வீட்டிலேயே சில தினங்களுக்கு மறைந்து வசிப்பதாக நானும் காந்திமதியும் தீர்மானித்துக்கொண்டோம்.

எட்டாம் அதிகாரம்

மகம்மதாலியின் பரிதாப நிலைமை

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச்சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற்பொருள்.—நாலடியார்.

மனிதன் எப்பொழுதும் பிறருடைய மனைவியை விரும்பலாகாதென்றும், பிறருடையமனைவியை விரும்புவதினும் கொடிய பாவம் வேறில்லை என்றும் அறநூல்கள் விதிக்கின்றன. எவனொருவன் தன்னுடைய மனைவியை விடுத்து வேறொருவனுடைய மனைவியின்மீது காம இச்சை கொள்கின்றானோ அவனை 'அச்சம்' என்னும் கொடிய பேய் இடைவிடாது வருத்திக் கொண்டேயிருக்கும். ஆதலால் அவன் அனுபவிக்கும் சிற்றின்பத்தை அவன், மனத்திலே நிகழும் அச்சத்தோடு ஒப்பிட்டு நோக்கும்போது இன்பம் தினையளவும் துன்பம் பனையளவுமாகவே இருக்கும். இவ்வளவேயோ? இம்மையில் அரசதண்டனைக்கும் மறுமையில் தெய்வதண்டனைக்கும் அவன் பாத்திரனாகின்றான். மீளா நரகத்தில் வீழ்ந்து என்றும் கொடிய துன்பத்தை அவன் அனுபவிக்கின்றான். இவ்வுலகத்திலே அவன் செய்த ஏனைய தருமங்களும், அவைகளாலவனீட்டிய புண்ணியமும் புகழும் கடலிற் கரைக்கப்பட்ட பெருங்காயம்போல வியர்த்தமாகின்றன. குடிப்பழியும், பகைமையும், இழிசொல்லும் அவனுக்கு வெகுமதிகளாகின்

றன. எவனொருவன் பணக்கொழுப்பினாலும், அதிகார வன்மையாலும் பிறருடைய தாரத்தை விரும்பி இன்ப மனுபவிக்கின்றானோ அவன் மறுபிறப்பில் பேடியாய்ப் பிறந்து நடனமாடி அதனாற் கிடைக்கும் வருவாயினால் ஜீவிப்பான் என்று அறநூல்கள் கூறுகின்றன. இன்னும் பிறன் மனைவியை விரும்புவதால் வருங்கேடுகள் பலவாகும். இவ்வுண்மையை வலியுறுத்தற்கே "அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை—நின்றாரிற் பேதையாரில்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும் அருளிச்செய்வாராயினர். இத்தகைய இழிதொழிலைப் புரிவதற்கு மாஜிஸ்டிரேட் மகம்மதாலி பிரவேசித்துவிட்டாராதலால், அவரைத் துன்பங்கள் சூழ்ந்துகொண்டமை ஒரு வியப்பாமோ?

மறுநாள் மாலையில் காந்திமதியும், வச்சிரபாணியும், நானும் உறையூரில் வச்சிரபாணி மாளிகையில் பேசிக்கொண்டிருந்தோம். முதல் நாளிரவு நானும் காந்திமதியும் திடீரென்று அவன் வீட்டுக்கு வரும்படி நேர்ந்ததற்குக் காரணம் யாதென அவன் என்னைக் கேட்டான். நான் நடந்த சங்கதிகளை விவரமாக அவனுக்கு எடுத்துக்கூறினேன். மாஜிஸ்டிரேட் மகம்மதாலி காந்திமதியின்மீது மிச மோகங்கொண்டு அவளை வலிந்து சென்று கற்பழிக்க முயன்றான் என்னும் செய்தியைக் கேட்டவுடன் அவன் மிகுந்த கோபாவேசம் கொண்டவனாய்த் தன் பற்களை நறநற வென்று கடித்தான்; அவனுடைய புருவங்கள் நெரிந்தன; கண்கள் சிவந்தன.

"அத்தகைய கொடியோனை உயிரோடு ஏன் விட்டீர்கள்? ஜெயிற் கட்டிட அறைக்குள்ளேயே அவனைக் கொன்றிருக்க வேண்டாமா?" என்று வச்சிரபாணி

மிகுந்த ஆத்திரத்தோடு உரத்த குரலுடன் என்னைக் கேட்டு விட்டு "ஆனாலும் பாதகமில்லை; அவனுடைய உயிர் என்னுடைய கைவாளுக்கு இரையாகாமலிராது" என்று மீண்டும் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

"நாம் அவனை, அண்ணா, ஏன் கொல்ல வேண்டும்? வினைக்குத் தகுந்த பலன் கொடுப்பதற்கு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் ஒருவர் இருக்கிறாரன்றோ? அவரே அவனைக் கவனித்துக் கொள்ளுவார்." என்று காந்திமதி மிக இனிய குரலோடு நவின்றாள்.

காந்திமதியின் சிறந்த குணத்தையும், இளகிய நெஞ்சையும், அறிவு முதிர்ச்சியையும் இனிது புலப்படுத்திய அவள் தன் வாய்மொழி, என்னைப் பெரிதும் மகிழ்வித்ததாயினும், அதனை நான் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் "கண்மணீ! நீ சொல்லுவது ஒரு வகையிற் பொருந்துமாயினும், பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்கிறதென்பதையும், அதனைக் கடந்து அது செல்லும்படியான கொடிய செயலை ஒருவன் செய்வானாயின் அதனைத் தடுத்து நிறுத்துவது முனிவொழித்த முனிவோருக்கும் அரிதாம் என்பதையும் நீ கவனித்தல் வேண்டும்" என்று நான் கூறினேன்.

இவ்விதமாக நாங்கள் மூவரும் வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது தபாற் சேவகன் சில கடிதங்களையும் பத்திரிகைகளையும் வச்சிரபாணியிடம்கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்றான். வச்சிரபாணி அவைகளை எல்லாம் பிரிக்காமல் அப்படியே வைத்து விட்டு ஒரு பத்திரிகையை மாத்திரம் பிரித்து மிகுந்த பரபரப்புடன் பார்க்கலானான்.

"அப்பத்திரிகையின் பெயரென்ன? அது பிர

சுரமாவது எவ்வூரில் ?" என்று நான் வச்சிரபாணியை வினவினேன்.

." தினவர்த்தமானி என்பது பத்திரிகையின் பெயராகும். இது சென்னையிற் பிரசுரமாகிறது." என்று வச்சிரபாணி பதில் கூறிவிட்டு மீண்டும் மிகுந்த கவனத்தோடு பத்திரிகையைப் பார்த்துக்கொண் டிருந்தான். சிறிது நேரங் கழித்துப் பத்திரிகையை என்னிடம் கொடுத்தான். நான் அதனை வாங்கிப் பார்க்கவே பெரிய எழுத்துக்களில் தலைப் பெயருடைய விஷயம் ஒன்று காணப்பட்டது. அது பின்வருமாறு:—

திருச்சி ஜெயிலில்

பயங்கரமான கொடுங்கொலை!

ஒருபெண்மணி துப்பாக்கியாற் சுடப்பட்டாள்!

மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் அரஸ்டு !

" நேற்றிரவு திருச்சிராப்பள்ளி ஜெயிலில் ஒரு பயங்கரமான படுகொலை நடந்ததாக திருச்சியிலுள்ள நமது சொந்த நிருபர் அனுப்பிய தந்திச் சமாசாரத்தால் அறிகிறோம். நேற்றிரவு சுமார் பத்து மணிக்குத் திருச்சி ஜெயிற் கட்டிடத்தின் பின்புறமுள்ள அறை ஒன்றனுள் திடீரென்று துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அதனைக் கேட்டு ஜெயிற் காவலாளர்கள் சிலர் ஓடிச் சென்று பார்க்கவே, அறை முழுவதும் ஒரே இருள் சூழ்ந்திருந்தபடியால், அவர்கட்கு ஒன்றும் விளங்கவில்லை. பிறகு அவர்கள் ஜெயில் மேம்பார்வை அதிகாரியிடம் தெரிவித்தார்கள். அவர் விளக்குடனும்

வேலைக்காரர்கள் சிலருடனும் சென்று பார்த்தார். அறையின் கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது. பூட்டை உடைத்துக் கதவைத் திறந்துகொண்டு அவர் உட்சென்று பார்த்தார். ஒரு பெண்மணியின் மார்பிற் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து அதனால் அவள் உயிர் துறந்து கீழே விழுந்து கிடந்ததையும், இரத்தத்தால் அவளுடைய புடைவை நனைந்திருந்ததையும், அவளுக்குச் சிறிது தூரத்தில் மற்றொரு பெண்மணி தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்ததையும், மாஜிஸ்டிரேட் மகம்மதாலி அறையின் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டிருந்ததையும் ஜெயில் மேம்பார்வை உத்தியோகஸ்தர் கண்டு அச்சமும் அதிசயமுங் கொண்டார். அவர் போலீஸாருக்கு உடனே ஆள் அனுப்பினர். போலீஸ் இன்ஸ்பெக்டர், சேவகர்கள் முதலானோர் வந்தார்கள். மாஜிஸ்டிரேட் மகம்மதாலியை இன்ஸ்பெக்டர் சிற்சில கேள்விகள் கேட்டார். ஆனால் அவர் ஏதும் பதில் சொல்லாமல் பயித்தியம் பிடித்தவரைப் போல் மிரள மிரள விழித்தார். அழுதுகொண்டிருந்த பெண்மணியைக் கேட்டதற்கு அவளும் வாய் திறந்து ஏதும் பேசாமல் முன்னையினும் அதிகமாக அழலானாள். போலீஸார் மாஜிஸ்டிரேட் மகம்மதாலியையும், அந்தப் பெண்மணியையுமரஸ்டு செய்திருக்கிறார்கள். ஜெயில் கட்டிடத்தின் வாயிற் காப்போன், ஒரு மனிதன் ஒரு பெண்மணியைத் தூக்கிக்கொண்டு நேற்றிரவு பத்து மணி சுமாருக்கு ஜெயிலுக்குள்ளிருந்து வெளியே சென்றான் என்றும், அவனை தான் தடுக்கவே அவன் தன்னைக் காலால் உதைத்துக் கீழே தள்ளிவிட்டு ஓடிப் போய்விட்டான் என்றும் சொல்லுகிறான். இவனைத் தவிர வேறு எவரும் சாட்சியம் சொல்ல முன்வர

வில்லை. இவனை மாத்திரம் போலீஸார் சாட்சியாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இறந்து கிடந்த பெண்மணியின் சரீரம் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இறந்து போன பெண்மணியின் பெயர் வேதவதி என்றும், அழுது கொண்டிருந்த பெண்மணியின் பெயர் சாந்தை என்றும் நாம் அறிகிறோம். கொலையைப்பற்றிய விவரம் ஏதும் இன்னும் வெளியாகவில்லை. இக்கொலை சம்பந்தமான விசாரணை நாளை மறுதினம் நடைபெறும்.''

பிறகு காந்திமதியும் அப்பத்திரிகையை வாங்கிப் பார்த்துவிட்டு வச்சிரபாணியை நோக்கி ''அண்ணா! வேதவதியும் சாந்தையும் ஜெயிலறைக்குள் இருந்தார்கள் என்று இப்பத்திரிகையில் கண்டிருப்பது உண்மையேயாகும். வேதவதி என்பவள் மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் கருத்திற்கு இணங்கும்படி என்னை மிகவும் வற்புறுத்தினாள். சாந்தை என்பவள் என்னிடம் சிறிது இரக்கங்காட்டிப் பேசினாள். இவர்கள் இருவரும் மோகனாங்கிக்கு மிகவும் வேண்டிய நண்பர்களாவார்கள். வேதவதியே என்னை வஞ்சனையாக என் வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி ஜெயிற் கட்டிடத்திற்குள் சேர்ப்பித்திருக்கிறாள். அவள் செய்த கொடுஞ் செயலுக்குத் தண்டனை இறைவனே விதித்துவிட்டார். அவள் இம்மண்ணுலகைவிட்டு நீங்கியும் போனாள். அண்ணா! மோஹனாங்கி, மகம்மதாலி, வேதவதி, சாந்தை இந்நால்வரும் சேர்ந்தே சூழ்ச்சி செய்திருக்கிறார்கள். சாந்தை என்பவள் ஒரு பெரிய ஜமீன்தாரருடைய புத்திரியாயிருந்தும் இழிந்த குணமும் அருவருக்கத்தக்க செயலுமுடையவளாயிருக்கிறாள். ஆத

லாற்றான் அவள் மோகனாங்கியின் சதியாலோசனைக்கு இணங்கினாள்." என்று கூறினாள்.

"எனக்கும் மோஹனாங்கிக்கும் எவ்விதமான விரோதமு மில்லை. அவ்விதமிருந்தும் அவள் எனக்கு இன்னல் விளைப்பதற்குப் பெரிதும் முயல்கின்றாள். அதற்குக் காரணம் யாதோ அறியேன்" என்று நான் வச்சிரபாணியிடம் உரைத்தேன்.

"நல்லதிருக்கட்டும்; மாஜிஸ்டிரேட் மகம்மதாலி உயர்ந்த உத்தியோகஸ்தனாதலால், இப்போது அவன் மீதுகொண்டுவரப்பட்டிருக்கும் கேஸிலிருந்து அவன் தப்பித்துக்கொள்வதற்குப் பெரிதும் முயல்வான். ஆதலால் நாம் முன்ஜாக்கிரதையுடனேயே இருத்தல் வேண்டும். நான் இன்றே புறப்பட்டுத் திருச்சிக்குச் செல்லுகின்றேன். அங்குச் சென்று நான் அவசியமான ஏற்பாடுகளைச்செய்து கொள்ளுகிறேன். நீங்கள் இருவரும் இங்கேயே சிறிது காலத்திற்கு மறைவாக இருங்கள்" என்று வச்சிரபாணி என்னிடத்திலும் காந்திமதியிடத்திலும் கூறிவிட்டு அன்றிரவே திருச்சிக்குப் பிரயாணப்பட்டுவிட்டான்.

நானும் காந்திமதியும் உறையூரிலேயே இருந்தோம். இரண்டு மூன்று தினங்கள் கழிந்தன. வச்சிரபாணியிடமிருந்து ஒரு கடிதம் எனக்கு வந்தது. அக்கடிதம் பின்வருமாறு:—

திருச்சி
18-7-1905

அன்பார்ந்த ஐயா,

"நம்முடைய கேஸ் நேற்றும் இன்றும் விசாரணையாகி முடிவுற்றது. போலீஸாரே மிகுந்த உற்சாகத்துடனும் பொறுப்புடனும் கேஸை நடத்தினார்கள்.

பிராஸிகியூஷன் தரப்புக்குச் சென்னை அட்வோகேட் ஜெனரலும், திருச்சியில் பிரபல வக்கீலாயிருக்கும் சுந்தரராஜ ஐயங்காரும் ஆஜராகிக் கேஸ் நடத்தினார்கள். மகம்மதாலிக்கு ஒரு பிரபல ஐரோப்பிய பாரிஸ்டர் ஆஜராகி வாதித்தார். சாந்தை என்பவளை அப்ரூவராகக் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டிருந்தார்கள். டிபன்ஸ் தரப்புக்கு இருபதுபேர் சாட்சிகள்; அவர்களுள் முக்கியமானவர்கள் மோஹனாங்கியும் ஜெயிற் கட்டிடத்தின் வாயிற்காப்போனு மாவர்கள். மகம்மதாலி கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் பின்வருமாறு:— "நான் அன்று ஜெயிற் கட்டிடத்திற்குப் போனது உண்மையே யாகும். கைதிகளைப்பார்த்து வருவதற்காக நான் வாரத்திற்கு ஒரு முறை இரவு ஒன்பது மணிக்குமேல் ஜெயிற்கட்டிடத்திற்குச் செல்வது வழக்கம். அதுபோலவே அன்றும் சென்றேன். ஜெயிற்கட்டிடத்தின் பின்புறமுள்ள அறை ஒன்றில் ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. அதை அறிவதற்காக நான் சென்றபோது மூன்று பெண்களும் ஒரு வாலிபனும் அவ்வறைக்குள் சச்சரவுசெய்துகொண் டிருப்பதைக் கண்டேன். விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அங்கு நின்றுகொண்டிருந்த வாலிபன் இவ்வூரில் வைத்தியத்தொழில் செய்துகொண்டிருக்கும் ஆத்மநாதன் என்பதையும்; அங்கு நின்றுகொண்டிருந்த பெண்கள் சபாநாயகத்தின் மகள் காந்திமதி, கொலையுண்ட வேதவதி, இக்கேஸில் அப்ரூவராயிருக்கும் சாந்தை ஆகிய மூவர் என்பதையும் விளக்கு வெளிச்சத்தால் நான் அறிந்தேன். நான் உள்ளே சென்றவுடன் எரிந்து கொண்டிருந்த விளக்கை ஆத்மநாதன் அணைத்து விட்டான். மறு நிமிஷக்

தில் ஒரே இருள் அறை முழுவதையும் சூழ்ந்து கொண்டது. திடீரென்று ஒரு துப்பாக்கிச் சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு கதவண்டை வந்து பார்த்தேன். கதவு வெளிப்பக்கத்தில் பூட்டப்பட்டிருப்பதை அறிந்தேன். சிறிது நேரத்திற்குள் ஜெயிற் காவலாளர்களும், போலீஸாரும் விளக்குடன் வந்தார்கள். அப்போது வேதவதி இறந்து கிடப்பதையும், ஆத்மநாதனும் காந்திமதியும் அறைக்குள் இல்லை என்பதையும் நான் அறியலானேன். போலீஸார் என்னையும் சாந்தை என்பவளையும் அரஸ்டு செய்தார்கள். அங்கு நடந்த நிகழ்ச்சிகள் என் மூளையைக் கலக்கி விட்டபடியால் நான் சுயபுத்தி இழந்து பயித்தியம் பிடித்தவன் போலானேன். இவ்வளவே நான் அறிவேன். உண்மையில் வேதவதியை நான் சுட்டுக் கொல்லவில்லை''. நண்பரே ! இவ்விதம் மகம்மதாலி வாக்குமூலம் 'கொடுத்த பிறகு ஜெயிற் கட்டிடத்தின் வாயிற் காப்போன் சாட்சியாக விசாரிக்கப்பட்டான். தனக்கு இக்கொலை சப்பந்தமாக ஒன்றுமே தெரியாதென்றும், அன்றிரவு பத்துமணி சுமாருக்கு ஒரு மனிதன் ஒரு பெண்மணியைத் தன் இருகரங்களாலும் அணைத்துத் தூக்கியபடியே ஜெயிலுக்குள் ளிருந்து வெளியே வந்ததைக் கண்டு அவனைப் பிடிப்பதற்காகத் தான் அவனை நெருங்க, அவன் தன்னைக் காலாலுதைத்துத் தள்ளிவிட்டு ஓடிப்போய் விட்டானென்றும், இந்த ஒரு விஷயத்தைத் தவிர வேறு ஒன்றும் தனக்குத் தெரியாதென்றும், வாயிற் காப்போன் கூறினான். அப்ரூவராக எடுத்துக் கொள்ளப்பட்ட சாந்தை பின் வருமாறு சொன்னாள் !—" இக்கொலை சம்பந்தமாய் ஏதும் அறியேன். கொலை நடந்ததற்கு முதல் நாளிரவு

மோகனுங்கி என்னிடம் வந்து 'சாந்தையே, நீ எனக்காக ஓர் உபகாரம் செய்ய வேண்டும். இன்றிரவு இரண்டு மணிக்குமேல் நீ சபாநாயகத்தின் வீட்டுக்குப் போய்த் தெருவாயிற்படியில் காத்துக்கொண்டு இருக்கவேண்டும். உன்னேடு சில வேலையாட்களும் வருவார்கள். வேதவதி சபாநாயகத்தின் வீட்டுக்குள்ளிருந்துகொண்டு ஒரு சைக்கினை செய்வாள். அதை அறிந்து நீ உட்செல்லுவாயானல் காந்திமதி இருக்கும் இடத்தை அவள் காண்பிப்பாள். காந்திமதி ஸ்மரணை தவறி அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருப்பாள். உன்னேடு வரும் வேலையாட்களைக் கொண்டு அவளை அப்படியே தூக்கிக்கொண்டு போய் ஜெயிற் கட்டிடத்துள் சேர்த்துவிட வேண்டியது. நீ அவளைத் தூக்கிக்கொண்டு போகும் சமயத்தில் ஜெயிற் கட்டிடம் திறந்திருக்கும். அங்குள்ள ஒரு வேலைக்காரன் உனக்கு வேண்டும் உதவி புரிவான். நீ அங்குச் சென்ற பின்பும் காந்திமதியோடு கூடவே இருக்கவேண்டும்.' என்று சொன்னுள். என்னைப்பற்றிய ஓர் இரகசியம் தனக்குத் தெரியுமென்றும், தான் சொல்லுகிறபடி செய்யாவிட்டால் அதனை வெளிப்படுத்த நேரிடுமென்றும் மோஹனுங்கி என்னைப் பயமுறுத்தினபடியால் நான் அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்க வேண்டியவளானேன். அவள் சொன்னபடியே எல்லாம் நிகழ்ந்தன. வேதவதி காந்திமதியை வீட்டுக்குள்ளிருந்து அப்புறப்படுத்திவிட்டு, வீட்டின் கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்து விட்டாள். மறுநாள் பகல் இரண்டு மணிக்குமேல் வேதவதி, நானும் காந்திமதியும் இருந்த ஜெயிலறைக்குள் வந்து, மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் விருப்பத்திற் கிணங்கும்படி காந்திமதியைவற்புறுத்தி

ளுள். அவள் மறுத்துரைத்தாள். இரவு எட்டு மணிக்கு மேல் மாஜிஸ்டிரேட்டே ஜெயிலறைக்குள் வந்துவிட்டார். வந்தவுடன் காந்திமதியிடம் சல்லாப வார்த்தைகளை அவர் பேசலானுர். காந்திமதி வெகுண்டு உரையாடினதால் அவர் அவளைப் பலாத்காரம் செய்ய முயன்ருர். அச்சமயம் திடீரென்று யாரோ ஒரு மனிதர் உள்ளே வந்தார். மறுநிமிஷத்தில் விளக்கு அணைக்கப்பட்டது; துப்பாக்கி வெடித்த சத்தமுங் கேட்டது. பிறகு ஜெயில் மேலதிகாரி விளக்கோடு அறைக்குள் வந்தார். வேதவதி துப்பாக்கியாற் சுடப்பட்டு இறந்து கிடந்ததை அப்போது நான் கண்டேன். அறைக்குள் வந்த மனிதரையும் காந்திமதியையும் நான் காணேன். இவ்வளவேதான் நான் அறிவேன்.'' இவ்விதம் சாந்தை வாக்கு மூலம் கொடுத்தபிறகு வேறு சில சாட்சிகளும் விசாரிக்கப்பட்டார்கள். மோஹனங்கி கோர்ட்டுக்கு ஆஜராகவில்லை. சம்மன் அனுப்பியும் அவள் வராதிருந்ததற்காகக் கோர்ட்டார் அவளுக்கு வாரண்டு பிறப்பித்திருக்கிருர்கள். அவளை விசாரிக்க வேண்டுவது அவசியமென்று டிபன்ஸ் தரப்பார் சொன்ஞர்களாயினும், ஜட்ஜ் அதனைக் கேளாமல் இரண்டு கட்சி வக்கீல்களின் வாதத்தையும் கேட்டுக்கொண்டு மாஜிஸ்டிரேட் மகம்மதாலி குற்றவாளி என்றே தமக்குப் படுவதால் அவரைச் செஷன்ஸுக்குக் கமிட்டு செய்திருப்பதாய்க் கூறிவிட்டார். ஜாமீன்மேல் தன்னை விடவேண்டுமென்று மாஜிஸ்டிரேட் செய்துகொண்ட வேண்டுகோள் அதிகாரத்தோடு மறுக்கப்பட்டது! நண்பரே! மாஜஸ்டிரேட் இப்போது கொலைபுரிந்த கைதியின் நிலைமையை வகித்திருக்கிருர். அந்தோ! மகம்மதாலி

யின் பரிதாப நிலைமை எல்லோருக்கும் வருத்தத்தை விளைவித்திருக்கிறது. ஆனாலும், நாம் என்ன செய்ய லாம்? மனிதர்கள் தங்கட்கு வாய்ந்துள்ள நிலையற்ற அதிகாரத்தையும், அழிந்துபோகக் கூடிய செல்வாக் கையும், சகடக்கால்போல் சுழன்றுகொண்டிருக்கும் பொருளையும் நித்தியமுடையனவையென்று பிறழ நினைந்து, அந்த எண்ணத்தினால் அகங்காரமும் மமதை யும் அடைந்து, ஏழை எளியவர்களைக் கொடுமையாக நடத்த முன்வருவார்களானால், அவர்களை எல்லாம் வல்ல இறைவன் தண்டியாது விடுவனோ? எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்' என்னும் முதுமொழி வீண்போமா? ஆதலால் மகம்ம தாலி தன்னுடைய வினைக்குத் தகுந்த பலனை அறுப் பான் என்பது நிச்சயமே. மற்றவை மறு தபாலில்.

இப்படிக்கு,
"வச்சிரபாணி."

ஒன்பதாம் அதிகாரம்

வச்சிரபாணியின் மரணம்

புலைத்தொழில் பயின்றவிந்தப் புன்புலாற் சுமையைநாளு
நிலைத்ததென்றெண்ணியெண்ணிநேயம்வைத்துறுகாப்பாற்றி
மலைத்தலைந்துழல்வதெல்லா மடமையோர்செய்கையாகுஞ்
சிலைத்தொழில் விளக்கியாங்குச் செறிகரும்புருவப்பாவாய்.

[குசலோபாக்கியாநம்.

வச்சிரபாணியிட மிருந்து எனக்குக் கடிதம் வந்த மறுநாள் "தினவர்த்தமானி" என்னும் பத்திரிகை தபாலில் எனக்குச் சென்னையிலிருந்து வந்தது. அதனைப் பிரித்துப் பார்க்கவே, வச்சிரபாணியின் கடிதத்தில் காணப்பட்டிருந்த எல்லா விஷயங்களும், வேதவதியின் கொலைக்கேஸ் சம்பந்தமாய், அதிலும் காணப்பட்டன. ஆனல், அவனுடைய கடிதத்தில் காணப்படாத வேறு இரண்டொரு புதிய விஷயங்களும் பத்திரிகையில் இருந்தன. மோஹனங்கி அரஸ்டு செய்யப்பட்டிருக்கிறாள் என்பதும், மகம்மதாலியின் கொடுஞ்செயலை உலகத்தாருக்கு வெளிப்படுத்துவதற்கு வச்சிரபாணி பெரிதும் முயன்று வருகின்றான் என்பதும், எனக்கும் காந்திமதிக்கும் சம்மன்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதும், அடுத்த மாதம் 15-ஆம்தேதி செஷன்ஸ்கோர்ட்டில் கேஸ் விசாரிக்கப்படும் என்பதுமே அப்புதிய விஷயங்களாகும். இவைகளை நான் காந்திமதியினிடத்திலும் தெரிவித்தேன். சில தினங்கள் கழிந்தன. ஒரு நாள் உறையூரிலேயே ஒரு கனவா

ளேப் பார்த்து வருவதற்காக நான் சென்றிருந்தேன். நான் சென்றபோது பகல் மூன்றுமணி யிருக்கும்; காந்திமதி மாத்திரந்தான் வீட்டிலிருந்தாள். மறுபடியும் மாலே ஐந்துமணி சுமாருக்கு நான் வீட்டுக்குத் திரும்பினேன். அப்போது காந்திமதி மிகுந்த ஆறுமையோடு வாய்விட்டு அழுதுகொண்டிருந்த ஓசை என் செவியில் நுழைந்தது. நான் அச்சமும் ஆச்சரியமும் ஒருங்கே கொண்டவனுய் வீட்டின் வெளிவாயிற்படியிலேயே ஸ்தம்பித்து நின்றேன். காந்திமதி பின்வருமாறு வீட்டினுள் புலம்பிக்கொண் டிருந்தாள்.

"ஆ! தெய்வமே, தெய்வமே! இவ்விதமாகவா நீ என்னேச் சோதிக்கவேண்டும்! பேரருளும் பெருங்குணமும் வாய்ந்தவன் என்றும், ஆன்மகோடிகளே இரட்சித்து அவைகளுக்குப் பேரின்ப முத்திநிலேயைத் தருபவன் என்றும் உன்னேப் பெரியோர்கள் போற்றுகின்ருர்களே? உன்னுடைய முற்றறிவைப்பற்றியும் முடிவிலாற்றலேப் பற்றியும் வேதங்களும் ஆகமங்களும் புகழ்ந்து பேசுகின்றனவே? அவ்வளவு பெருமை வாய்ந்த உனக்கு என்னுடைய பரிதாபமான நிலேமை புலப்படாமலா போயிற்று? ஆ! 'கடவுளே நம்பினேர் கைவிடப்படார்' என்னும் பழமொழியும், என் விஷயத்தில் பொய்த்து விட்டதே? ஏ! முக்கண் மூர்த்தியே, உன்னே நான் பாடியும் பரவியும் ஏத்தாத நாள் ஒரு நாள்கூட இல்லேயே? கண்ணீருங் கம்பலேயுமாய் நின்று எனது குறைகளே எல்லாம் உன்னிடம் எத்தனேயோ முறை முறையிட்டிருக்கின்றேனே? அக்குறைகளே நீ நிவர்த்திசெய்து வைக்காவிட்டாலும், மேலும் மேலும் எனக்கு இன்னல்கள் விளேயாதிருக்கும்படியாவது செய்யலாகாதா? 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே

கெடும்' என்னும் பழமொழிக் கிணங்க ஏற்கெனவே பலவகையான துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்துக்கொண் டிருக்கும் என்னைத்தானு மேலும் மேலும் அவை வந்து சூழவேண்டும்? ஐயோ! நான் எதை நினைந்து வருந்துவேன்? எதற்காக அழுவேன்? துன்பமும் துயரமுமே சூழ்ந்த இந்நில வுலகத்தில் பெண்ணாக நான் பிறந்ததை நினைந்து வருந்துவேனோ? என்னுடைய மனோநிலையையும் விருப்பத்தையும் அறியாமல் என்னைப் பலவாறு துன்புறுத்திவரும் உற்றார் உறவினருடைய பேதமையை நினைந்து வருந்துவேனா? அல்லது மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் கெட்ட எண்ணத்தினாலும் செயலினாலும் நான் அனுபவிக்க நேர்ந்திருக்கும் கஷ்டங்களை நினைந்தழுவேனோ? அல்லது என்னுடைய சகோதரர் வச்சிரபாணி இறந்து போனார் என்று திடீரென இப்போதுவந்திருக்கும் துக்ககரமான செய்தியைக்கேட்டு அழுவேனோ? அண்ணா, அண்ணா! இனி எப்போது தங்களை நான் காண்பேன். நானும் என்னுடைய காதலரான ஆத்மநாதனும் சதியாலோசனைக்காரர்கள் சிலருடைய சூழ்ச்சியி லகப்பட்டுத் திசை தப்பிய மரக்கலம்போல் தத்தளித்துக்கொண் டிருக்கிற இச்சமயத்தில் எங்களுக்கு உதவியாக தாங்கள் முன் நின்று உழைத்து வந்தீர்களே? மகம்மதாலியின் கொடுஞ் செயலை உலகுக்கு எடுத்துக் காட்டி அவனைத் தண்டனைக்குட் படுத்த எவ்வளவோ முயன்று வந்தீர்களே? இனி, நாங்கள் என்ன செய்வோம்? அண்ணா! இந்த உறையூர்க் கிராமம் முழுமையும் தங்களுக்கு உரியதாயிருந்தும் இதனைத் தாங்கள் அனுபவிக்க வில்லையே? தங்களுடைய தந்தையும் என்னுடைய பெரிய தகப்பனாருமாகிய அரங்கநாயகம்

தனக்கு ஆண்மகவு இல்லை என்று எத்தனையோ ஸ்தலங்களுக்குச் சென்று கடவுளைப் பிரார்த்தித்து இறுதியில் தங்களைப் புத்திரனாகப் பெற்றாரே? நம்முடைய குலம் விளங்குவதற்குத் தாங்கள் ஒருவராவது இருக்கிறீர்கள் என்று நம்முடைய உற்றார் உறவினர்கள் எல்லோரும் மகிழ்ந் திருந்தார்களே? இனி நம்முடைய குலம் எவ்விதம் விளங்கும்? அண்ணா! மாண்டு மடிவதற்காகத்தானோ அன்று என்னிடமும் என் காதலரிடமும் விடை பெற்றுக்கொண்டு திருச்சிக்குச் சென்றீர்கள்! ஐயோ! இனி நான் என் செய்வேன்? எவ்விதம் உயிர்வாழ்வேன்? என்னுடைய காதலரிடம் தாங்கள் இறந்துபோனீர்கள் என்னும் கொடிய செய்தியை நான் எவ்வாறு கூறுவேன்? கூறினால், அவருடைய மனம் என்னபாடு படும்? ஆ! இவ்விதம் நேரவேண்டுமென்பது திருவுளச் சம்மதமோ? திருச்சியிலுள்ள என்னுடைய பெற்றோர்களுக்கு இந்தச் செய்தி தெரிந்தால், அவர்கள் எவ்வளவு துயருறுவார்கள்? அண்ணா, அண்ணா! இப்பாவியாகிய என்னாலன்றோ தங்களுக்கு மரணம் நேர்ந்தது! எனக்காகத் தாங்கள் திருச்சிக்குப் போகாதிருந்தால் இத்தகைய மரணம் நேரிட்டிராதே? எந்தச் சதிகாரன் தங்கள்மீது துப்பாக்கிக் குண்டைச் செலுத்தித் தங்கள் உயிரைக் கவர்ந்தானோ? ஆ! குண்டு பாய்ந்தபோது தங்கள் சரீரம் என்னபாடு பட்டதோ? ஐயோ! சிவமே! இந்தத் துக்ககரமான செய்தியைக் கேட்பதற்காகத்தானா நான் திருச்சியிலிருந்து இங்கு வந்தேன்? ஆ! என் செய்வேன்! என் செய்வேன்! எவ்வாறு மனந்தேறுவேன்?"

இவ்வாறு காந்திமதி புலம்பிக்கொண் டிருந்ததை வெளியில் நின்று கேட்டுக்கொண்டிருந்த நான், அவளை

ஒருவாறு ஆற்றுவிக்கும் நோக்கத்துடன், உள்ளே சென்றேன். அவள் என்னைக் கண்டவுடன் இன்னும் அதிகமாகத் தேம்பித் தேம்பி அழலானாள்.

"கண்மணீ; என்ன சங்கதி ? ஏன் இவ்விதம் அழுகின்றாய் ? தயை செய்து தெரிவி" என்று நான் காந்திமதியைக் கேட்டேன். வச்சிரபாணி துப்பாக்கியினாற் சுடப்பட்டு இறந்துபோனானென்று அவளுக்குச் செய்தி வந்திருக்கிறதென்பதையும், அதற்காகவே அவள் அழுகின்றாள் என்பதையும் அவளுடைய புலம்பலிலிருந்து நான் ஏற்கெனவே அறிந்து கொண்டபோதிலும், அதனை அவள் அறியக் கூடாதென்று கருதியே இவ்வாறு வினவினேன்.

காந்திமதி என்னுடைய கேள்விகளுக்கு ஏதும் பதில் சொல்லாமல் ஒரு கடிதத்தை என்னிடம் காட்டினாள். அக்கடிதம் பின்வருமாறு:—

சென்னை,

ஸ்ரீமதி. காந்திமதி அம்மை அவர்கட்கு,

உங்களுடைய சகோதரரும், உறையூர்க் கிராமத்தின் சொந்தக்காரருமான வச்சிரபாணி என்பவர் நேற்று இரவு சென்னை பச்சையப்பன் கலாசாலைக்குச் சமீபத்தில் ஒரு வாலிபனாற் சுடப்பட்டு இறந்து போனார். துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது மணி ஏழரை அல்லது எட்டு இருக்கும். துப்பாக்கி ஓசை கேட்டவுடன் வீதியில் சிறிது தூரத்தில் குதிரைமீது இருந்த சார்ஜண்டும், பூக்கடை போலீஸ் ஸ்டேஷனிலிருந்த கான்ஸ்டேபிள்கள் சிலரும் ஓடிவந்தார்கள். தெருவழியாய்ப் போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருந்த ஜனங்களும் கொலை நடந்த இடத்தில் கும்பலாய்க் கூடிவிட்டார்கள். வச்சிரபாணி குற்றுயிரும்

குறையுயிருமாயிருந்த சமயத்தில் அவரிடம் வாக்கு மூலம் போலீஸாரால் வாங்கப்பட்டது. தன்னைச் சுட்டவன் மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் வேலைக் காரன் என்றும், மகம்மதாலியின் கொடிய செயலை வெளிப்படுத்தக் கூடிய சில கடிதங்கள் தன்னிடம் அகப்பட்டிருக்கின்றன என்பதை அவன் அறிந்து கொண்டபடியால் அவனுடைய தூண்டுதலினாலேயே அவனுடைய வேலைக்காரன் தன்னைச் சுட்டிருக்க வேண்டு மென்றும், அந்த வேலைக்காரனைத் தனக்கு ஏற்கெனவே தெரியுமென்றும், அவன் பெயர் கோவிந் தன் என்றும், மகம்மதாலி சம்பந்தமான கடிதங்கள் சென்னை ஹைகோர்ட் வக்கீல் இராமசாமி ஐயரிடம் இருக்கின்றன வென்றும், இனி ஏதேனும் உண்மை தெரிந்துகொள்ள வேண்டுமானால் திருச்சியில் பிரபல வைத்தியராயிருக்கும் ஆத்மநாதர் என்பவரைக்கொண் டும் உங்களைக் கொண்டும் தெரிந்து கொள்ளலா மென்றும், வச்சிரபாணி தாம் உயிர் துறக்கப்போகும் சமயத்தில் வாக்குமூலம் கொடுத்தார். நீங்கள் அவரு டைய சகோதரி என்பதையும் அவர் கொடுத்த வாக்கு மூலத்தினாற்றான் அறியலானோம். அவர் வாக்குமூலம் கொடுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் உயிர் நீங்கினார். மரண பரிசோதனையின் பொருட்டு அவருடைய சரீரம் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட் டிருக்கிறது. அவரைத் துப்பாக்கியினாற் சுட்ட வாலிபன் அரஸ்டு செய்யப்பட்டுப் போலீஸில் இருக்கிறான். இனி, நடக்க வேண்டிய காரியங்களை ஆலோசிப்பதற்காக உங்களை யும் ஆத்மநாதரையும் உடனே புறப்பட்டு இவ்விடம் வரும்படி வக்கீல் இராமசாமி ஐயர் தங்கட்கு எழுதும் படி சொன்னார்கள். ஆதலால் சிறிதும் காலதாமதம்

செய்யாமல் உடனே இருவரும் புறப்பட்டு வாருங்கள். வரும்போது பீஸ்பணமும் அவசியம் கொண்டுவரவேண்டியது.

இப்படிக்கு,
மாதவையன்,
வக்கீல் இராமசாமி ஐயர் குமாஸ்தா.

இக்கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன் எனக்கு உண்மை ஒருவாறு புலப்பட்டது. வச்சிரபாணி ஏதோ சூழ்ச்சி செய்து மகம்மதாலியின் இரகசியங்களை அறிந்து கொண்டான் என்றும், அவ்விதம் அவன் அறிந்து கொண்டான் என்பதை எவ்விதமாகவோ மகம்மதாலி தெரிந்துகொண்டு அவனைக் கொன்றுவிடும்படி அந்த வாலிபனை ஏவியிருக்கின்றான் என்றும் நான் இனிதறிந்து கொண்டேன். காந்திமதிக்கு நான் ஒருவாறு தேறுதல்கூறி அவளுடைய துயரத்தை ஆற்றினேன். அவளும் ஒருவாறு மனந்தேறினாள். அன்றே அவளை அழைத்துக்கொண்டு சென்னைக்குப் பிரயாணப்பட்டேன். திருச்சியில் தங்கி தன்னுடைய தந்தையாகிய சபாநாயகத்தையும் அன்னையாகிய சிவகாமியையும் பார்க்க வேண்டுமென்று காந்திமதி கூறினாள். அங்ஙனம் செய்தால் காந்திமதி இன்ன இடத்திலிருக்கிறாள் என்பது புலப்பட்டுவிடு மாதலாலும், சிறிது காலத்திற்கு அவளை ஒருவருக்கும் தெரியாமல் மறைவாகவே வைத்திருக்கவேண்டுமென்று நான் கருதினேனாதலாலும், தவிர வச்சிரபாணியின் மரணத்தைக் குறித்து அவளுடைய பெற்றோர்களிடம் பிரஸ்தாபிக்க நேரிடுமாதலாலும் அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்காமல் நான் நேரே சென்னைக்கே அவளுடன் பிரயாணமானேன்.

நானும் காந்திமதியும் சென்னைக்குச் சென்றவுடன் நேரே வக்கில் இராமசாமி ஐயர் வீட்டினுக்கே போய்ச் சேர்ந்தோம். எங்களுடைய நிலைமையை எங்களுடைய வாய் மொழியாலும் தம்முடைய நுண்ணறிவாலும் இனிதறிந்து கொண்ட வக்கீல் இராமசாமி ஐயர் எங்களை மிகுந்த அன்புடன் வரவேற்று உபசரிக்கலானார். வச்சிரபாணியின் கொலை சம்பந்தமாய் அநேக விஷயங்களை எடுத்துக்காட்டி எந்தவிதத்திலும் மாஜிஸ்டிரேட் மகம்மதாலியை மரணதண்டனைக் குட்படுத்தி விடலாம் என்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

"ஆத்மநாதரே! இப்போது மாஜிஸ்டிரேட் மகம்மதாலிமீது இரண்டு கேஸ்கள் இருக்கின்றன. திருச்சி ஜெயிலில் நடந்த கொலைக்குக் காரணம் மகம்மதாலியே என்று கீழ்க்கோர்ட்டில் ருஜுவாகி விட்டது. கீழ்க் கோர்ட்டார் அந்தக் கேஸை செஷன்ஸுக்குக் கமிட்டு செய்திருக்கிறார்கள். அந்தக் கேஸ் நாளை மறுதினம் விசாரணையாகப் போகிறது. தவிர, வச்சிரபாணியின் கொலை சம்பந்தமாய்ப் போலீஸார் கேஸ் நடத்தப் போகிறார்கள். இதிலும் மாஜிஸ்டிரேட் மகம்மதாலி சம்பந்தப்படுத்தப்படுவான். இந்த இரண்டு கேஸ்களையும் நாம் மிகுந்த ஜாக்கிரதையோடு நடத்தினோமானால் மாஜிஸ்டிரேட் மகம்மதாலிக்கு மரணதண்டனையாவது அல்லது ஆயுள்பரியந்தம் தீவாந்தர சிட்சையாவது கிடைக்குமென்பது நிச்சயம்." என்று வக்கீல் இராமசாமி ஐயர் என்னை நோக்கிச் சொன்னார்.

"ஐயா, மாஜிஸ்டிரேட் மகம்மதாலிக்கு உதவியாயிருந்து அவனைக் கொடிய செயல்களில் பிரவேசிக்கும்படி தூண்டிவிட்ட மோஹனாங்கியை யன்றோ முதலில்

தண்டிக்க வேண்டும்." என்று பக்கத்திலிருந்த காந்திமதி வக்கீலை நோக்கிக் கூறினாள்.

"அவள்மீது ஏற்கெனவே ஒரு பெரிய குற்றம் ஏற்பட்டிருக்கிறதே? கோர்ட்டாருடைய உத்தரவை அலட்சியஞ்செய்து அவள் விசாரணைக்கு வராமலிருந்து விட்டாள். அதற்காக அவள்மீது வாரண்டு பிறந்திருக்கிறதே?" என்று வக்கீல் சொன்னார். பிறகு நானும் காந்திமதியும் சிறிதுநேரம் வக்கீலிடம் பேசிக்கொண்டிருந்து விட்டு விசாரணை யன்று கோர்ட்டுக்கே வந்துவிடுவதாய் அவரிடம் கூறிவிட்டு எங்களுக்காக அமைக்கப்பட்டிருந்த தனி விடுதிக்குச் சென்றோம்.

விசாரணைத் தெய்தியன்று காலை 10-மணிக்கே நானும்காந்திமதியும் கோர்ட்டுக்குச்சென்றுவிட்டோம். அங்கே மாஜிஸ்டிரேட் மகம்மதாலி,—இப்போது இரண்டு சேவகர்களால் பாதுகாக்கப்பட்ட ஒரு கைதி,—வந்திருந்தான். மோஹனாங்கியும் கோர்ட்டுக்கு வந்திருந்தாள். சாந்தையும் அவளோ டிருந்தாள்.

கோர்ட்டு கூடியவுடன் திருச்சிராப்பள்ளி ஜெயிலில் நடந்த படுகொலை சம்பந்தமான கேஸ்தான் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஜட்ஜ் கீழ்க்கோர்ட்டு ரிகார்டுகளை ஒருமுறை பார்த்துவிட்டு முதலில் மோஹனாங்கியைக்கூப்பிடும்படி சேவகனுக்கு உத்தரவுசெய்தார். சேவகன் "மோஹனாங்கி அம்மாள் !" "மோஹனாங்கி அம்மாள் !" என்று மூன்று முறை உரத்துக் கூவவே, மோஹனாங்கி ஓடிவந்து கூட்டின் மீது ஏறி நின்றாள். வழக்கப்படி சத்தியம் வாங்கின பிறகு ஜட்ஜ் அவளைப் பின்வருமாறு வினவினார்.

"உன் பெயர்தானா மோஹனாங்கி? நீ இந்தக் கேஸ் சம்பந்தமாய் என்ன அறிவாய்? கோர்ட்டார் அனுப்பிய

சம்மனை நீ அலட்சியஞ்செய்து கோர்ட்டுக்கு ஆஜராகம லிருந்ததற்குக் காரணம் யாது ?"

"என் பெயர்தான் மோஹனங்கி! இந்தக் கேஸ் சம்பந்தமாய் நான் ஒன்றுமே அறியேன் ; ஆனால் மாஜிஸ்டிரேட் மகம்மதாலி இதில் சம்பந்தப்பட்டிருக் கின்றார் என்பதை மாத்திரம் நான் கேள்வியுற்றேன். அவருக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்ல நேரிடும் என்று நினைத்தும், அவர் என்னை ஆஜராகவேண்டா மென்று வற்புறுத்தியதால், ஆஜராகாமலிருந்தால் பாதகமில்லை போலும் என்று கருதியும் நான் கோர்ட் டார் சம்மனைப் புறக்கணித்தேனே தவிர வேறில்லை" என்று மோஹனங்கி பதில் சொன்னாள். பிறகு காந்தி மதி விசாரிக்கப்பட்டாள்.

"ஐயா! இக்கேஸ் சம்பந்தமாய் நான் ஏதும் அறி யேன். ஒரு நாள் இரவு நான் என் வீட்டில் படுத் திருந்தேன். அன்று வேதவதியும் எங்களுடைய வீட் டிற்குப் படுப்பதற்கு வந்திருந்தாள். அதிகாலையில் விழித்துப் பார்த்தேன் ; திருச்சி ஜெயில் கட்டிடத்துள் ஓர் அறையினுள் இருக்கக் கண்டேன். என்னோடு சாந்தை என்பவள் இருந்தாள். நெடுநேரங் கழித்து வேதவதியும் அங்கு வந்துசேர்ந்தாள். இருவரும் மாஜி ஸ்டிரேட் மகம்மதாலியைப்பற்றி என்னிடம் புகழ்ந்து வார்த்தையாடினார்கள். இரவு ஒன்பது மணிக்கு மகம்ம தாலியே நான் இருந்த அறைக்குள் நுழைந்து என் னோடு காமாந்தகாரமான சரசவார்த்தைக ளாடினான். நான் மறுத்து மிகுந்த கோபத்தோடு பதில் கூறவே, அவன் என்னைப் பலவந்தஞ்செய்ய முயன்றான். அச் சமயம் திடீரென்று அறையினுள் எரிந்துகொண்டி ருந்த விளக்கு அணைந்தது. என்னை யாரோ வெளியே

தூக்கிக்கொண்டுவந்ததுபோல் எனக்குப் புலப்பட்டது; அவ்விதம் என்னைத் தூக்கிக்கொண்டு வந்தவர் என் அருமைக் காதலரான ஆத்மநாதர் என்பதைப் பிறகு அறிந்தேன். என்னை அவர் வெளியே தூக்கிக்கொண்டு வந்த அதே சமயத்தில் அறையினுள் துப்பாக்கி வெடித்த ஓசை ஒன்று கேட்டது. இவ்வளவே நான் அறிவேன் " என்று காந்திமதி கூறினாள்.

பின்னர் என்னைக் கோர்ட்டார் விசாரித்தார்கள். நான் எல்லாச் சங்கதிகளையும் ஆதியோடந்தமாய் எடுத்துக் கூறினேன். தவிர, வக்கீல் இராமசாமி ஐயரிடம் சில இரகசியக் கடிதங்கள் தன்னால் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று வச்சிரபாணி இறக்கும் தறுவாயில் கூறினானன்றோ? அக்கடிதங்களை நான் வக்கீலிடமிருந்து வாங்கிக் கோர்ட்டில் தாக்கல் செய்தேன். வேதவதியைத் துப்பாக்கியினாற் சுட்டுக்கொன்றவன் மாஜிஸ்டிரேட் மகம்மதாலியே என்பதையும், மோஹனாங்கி மகம்மதாலிக்கு உதவியாய்ச் சதியாலோசனை செய்துவந்திருக்கிறாள் என்பதையும் அக்கடிதங்கள் இனிது விளக்கின. அடுத்த வாரம் தீர்ப்புச் சொல்லுவதாய்க் கோர்ட்டார் கூறினார்கள்.

பத்தாம் அதிகாரம்

பிரிவும் பிரிவாற்றுமையும்

நெஞ்ச மெலிவே நினைது தடந்தோளுங்
கஞ்ச மலர்முகமுங் காணது கண்பனிப்ப
மஞ்சுதவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோனன்றளித்த
விஞ்சை பயின்று விளையாட் டயருதியோ —நைடதம்.

விசாரணை முடிந்த பிறகு அன்று மாலையிலேயே நான் காந்திமதியை அழைத்துக் கொண்டு திருச்சிக்குப் பிரயாணப்பட்டு விட்டேன். மறுநாள் பகல் பத்து மணிக்கு இரயில்வண்டி திருச்சி ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தது. நாங்கள் இருவரும் இரயில் வண்டியினின்றும் கீழிறங்கி ஒரு ஜட்கா வண்டியை வாடகைக்குப் பேசி அதிலேறி உட்கார்ந்து கொண்டு "சரவண விலாஸ" மாளிகைக்குச் சென்றோம். 'சரவண விலாஸம்' என்பது முன்னர்க் குலாம் காதிறு குடியிருந்ததும், இப்போது காந்திமதியின் தந்தை சபாநாயகம் குடியிருப்பதுமான மாளிகையின் பெயர் என்பதை வாசகர்கள் மறந்திரார்கள் என்றே நான் நம்புகிறேன். அந்த மாளிகைக்குள் நுழைந்ததும் சபாநாயகமும் அவருடைய அருமை மனைவியாராகிய சிவகாமியும் ஓடிவந்து காந்திமதியைக் கட்டித் தழுவிப் பலமுறை முத்தமிட்டுக் கொஞ்சினார்கள். அவர்களுடைய சந்தோஷத்திற்கு ஓர் எல்லை இல்லை. புத்திரியின் மீது பெற்றோர்களுக்கு எவ்வளவு முதிர்ந்த அன்பு இருக்கிறதென்பதை அவர்களுடைய செயல் அச்சமயம் இனிது

விளக்கிக் காட்டிற்று. இவ்வளவு அன்பும் அபிமான மும் சபாநாயகத்திற்காவது சிவகாமிக்காவது காந்தி மதிமீது இருக்கும் என்று நான் கனவிலும் நினைத்தே னல்லேன். அவர்கள் என்னையும் பலவாறு புகழ்ந்து பேசினார்கள். என்னாற்றான் காந்திமதி மகம்மதாலி கையிற் சிக்காமல் தப்பினாள் என்பதை அவர்கள் இனி தறிந்து கொண்டார்கள். இரண்டொரு நாள் திருச்சி யிலேயே காந்திமதியோடு தங்கியிருந்தேன்.

ஒரு நாள் காலையில் சென்னையிலிருந்து வந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையை நான் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மிகப் பெரிய எழுத்துக் களில் பதிப்பிக்கப்பட்டிருந்த விளம்பரம் ஒன்று என் கண்ணுக்குத் தற்செயலாய்ப் புலப்பட்டது. அந்த விளம்பரம் பின்வருமாறு :—

இனாம்! இனாம்!!

ஆயிரம் ரூபா இனாம்!

மாஜிஸ்டிரேட் மகம்மதாலி
என்பவரைக் கண்டு பிடிக்கும்
மனிதனுக்கு ஆயிரம் ரூபா இனாம்!

இந்த விளம்பரத்தைப்பற்றிப் ‘பத்திராதிபர் குறிப்பு’ ஒன்று பத்திரிகையின் மற்றொரு புறத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதனைப் படித்ததிலிருந்து

சென்னையில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த மாஜிஸ்டிரேட் மகம்மதாலி எவ்விதமாகவோ ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டார் என்றும், அவரைக் கண்டுபிடிப்பதற்குப் போலீஸார் எவ்வளவோ முயன்றும் அவர்களுடைய முயற்சி பயன் படாமற் போனது என்றும், வேதவதியை அவர் சுட்டுக்கொன்று விட்டார் என்று அவர்மீது கொண்டுவரப்பட்ட கேஸைத் தவிர மாஜிஸ்டிரேட் உத்தியோகம் பார்த்த காலத்தில் கவர்ன்மெண்டு சட்டத்திற்கு விரோதமாய் அவர் சில விஷயங்களில் நடந்திருப்பதற்காக வேறு சில கேஸ்களும் அவர்மீது கொண்டுவரப் பட்டிருக்கின்றன என்றும், ஆதலால் அவரைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்குக் கவர்ன்மெண்டார் ஆயிரம் ரூபா இனாம் அளிக்கத் தயாராயிருக்கிறார்களென்றும் நான் அறிந்துகொண்டேன். இவ்விஷயம் எனக்குப் பெரிதும் உற்சாகத்தைக் கொடுத்தது. எந்த விதத்திலும் மகம்மதாலியைக் கண்டுபிடித்துக் கவர்ன்மெண்டாரிடம், ஒப்புவித்துவிடவேண்டுமென்று நான் எனக்குள்ளேயே தீர்மானித்துக்கொண்டேன். இவ்விஷயத்தைப்பற்றிக் காந்திமதி ஏதும் அறியாளாதலால் அவளிடம் சங்கதியைச் சொல்லி அவளுடைய சம்மதத்தையும் பெற்றுக்கொண்டு மறுநாளை திருச்சியைவிட்டுப் புறப்பட்டுப் பல ஊர்களிலும் பிரயாணம் செய்து மகம்மதாலியை எங்கேயாவது,—எப்படியாவது,—கண்டுபிடித்துவிடுகிறது என்று நான் எனக்குள்ளேயே நிச்சயப்படுத்திக்கொண்டேன். இச்சமயத்தில் காந்திமதியும் வந்தாள்.

“நண்பரே! என் ஏதோ ஒருவகையான முகவாட்டத்துடன் இருக்கின்றீர்?” என்று காந்தி

மதி என் முகத்தை ஒரு விதமாய் உற்று நோக்கி வினவினுள்.

"கண்மணி! ஒன்றுமில்லை; இந்த விஷயத்தைப் பார்" என்று கூறி, நான் வாசித்துப் பார்த்த பத்திரிகையை அவளிடம் கொடுத்தேன். அவள் அந்த விளம்பரத்தையும் பத்திராதிபர் குறிப்பையும் படித்துப் பார்த்துவிட்டு ஒன்றுந் தோன்றுமல் ஸ்தம்பித்து நின்றுள்.

"நண்பரே! இதற்கு என் செய்வது? எந்த விதத்திலும் நாம் அந்தப் படுபாவியாகிய மகம்மதாலியைக் கண்டுபிடிக்கவேண்டும். அந்தக் கொடியோனுல் நான் அடைந்த துன்பமும் துயரமும் இன்னும் என் மனத்தைவிட்டு அகலவில்லை" என்று சிறிது நேரங் கழிந்த பின்னர் காந்திமதி என்னிடம் கூறினுள்.

"ஆம்; அவனைக் கண்டுபிடிக்க வேண்டுவது அவசியமே. எந்த விதத்திலும் அவனைக்கண்டு பிடிப்பதென்றே தீர்மானித்து, அதற்காக நான் கங்கணமும் கட்டிக்கொண்டிருக்கிறேன். ஆனுல், கண்மணி, ஒரு விஷயம் என் மனத்தைச் சிறிது வருத்துகின்றது. அஃதாவது,—உன்னைப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கின்றதே என்னும் எண்ணந்தான்." என்று நான் பதில் பகர்ந்தேன்.

"பிரிவு" என்னும் வார்த்தை காந்திமதியின் காதில் விழவே, அவள் முகத்தில் ஒருவகையான மாறுதல் உண்டாயது. அவளுடைய கண்களில் நீர்த்துளிகள் காணப்பட்டன. கபோலங்கள் சிவந்தன. ஒரு வரையறைக்கு உட்படாத பெருந்துயர சாகரத்தில் அவள் ஆழ்ந்தாள். 'குன்றம் உருண்டாற் குன்றி வழியடையாகாதவாறு போலவும் யானை தொடுவுண்ணின் மூடுங்

கலம் இல்லது போலவும், கடல் வெதும்பின் வளாவு நீர் இல்லது போலவும்' அவளுடைய துயரத்தை ஆற்றுவிப்பதற்கு எதும் சாதனம் இல்லாது போயது. அவளுடைய துயரத்தைக் கண்டு என்னுடைய மனத்திலும் ஒருவகையான துயரம் எழுவதாயிற்று. அதனை அடக்குவதற்கு நான் எவ்வளவோ முயன்றும் பயன்படாமல் அது 'பள்ளத்துவழி வெள்ளம்போல் ஓடி' அவளுடைய துயரத்தோடு கலந்துகொண்டது. சுமார் கால்மணி நேரம் வரையில் நாங்கள் இருவேமும் எதும் பேசாமல் ஸ்தம்பித்து மௌனமா யிருந்தோம். பிறகு காந்திமதியே ஒருவாறு பேசத்தொடங்கினள்.

"நண்பரே! 'பிரிவு' என்னும் சொல்லைக் கேட்கும் போதே என் உள்ளமு முடலும் ஒருங்கே நடுங்குகின்றன. அன்பரே! இதுவரையில் வெளியிடாது என் அகத்தினுள்ளே அழுத்தி வைத்திருந்த ஒரு விஷயத்தை இப்போது தங்களிடம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தாங்கள் என்மீது பெரிதும் காதல் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் முன்னரே அறிந்து கொண்டேன். தாங்கள் என்மீது காதல் கொண்டிருப்பதுபோல் நானும் தங்கள்மீது வரையற்ற காதல் கொண்டிருக்கின்றேன். ஒருவரை யொருவர் உள்ளன்புடன் நேசிக்கும் காதலர்களுக்குப் பிரிவு என்பது எவ்விதம் இருக்கும் என்பதை இனியாவது தாங்கள் அறிந்து கொள்ளுங்கள்" என்று காந்திமதி என்னிடம் மிகுந்த அன்புடனும் பரிதாபத்துடனும் கூறினள்.

"கண்மணி! நீ சொல்லுவதை நான் முற்றும் அங்கீகரிக்கிறேன். காதலர்களுக்குப் பிரிவு பெருந்துன்பத்தையே விளைவிக்கும். ஆனாலும் நீயும் நானும் காதலியும், காதலனுமாவ தெப்படி? உன்னுடைய

இயல்பும் அந்தஸ்தும் மிக உயர்ந்தன; நானே தாழ்ந்த இயல்பும் தாழ்ந்த அந்தஸ்தும் உடையவன். ஆதலால் உன்னை மனைவியாக நான் அடைதல் யாங்ஙனம்? நம் இருவர் மனமும் ஒன்றுபட்டு விட்டதாயினும் உன்னுடைய பெற்றோரும் உற்றோரும் நம் விருப்பத்திற்கு இணங்க வேண்டாமா?" என்று நான் காந்திமதியை நோக்கி வினாவினேன்.

"அன்பரே! என்னுடைய பெற்றோர்கள் தங்களுக்கு என்னை மணம்புரிந்து கொடுக்கப் பெரிதும் விரும்புவார்கள் என்றே நான் நம்புகின்றேன். அவ்விதம் அவர்கள் செய்வதற்கு ஒருகால் உடன்படாமற் போயினும் எண்வகை மணத்தினுள் ஒன்றான 'காந்தர்வம்' நம்மனோரால் தழுவப்படக் கூடியதுதானே? நாம் இருவரும் ஒருவரையொருவர் நம்முடைய முயற்சியினால் ஆதியில் சந்திக்கவில்லை. தெய்வ சங்கற்பத்தினாலேயே ஒருவரை ஒருவர் சந்தித்தோம். நம்மை அறியாமலே நமக்குள் வேட்கையும் மிகுவதாயிற்று. இவ்விதம் தெய்வ சங்கற்பத்தால் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டு ஒருவர்மீதொருவர் வேட்கை கொள்ளும் பெரும்பேற்றைப் பெற்றவர்கள் பிறருடைய அனுமதியின்றித் தாமே விவாகம் செய்துகொள்ளலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே? "காந்தர்ப்ப மென்பதுண்டாற் காதலிற் கலந்த சிந்தை—மாந்தர்க்கு மடந்தைமார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்." என்று கல்வியிற் பெரிய கம்பர் கூறியிருக்கின்றாரே? "செந்திருவை யனையாளுந் திருமாலை யனையானுஞ் சிந்தையொன்றாய்—வந்திருவர் விலோசனமுந் தடையின்றி யுறவாடி மகிழ்ச்சி கூர்ந்து—வெந்துருவ மிழந்த மதன் மீளவும் வந்திரதியுடன் மேவுமாபோற்—கந்தருவமுறை

மையினுற் கடவுளர்க்குங் கிடையாத காமந்துய்த்தார்." என்று வில்லிபுத்துரர் அறுதியிட் டுரைக்க வில்லையா? துஷ்யந்த மகாராஜன் சகுந்தலையை மணந்தும், அருச்சுனன் சித்திராங்கதையை மணந்தும் காந்தர்வ மணத்தின் பெருமையை நமக்கு விளக்கி யிருக்கும்போது நாம் ஏன் அஞ்சவேண்டும்? ஆதியில் நாம் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்தபோதே, நம்முடைய கண்கள், நம்மைக் கணவனும் மனைவியுமாக நிச்சயித்து விட்டன. "கண்ணொடு கண்ணிணை `நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்—என்ன பயனுமில." என்று ஆசிரியர் திருவள்ளுவ நாயனுர் கூறியிருப்பதும், "நாட்டமிரண்டு மறிவுடம்படுத்தற்குக்—கூட்டி யுரைக்குங் குறிப்புரையாகும்." என்று ஆசிரியர் தோல்காப்பியனுர் அறுதியிட்டிருப்பதும் தாங்கள் அறிந்த விஷயங்களேயாகும். ஆதலால் தங்கட்கு நான் மனைவியாவதற்கு யாது தடை உளது? ஒன்றுமில்லை." என்று காந்திமதி என்னிடம் கூறினுள்.

"கண்மணி! மிகவும் சந்தோஷம்; "யாழோர் கூட்டம்" என்றும், "களவோழுக்கம்" என்றும் பண்டைத் தமிழ் நூல்களால் விதந்து கூறப்படும் இந்தக் காந்தருவ மணம் நாம் செய்துகொள்ளக்கூடிய மணமேயாகும். ஆனல் எப்போது நாம் இந்த மணம் செய்துகொள்ளலாம் என்பதுதான் எனக்குப் புலப்படவில்லை." என்று நான் கூறினேன்.

"இப்போதே!" என்று காந்திமதி மிக விரைவாய் ஒரே வார்த்தையில் பதில் உரைத்தாள்.

காந்திமதிக்கு இப்படிப்பட்ட ஓர் எண்ணம் வந்தது திருவருட்செயலே என்று நினைத்து, அவளுடைய விருப்பத்திற்கிணங்கி அந்த நிமிஷத்திலேயே

அவளை யான் காந்தருவ முறையில் மணஞ்செய்து கொண்டேன். அதற்கு அறிகுறியாக நாங்கள் இருவரும் கணையாழி யாற்றிக்கொண்டோம். இச்சம்பவம் நடந்து இரண்டு மூன்று தினங்கள் கழிந்தன. ஒரு நாள் மறுபடியும் நான் காந்திமதியை நோக்கிக் கண்மணி! மாஜிஸ்டிரேட் மகம்மதாலியைக் கண்டுபிடிப்பதற்காக நான் வெளியூர் செல்லவேண்டியது இன்றியமையாததாக இருக்கின்றது." என்று அன்புடன் கூறினேன்.

"நண்பரே! இப்போது நீங்கள் என்னைப் பிரிந்து போதல் சிறிதும் தருமமாகாது. ஏனெனில், இன்னமும் நாம் களவொழுக்கத்திலிருந்து வருகின்றோமேயன்றி, உற்றாரும் உறவினரும் அறியும்படி கடிமணம் செய்துகொண்டு இல்லறத்தில் அமரவில்லை. களவொழுக்கத்தி லிருக்கும்போது தலைவன் எக்காரணம் பற்றியும் தலைவியைப் பிரிந்துபோதல் கூடாதென அகப்பொருள் இலக்கணம் வரையறுத் துரைக்கின்றது. "கற்பினுட் பிறவே கடிவரை யின்றே" என்று இறையனார் அருளிச்செய் திருக்கின்றமையால் களவினுட் பிறவு கூடா தென்பது இனிது புலப்படவில்லையா? ஆதலால் தாங்கள் இப்போது வெளியூருக்கு, என்னை மாத்திரம் இங்கு விடுத்துச் செல்லலாகாது" என்று காந்திமதி பகர்ந்தாள்.

"கண்மணி! நீ உரைப்பது முற்றும் நியாயமே. ஆனாலும் கால இயல்பையும் நாம் ஒரு சிறிது கவனிக்கவேண்டும். நமக்குப் பயிரங்கமாய் விவாகம் நடப்பதற்கு இன்னும் சிறிதுகாலம் செல்லும். அதற்குள் மகம்மதாலியின் கதி யாதாகுமோ? அவனை விரைவில் சிறிதும் காலந் தாழ்த்தாமல் கண்டுபிடிக்கவேண்டும்.

"ஓதல் காவல் பகைதணி வினையே—வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென் றங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே." என்னும் விதியினால் ஒரு கணவன் கல்விகற்கும் பொருட்டும், நாடுகாத்தற் பொருட்டும், தூதுபோதற் பொருட்டும், அரசர்க் குதவி செய்தற் பொருட்டும், பொருளீட்டற் பொருட்டும், பரத்தை விருப்பின் பொருட்டும் மனைவியைப் பிரிந்து வெளியூர் செல்லலா மென்பது உள்ளங்கை நெல்லிக் கனியென இனிது புலப்படுவதால், அரசர்க் குதவி செய்தலாகிய ஒரு தொழிலை மேற்கொண்டு நான் ஏன் வெளியூர் செல்லலாகாது? மாஜிஸ்டிரேட் மகம்மதாலியைக் கண்டு பிடித்து அரசாங்கத்தாரிடம் ஒப்புவித்தல் அரசனுக்குச் செய்யும் உதவிதானே? ஆதலால் நான் போய் விட்டு விரைவில் திரும்பிவிடுகின்றேன். அதுவரையில் நீ வருந்தாமல் இரு" என்று நான் காந்திமதிக்கு எடுத்துரைத்தேன்.

"நாதா ! தாங்கள் மனந் துணிந்து என்னைப் பிரிந்து அயலூர் செல்வதற்கு இசைந்துவிடுகிறீர்கள். இந்த நிலவுலகத்திலே மக்களாய்ப் பிறந்தோர் அனுபவிக்கும் இன்பத்தினுட் சிறந்த பேரின்பம் சிற்றின்பமே ! ஆனால் இந்தச் சிற்றின்பம் ஒரு கணம் மாத்திரம் நிலைபெற்று மறுகணத்தே அழிந்தொழியும் இயல்பினதா யிருக்கிறது. இந்த இன்பத்தைப் புருஷர்களுடன் ஸ்திரீகள் அனுபவிப்பதைச் சிறிது ஊன்றிநோக்கினாலோ, அந்த ஸ்திரீகளினுடைய அனுபவமும் சுகமும் தினையினும் சிறிதாக இருக்கின்றன. ஆனால் புருஷர்களுடைய பிரிவினால் ஸ்திரீகளுக்கு உண்டாகும் வருத்தமோ அகன்ற வானினும் அதிகமாகவே அகன்றிருக்கிறது. மாதர்களுக்குக் கணவன்மார்களுடைய

பிரிவினுல் உண்டாகும் துயரத்தைப்போல் ஆண்மக்க ளுக்கு உண்டாவதில்லை. புருஷர்கள் தங்கள் நாயகிகள் மீது எவ்வளவு வரையற்ற காதல் உடையவர்களா யிருந் தாலும், அதனை வெளியிற் காட்டாமல் அடக்கிக் கொள்ளுகிருர்கள். ஆனல் ஸ்திரீகளுக்கோ அம்மாதிரி யான சக்தி ஒருசிறிது மில்லை. புருஷர்களுடைய பிரி வாற்ருமையால் ஸ்திரீகள் சில சமயங்களில் உயிர் துறத்தலு முண்டு. இதற்கு அஞ்சியே புருஷர்கள் தங்கள் மனைவிமார்களைப் பிரிவதற்குப் பெரும்பாலும் ஒருப்படுவதில்லை. ஒருகால் பிரிந்துபோம்படி நேர்ந் தாலும் மிக விரைவிலேயே திரும்பிவிடுகின்ருர்கள். "முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்—வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய—வாரேன் வாழிய நெஞ்சே." என்று பட்டினப்பாலையில் ஆசிரியர் உருத்தி ரங்கண்ணனர் கூறியிருப்பது இந்த உண்மையினை வலியுறுத்தும். ஆதலால் நீங்கள் வெளியூர் செல்லவே கூடாது;—ஒருகால் சென்ருலும் விரைவில் திரும்பிவிட வேண்டும்" என்று காந்திமதி என்னிடம் கூறினுள்.

காந்திமதி இவ்வளவு கூறியதே எனக்குப் பெருந் திருப்தியா யிருந்தது. விரைவில் திரும்பி விடுவதாக அவளிடம் கூறி அவளுக்கு வேண்டிய தேறுதல் உரைத்துவிட்டு நான் 'சரவண விலாஸ' மாளிகையி லிருந்து மறுநாள் அதிகாலையில் புறப்பட்டேன். மலைக் கோட்டைக்குச் சென்று மோஹனங்கியின் மாளிகை யாகிய 'பத்ம விலாஸ'த்தில் விசாரித்தால் மாஜிஸ்டி ரேட் மகம்மதாலியைப் பற்றிய விஷயங்கள் எவையே னும் தெரிதல் கூடும் என்னும் ஓர் எண்ணம் எனக்கு உதிக்கலாயிற்று. உடனே நான் அந்த இடத்திற் குச்சென்று மோஹனங்கியின் வேலைக்காரிகள் சிலரை

விசாரித்தேன். தங்களுக்கு ஏதுமே தெரியாதென்றும், மோஹனுங்கியின் புத்திரியாகிய விசாலாட்சியும், ஜமீன்தாருடைய பௌத்திரியாகிய சாந்தையும் மாடி மீது இருக்கிறார்கள் என்றும், அவர்களை விசாரித்தால் ஏதேனும் உண்மை தெரியும் என்றும் வேலைக்காரிகள் பதில் கூறிவிட்டார்கள். நான் உடனே மாடிக்குச்சென்று விசாலாட்சியையும் சாந்தையையும் சந்தித்தேன். அவர்களுடைய முகத்தில் துயரம் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. ஒருவரோடொருவர் இரகசியமாக வார்த்தையாடிக்கொண் டிருந்தவர்கள் என்னைக் கண்டவுடன் திடீரென்று பேச்சை நிறுத்திக்கொண்டு "வைத்தியரே! வைத்தியரே! வரவேண்டும்!" என்று உபசாரம் கூறினர்கள். குடும்ப யோகக்ஷேமங்களைப் பற்றி சிறிது நேரம் அவர்களோடு நான் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பிறகு விசாலாட்சியை நோக்கி, "அம்மா! உன்னுடைய தாயார் இப்போது சென்னையில்தான் இருக்கின்றளோ? மாஜிஸ்டிரேட் மகம்மதாலி ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டாராமே? இவ்விஷயம் உண்மைதானு?" என்று கேட்டேன்.

"ஐயா! என்னுடைய அன்னை சென்னையில்தான் இருக்கிறுள். அவளுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமா யிருக்கிறது. மாஜிஸ்டிரேட் மகம்மதாலியைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்ட விஷயம் உண்மையே யாகும். அவர் இப்போது வடக்கே பஞ்சாப் தேசத்தின் தலைநகராகிய லாகூரில் மறைவாக வசித்து வருகிறுர் என்று எனக்குச் சென்னையி லிருந்து வந்த ஒரு கடிதத்தால் அறிகிறேன். ஐயா, இன்று இங்கே தங்கியிருங்கள். தங்களிடம் சில விஷயங்கள் விவரமாய்ப்

பேசவேண்டும்.'' என்று கூறி விசாலாட்சி என்னை வேண்டினாள். அவளுடைய வேண்டுகோளுக்கு நானும் இணங்கினேன்.

அழகிற் சிறந்ததும் வயதிற் குறைந்தும் விளங்கும் இளம் பெண்களுடைய வேண்டுகோளை மறுப்பது மனித சுபாவமன்று என்பதை அறிந்தும், அவளுடைய விருப்பத்திற் கிணங்கி இரண்டொருநாள், தங்கினாற்றான் மசும்மதாலியைப் பற்றியும் மோஹனாங்கியைப்பற்றியும் விவரமாக ஏதும் அறிந்து கொள்ளக் கூடும் என்பதை உணர்ந்தும் நான் விசாலாட்சியினுடைய வேண்டுகோளுக்கு இணங்கினேனே தவிர வேறில்லை.

பதினோராம் அதிகாரம்

குலாம்காதிறுவின் பூர்வீகம்

தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றெறுக்கும்—தெய்வ
மிலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.— நீதிநெறிவிளக்கம்.

"வைத்தியரே! சைனியத்தில் தளகர்த்தராயிருந்து பிறகு உபகாரச் சம்பளம் பெற்றுவந்த என்னுடைய தந்தை என் அன்னையினால் தமக்குண்டான அவமானத்தைச் சகிக்க முடியாமல் மனமுடைந்து அதே கவலையினால் வியாதி பிடித்து வருந்திச் சில மாதங்கட்கு முன்பு விண்ணுலகம் சென்றார். தவிர, வயோதிகப் பருவத்தையும் அவர் மரண மடைந்ததற்கு ஒரு காரணமாகச் சொல்லலாம். என்னுடைய க்ஷேமலாபங்களில் அதிகமான கவலையுடையவர்கள் என்னுடைய தந்தையும், அன்னையும், என் அன்னை நண்பர்களான வேதவதியும் சாந்தையும், மாஜிஸ்டிரேட் மகம்மதாலியுமே யாவார்கள். இவர்களுள் என்னுடைய தந்தையோ இறந்துபோனார்; என் அன்னை, அரசாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சத்திரத்திலிருந்து,—அஃதாவது சிறைச்சாலையிலிருந்து,—இனி வெளிவருவாள் என்று எனக்குத் தோன்றவில்லை. வேதவதியோ ஜெயிற் கட்டிடத்துள் துப்பாக்கியாற் சுட்டுக் கொல்லப்பட்டு உயிர்துறந்தாள் என்பதை நீர் அறிவீர். சாந்தைக்குத் திருநெல்வேலியில் ஒரு பிரபல

தனவான் வீட்டில் விவாகம் நடந்துவிட்டது. இனி அவள் இந்த ஊரில் இருக்கமாட்டாள். என்னிடம் சொல்லிக்கொண்டு போவதற்காகவே அவள் இப்போது இங்கே வந்திருக்கிறாள். இன்று இரவு புறப்பட்டு அவள் திருநெல்வேலிக்குப் போகின்றாள். ஆதலால் எனக்கு இனிக் கதியாவார் எவருமிலர்,—உம்மைத் தவிர !'' என்று விசாலாட்சி தன் கண்களில் நீர் ததும்ப மிகுந்த வருத்தத்தோடு கூறினாள். அவளுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனும், அவளுடைய பரிதாபமான நிலைமையைப் பார்த்தவுடனும் எனக்கு அவள் விஷயத்தில் இரக்கம் பெரிதும் உண்டாயிற்று. ''என்னாலியன்ற உதவியைச் செய்வதற்கு நான் தயாராயிருக்கின்றேன். ஆதலால், விசாலாட்சியே, நீ கவலைப்பட வேண்டாம்'' என்று நான் அவட்கு உறுதி கூறினேன். சாந்தையும் அவளை ஆதரிக்கவேண்டியது அவசியம் என எனக்குச் சிபார்சு செய்துவிட்டு அவளிடமும் என்னிடமும் விடை பெற்றுக்கொண்டு சென்றாள்.

"விசாலாட்சியே! உன்னை ஒரு விஷயம் மாத்திரம் கேட்க வேண்டுமென நான் விரும்புகிறேன். அஃதாவது உன்னுடைய தாயார் மோஹனுக்கும் மாஜிஸ்டிரேட் மகம்மதாலிக்குமுள்ள இரகசியம் எத்தகைய தென்பதை உன்னைக் கேட்டுக், கூடுமானால், தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் விருப்பந்தான்'' என்று நான் விசாலாட்சியிடம் கூறினேன்.

" ஆத்மநாதனே ! அந்த இரகசியத்தைச் சொல்ல வேண்டுமானால், ஒரு குடும்பத்தைப்பற்றிய சரித்திரம் முழுவதையும் விவரமாக எடுத்துரைக்க வேண்டுவது அவசியமாகிறது. நான் கேள்விப்பட்ட விஷயங்களி

லிருந்தும், என் தாயாரிடமிருந்த சில கடிதங்களைப் பிறகு நான் பார்க்க நேர்ந்ததிலிருந்தும், எனக்குப் புலப்பட்ட சில குறிப்புகளைக் கூறி அச்சரித்திரத்தை ஒருவாறு முடிக்கின்றேன். காந்திமதியின் பாட்டனாரும், அதாவது அவளுடைய தந்தையாகிய சபாநாயகத்தின் தந்தையும், என்பாட்டனாரும், அதாவது என் பிதாவினுடைய தந்தையும் ஒரே, தகப்பனுக்கு இரண்டு மனைவியர்கள் வயிற்றில் பிறந்த புத்திரர்களாம். அதாவது என் பாட்டனார் மூத்த மனைவி வயிற்றிலும், காந்திமதியின் தந்தையாகிய சபாநாயகமும், இறந்துபோன வச்சிரபாணியின் தகப்பனாரும் இளைய மனைவியின் வயிற்றிலும் பிறந்தவர்களாம். என்னுடைய பாட்டனார் அந்தக் காலத்திலேயே தமக்குரிய பாகத்தைப் பெற்றுக்கொண்டு வடக்கே உத்தியோகத்தின்பொருட்டுப் போய் விட்டாராம். என்னுடைய தந்தை என் பாட்டனாருக்கு ஏகபுத்திரரே யாவார். என் தந்தைக்கு இளம்பருவத்திலேயே விவாகம் செய்விக்கப்பட்டதாம். விவாகம் நடந்த சில வருஷங்கள் கழித்து என் பாட்டனாரும் பாட்டியாரும் துறக்க உலகம் புகுந்தார்கள். பிறகு என் தந்தை பட்டணத்தில் சிப்பாய் வேலையில் அமர்ந்து நாளடைவில் தளகர்த்தர் வேலைக்கு உயர்த்தப்படும்படியான ஒரு பதவியை வகித்தார். அவருக்கு என்னைத் தவிர வேறு ஆண்மக்களாவது பெண் மக்களாவது இல்லை. என்னுடைய அன்னையாகிய மோஹனாங்கிக்கு நெருங்கிய உறவினர்கள் எவருமிலர்: அவளுடைய பெற்றோர்கள் அவளுக்கு விவாகமான மறு வருஷத்திலேயே காலஞ்சென்று விட்டார்களாம். மற்ற உற்றார் உறவினர்கள் அவளை ஜாதிப்பிரஷ்டம் செய்து விட்டார்கள். இதற்

குக் காரணம் குலாம்காதிறுவே. குலாம்காதிறு என்னும் பெயருடைய வைத்தியர் உண்மையில் மகம்மதியர் அல்லராம்; அவர் இந்து மதத்தினரே யாவராம். ஒரு வழியில் அவர் என்னுடைய அன்னைக்கு உறவினராம். அவர் மிகுந்த ஏழ்மையான நிலைமையில் இருந்தபடி யாலும், மகம்மதிய மதத்திற்கு வந்துவிட்டால் அவருக்கு ஏராளமான ஆஸ்தியையும் கொடுத்துத் தம்முடைய புத்திரியையும் விவாகம் செய்து கொடுப்பதாக ஒரு மகம்மதிய குருக்கள் அவருக்குக் கூறியபடியாலும் கதிர்வேல் என்னும் இயற்பெயர் கொண்ட அவர் உடனே மகம்மதிய மதத்தைத் தழுவினராம். அவருக்குக் கதிர்வேல் என்னும் இயற்பெயர் ஒழிந்தது; குலாம்காதிறு என்னும் புதிய பெயர் இடையிலே ஏற்பட்டது. அவ்விதம் அவரை மகம்மதிய மதத்தைத் தழுவும்படி வற்புறுத்தியவர் யாரோ வெனின்,—அவரே மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் தந்தையாவார். மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் தந்தை மகம்மதிய மதத்தில் பெரிதும் அழுத்த முடையவராம். ஊரூராய்ச் சென்று மகம்மதிய மதத்தின் சிறப்பைப்பற்றிப் பிரசங்கங்கள் புரிவதும், ஏழை எளியவர்களாயும் தாழ்ந்த வகுப்பினராயும் இருக்கின்ற ஜனங்களைப் பொன்னாலும், பெண்ணாலும் வசீகரித்து ஏமாற்றி அவர்களை மகம்மதியர்களாக்குவதுமே மகம்மதாலியின் தந்தைக்குத் தொழிலாம். 'கதிர்வேல்' என்னும் 'குலாம் காதிறு'வுக்கு மகம்மதாலியின் தந்தை தம்முடைய புத்திரியை விவாகம் செய்துகொடுத்து ஏராளமான ஆஸ்தியும் அளித்தாராம். அந்தப் பணத்தைக்கொண்டு குலாம்காதிறு வைத்தியக்கல்வி கற்று வைத்தியராய் அமர்ந்தார் என்றும் சொல்லப்படுகிறது. கதிர்வேலிடம் ஏராளமான

செல்வம் இருக்கிறதென்னும் பிறழ்ந்த உணர்ச்சியினாலும், அவருடைய மூத்தபுத்திரனுக்கு என்னை விவாகம் செய்து கொடுத்துவிட்டால் அந்த ஆஸ்தி எனக்குக் கிடைத்துவிடும் என்னும் பேராசையினாலும் என்னுடைய அன்னை, அவர் மகம்மதிய மதத்திற்கு மாறி குலாம்காதிறு என்று பெயர் வைத்துக்கொண்ட பின்புங்கூட, அவருடனும் அவர் மனைவி மக்களுடனும் எப்போதும்போலவே உறவாடிவந்தாள். என் அன்னையினுடைய இச்செயலைக் கண்ட உற்றார் உறவினர்கள் குலாம்காதிறுவை ஜாதிப்பிரஷ்டம் செய்து வைத்திருந்தது போலவே, அவளையும், என் தந்தையையும், என்னையும் ஜாதிப்பிரஷ்டம் செய்யலானார்கள். குலாம்காதிறுவினுடைய மனைவி,— அஃதாவது மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் சகோதரி, இறந்துபோன ஒரு வருஷங் கழித்து அந்த ஏக்கத்தினாலேயே திடீரென்று குலாம்காதிறு இறந்துபோனதையும், அவருடைய இரண்டு புத்திரர்களும் ஒரு புத்திரியும் இரண்டு மூன்று மாதம் வரையில் உம்முடைய ஆதரவிலிருந்து பிறகு மாஜிஸ்டிரேட் மகம்மதாலி போஷணையில் இருந்துவந்ததையும், குலாம்காதிறுவுக்கு ஏராளமான கடன் இருந்ததே தவிர ஆஸ்தி சிறிதுமில்லை என்பதையும் நீர் அறிவீரன்றோ? உம்மைப்போலவே என் அன்னைக்கும் இந்த விஷயங்கள் பிறகு புலப்பட்டன. உண்மை புலப்பட்ட பிறகு என்னைக் குலாம்காதிறுவின் மூத்த புத்திரற்கு விவாகம் செய்துகொடுக்க வேண்டுமென்று முதலில் அவள் கொண்டிருந்த எண்ணம் அடியோடு ஒழிவதாயிற்று. உமக்கு என்னை விவாகம் செய்துகொடுக்க வேண்டுமென அவள் பிறகு கருதினாள். அக்குறிப்பை அவள் இரண்டொரு வார்த்தைகளால் உம்மிடம் புலப்

படுத்தினதாகவும் நான் கேள்வியுற்றேன். ஆனால் நீர் அதற்கு இணங்காமல் சபாநாயகத்தின் புத்திரியான காந்திமதியைக் காதலித்து அவளையே விவாகம்செய்து கொள்ள முயல்கின்றீர் என்று அவள் அறிந்துகொண்டாள். உமக்கும் காந்திமதிக்கும் ஏற்பட்டுள்ள காதலுரிமையை எந்த விதத்திலாயினும் தடுத்துவிட்டால் பிறகு என்னையே உமக்கு விவாகம் செய்துகொடுத்து விடலாம் என்பது என் அன்னையின் கருத்துப்போலும்! அந்த எண்ணத்தை அவள் தன் மனத்தில் வைத்துக் கொண்டு காந்திமதிக்கும் உமக்கும் பலவகையான இடையூறுகள் செய்துவந்திருக்கின்றாள். அந்த விஷயங்கள் உமக்குத் தெரிந்தனவேயாதலால் அவைகளைப் பற்றி நான் விரித்துக் கூறவேண்டியதில்லை. மாஜிஸ்டிரேட் மகம்மதாலி அவளுடைய சூழ்ச்சியான செயல்களுக்கு உடனிருந்து பெரிதும் உதவிசெய் திருக்கின்றார் என்பதையும் நீர் அறிவீர். வேதவதி, சாந்தை, கோவிந்தன் முதலியவர்கள் என் அன்னையினுடையவும் மாஜிஸ்டிரேட் மகம்மதாலியினுடையவும் வற்புறுத்துதலுக்காக இச்சதிச்செயல்களில் கலந்தார்களே தவிர வேறில்லை என்றும் நான் குறிப்பால் அறிகின்றேன். இப்போது என் அன்னையின் நிலைமையும் மாஜிஸ்டிரேட் மகம்மதாலியின் நிலைமையும் எவ்விதம் இருக்கின்றன என்பதையும் நீர் அறிவீர். ஆதலால் இன்னும் அதிகமாக நான் உமக்கு ஏதும் சொல்ல வேண்டியதில்லை. இதுவரையில் நான் கூறிய குடும்ப சரித்திரத்தினாலேயே மாஜிஸ்டிரேட் மகம்மதாலிக்கும் என்னுடைய அன்னை மோஹனாங்கிக்கும் ஏற்பட்டுள்ள இரகசியம் எத்தகையதென்பது உமக்கு இனிது

விளங்கியிருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன்.” என விசாலாட்சி எனக்கு எடுத்துரைத்தாள்.

விசாலாட்சி கூறிய இந்தச் சரித்திரக் குறிப்பைக் கேட்டவுடன் எனக்கு அதிசயமும் துயரமும் ஏககாலத்தில் நிகழலாயின. விசாலாட்சியினுடைய பரிதாபகரமான நிலைமை எனக்கு வருத்தத்தை விளைவித்தது. குலாம்காதிறுவினுடைய செயல் எனக்கு அதிசயத்தை விளைத்தது. பெண்ணுக்கும் பொன்னுக்கும் ஆசைப்பட்டு ஒருவன் தன்னுடைய மதத்திலிருந்து விலகி இன்னொரு மதத்தைத் தழுவினால் அவனுடைய அறியாமையைக் கண்டு எவர்தாம் நகையாடார்? அதிலும் எல்லா மதங்களுக்கும் தாயகமாயிருந்து எல்லாத் தத்துவ உண்மைகளையும் ஐயந்திரிபற விளக்கும் மேலான மதம் “இந்துமதம்” என்று அந்நிய மதஸ்தர்களாலும் அந்நியதேசத்தார்களாலும் ஒருங்கே புகழப்படும் இந்துமதத்திற்குப் பிரதான அங்கமாகிய சைவசமயத்தில் பிறந்த ஒருவன் அச்சமயத்தின் உயர்வை ஒருசிறிது மறியாமல் மிகவும் சாமானியமான ஒரு மதத்தைத் தழுவினால் அவனை எவர் தாம் பரிகசியாதிருப்பர்? ஆகவே, சைவசமயத்திற் பிறந்துவளர்ந்த ‘கதிர்வேல்’ அந்த மெய்ச் சமயத்தை விடுத்து மகம்மதிய மதத்தைத் தழுவிய ‘குலாம்காதிறு’வாக மாறியது எனக்கு அதிசயத்தை விளைவித்தது பெரிதும் பொருத்தமேயாம். கடவுள் ஒருவர் உண்டு என்பதிலும், ஆன்மா என்பதொன்று உண்டு என்பதிலும் ஆதியில் எனக்கு ஒருசிறிதும் நம்பிக்கையில்லை என்பது உண்மையேயானாலும், நாஸ்திகமதக் கொள்கைகளையே அதிகமாக நம்பும் நாஸ்திகர்களுள் தலைசிறந்த நாஸ்திகன் யானே என்பது உண்மையே யானாலும் நாளடை

வில் அந்தக் கொள்கைகள் எல்லாம் மாறிவிட்டன. ஆஸ்திக மதப்பற்று பெரிது வாய்ந்த உண்மைச் சைவனாக நான் மாறிவிட்டேன். அவ்விதம் மாறியது காந்திமதியின் பெரு முயற்சியினாலேயே என்பதை நான் வாசகர்கட்குச் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில், நான் சரீர அமைப்பைப் பற்றியும் சரீரத்துள் அமைந்திருக்கின்ற உட்கருவிகளைப் பற்றியும் காந்திமதிக்கு விவரமாய் எடுத்துக்கூறி சம்பாஷித்துக் கொண்டிருந்த போது 'கடவுள் ஒருவர் உண்டென்பதையும் ஆத்மா ஒன்று உண்டென்பதையும் நம்பமுடியா' தென்று வற்புறுத்திக் கூறியதையும், அதற்குக் காந்திமதி 'வைத்தியரே! இருக்கட்டும்; இவ்விஷயங்களைக் குறித்து மற்றொருசமயம் உம்மிடம் விரிவாகப்பேசி உம்மை நம்பும்படி செய்கிறேன்' என்று கூறிச் சபதமிட்டதையும் வாசகர்கள் அறிவார்கள். காந்திமதி தான் செய்த சபதப்படியே பல சமயங்களில் என்னோடுவாதித்து அவளுடைய கொள்கைகளில் எனக்கும் நம்பிக்கை உண்டாகும்படி செய்து விட்டாள்.

"கடவுள்" என்னும் செழும்பொருள் ஒன்று இருக்கின்ற தென்பதும், அது சுத்த ஞானமயமாய், இன்பமயமாய், அருள்மயமாய் விளங்குவதா மென்பதும், அவ்விதம் விளங்கும் பதிப்பொருள் ஒன்றேயாயினும் ஆன்மாக்கள் பொருட்டு அது தான் செய்யும் பஞ்சகிருத்தியத்திற்கு ஏற்பப் பல பெயர் பெறும் என்பதும், முத்திறப்பட்ட ஆன்மாக்களுக்கும் அருள் புரிய வேண்டி அப்பதிப்பொருள் உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூவகைப்பட்ட திருமேனிகளைக்கொள்ளு மென்பதும், இப்பதிப் பொருளின் திருவருள் பலத்தால் முக்தியடைய வேண்டிய ஆன்மாக்

கள் எண்ணிறந்தன வென்பதும், இவையும் கடவுளைப் போல் அநாதி நித்தியமாய் இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்றரிய சக்திகளை உடையனவாய் இருப்பினும் கடவுள் பாசரகிதராய் இருப்பது போலிராமல் இவை பாசசகிதமாய் ஆணவம் என்னும் மலத்திற் கட்டுண்டு வருந்துகின்றமையால் இவை இறைவனோடு ஒரு சிறிதும் சமமாவான் செல்லா தென்பதும், இந்த ஆன்மாக்களின் இயற்கை அறிவை விளங்கவொட்டாமல் தடுத்து மறைத்து நிற்கும் ஆணவம் என்னும் கொடிய இருள் முழைஞ்சிலிருந்து ஆன்மாக்களை வெளியேற்றி இரட்சிப்பதற்காகக் கடவுள் மாயை என்னும் அதிசூக்குமமான சடப்பொருளிலிருந்து ஆன்மாக்களுக்குப் புல் முதல் தேவர் இறுதியாகவுள்ள எண்ணிறந்த சரீரங்களையும், இச்சரீரங்கள் வசிப்பதற்காக எண்ணிறந்த உலகங்களையும் சிருஷ்டித்துக் கொடுக்கிறார் என்பதும், சரீரத்தின் வழியாகவே ஆன்மா அறிவிளக்க மெய்தி மெய்ப்பொருளான இறைவனை அடைய வேண்டுமாதலாலும், சரீரத்திற்குப் புறம்பாய் அது தனித்து நிற்கும்போது அதற்கு அறிவு விளக்கமில்லையாதலாலும், மெய்ப்பொருளை அறிவதற்கு உடம்பு பெருஞ் சாதகமாய் இருத்தலாலும், மெய்ப்பொருளை அறிவிக்கும் உடம்புக்கு 'மெய்' என்று ஆன்றோர் பெயரிட்டது பெரிதும் பொருத்தமாம் என்பதும், இந்த ஆன்மாக்கள்,—அதாவது ஆணவ அந்தகாரத்தில் அழுந்திக் கிடக்கும் ஆன்மாக்கள்,—மாயை என்னும் சடப்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட சரீரங்களைப் பெற்று பூமியிற் பிறந்தவுடன் இறைவனுடைய திருவருட்சக்தியானது 'பசி' என்னும் கொடிய உதராக்னிமூலமாய் ஆன்மாவின்முயற்சியை ஒருசிறிது எழுப்பி

விட அதுமுதல் அந்த ஆன்மாக்கள் இயற்கையாகவே தமக்குள்ள இச்சாஞான கிரியைகளால் பலவகைப்பட்ட கருமங்களை இந்த உலகத்திலும் வேறு உலகங்களிலும் செய்து, அக்கருமங்களுக்கு ஏற்றபலனை நுகர்ந்து ஆணவமலநீக்கம் பெறுகின்றன என்பதும், இக்கருமங்கள் நல்வினை, தீவினை, என்று இருவகைப்படும் என்பதும், இவைகட்கு ஏற்ற பலன்கள் முறையே புண்ணியம், பாவம் என இருவகைப்படும் என்பதும், இவைகளை அனுபவித்தற்குரிய இடங்கள் முறையே சுவர்க்கம், நரகம் எனப்பெயர் பெறும் என்பதும், இவ்வான்மாக்கள் தாம்செய்யும் கருமங்களுக்கு ஏற்ப பலனை நுகர்ந்து இறுதியில் ஆணவ மல நீக்கமும் முத்திப் பேறும் அடைவதற்கு ஒரு பிறப்புப் போதாமல் பல பிறப்புகள் வேண்டியிருத்தலால் ஆன்மாக்களுக்கு முற்பிறவி பிற்பிறவி உண்டு என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாம் என்பதும், இந்த ஆன்மாக்களில் பல ஆணவமலம் ஒன்றே உடையவைகளாயும், வேறு பல ஆணவம், மாயை என்னும் இரண்டு மலங்கள் உடையவைகளாயும், மற்றும் பல ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று மலங்களும் உடையவைகளாயும் இருக்கின்றன என்பதும், இம்மலங்களின் இருப்புக்கு ஏற்ப ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர், என்று முத்திறப்படும் என்பதும், இந்த ஆன்மாக்கள் இறைவனை வழிபட்டு அவருடைய பேரானந்தப் பெருக்கான முத்தி இன்பத்தை அடைவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குபடிகள் இருக்கின்றன வென்பதும், இந்த நான்கு படிகளுள் ஒன்றன்பாற்படும் பக்தி இறைவனை எளிதிற்காட்டும் பெருமையுடையதாம் என்பதும்,

ஆதலால் மக்களாய்ப் பிறந்தோர் இறைவனிடத்து பக்தியும், அதனோடு ஒப்புமைபெற்ற ஜீவகாருண்ணியத்தை ஏனைய ஜீவர்களிடத்தும் செலுத்தி எடுத்த பிறவியைப் பயன்படுத்தவேண்டுமென்பதும் பிறவும் காந்திமதி மூலமாய் நான் அறிந்துகொண்ட இந்துமத உண்மைப் போதனைகளாகும்.

"நல்லது விசாலாட்சி! உன்னுடைய வாய்மொழிகளைக்கொண்டு 'குலாம்காதிறுவின் பூர்வீகம்' இத்தகையதென்பதை நான் விவரமாய் அறிந்துகொண்டேன். கிறிஸ்தவப் பாதிரிமார்களுடைய வெளிப்பகட்டான போதனையிலும் பிரசங்கத்திலும் மயங்கி எத்தனையோ இந்துக்கள் கிறிஸ்வதர்களாகி விடவில்லையா? கிறிஸ்தவ மதத்திற்குத் திருப்பப்பட்ட இந்துக்களுடைய நிலைமையைக் கவனித்தால் இரகசியம் விளங்கும். அதாவது பறையர், ஈழக்குலச்சான்றார், பள்ளர், முதலான இழிந்த ஜாதியாரே,— அதாவது இழிந்த ஜாதியார் என்று நம்மவர்களால் புறக்கணிக்கப்படும் நம்முடைய சகோதரர்களே —பெரும்பாலும் கிறிஸ்தவமதத்தில் பிரவேசிக்கிறார்கள். இவர்கட்குப் போதிய கல்வி அறிவு இல்லையாதலால் நம் இந்துசமய உண்மைகள் ஒரு சிறிதும் இவர்கட்குத்தெரியா. தவிர இவர்களில் பெரும்பாலார் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டுச் சோற்றுக்கும் துணிக்கும் வழியில்லாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். நம்மவர்களோ இவர்களைத் 'தாழ்ந்த ஜாதியார்' என்று இகழ்ந்து இவர்களைக் கண்டாலும் காததூரம் விலகிச்செல்கின்றார்கள். ஒரு மனிதன் கல்வியறிவில்லாதவனாயும், தரித்திரத்தால் பீடிக்கப்படுபவனாயும், தன் சமூகத்தாரால் ஆதரிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுபவனாயு மிருந்து அலைகடற்றுரும்

பெனத் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது புறமதஸ்தர் ஒருவர் வந்து அவனை அன்புடன் அழைத்து அவனுக்குக் கல்வியை இலவசமாய்ப் போதித்துத் தம் சமய உண்மையை விளக்கிக்காட்டியும், பொன்னையும் பெண்ணையும் பெரும்பதவியையும் அளித்து அவனுடைய தரித்திரத்தைத் தரித்திருக்கவொட்டாமல் அடித்துவிரட்டியும் உபகரித்தால் அவன் தன்னுடைய மேலான மதத்தைக் கைவிட்டு அந்நியமதத்திற் பிரவேசியாதிருப்பனோ? ஆதலால் குற்றம் நம்மவர்களிடமே இருக்கிறது. நம்மவர்கள் பிறமதஸ்தர்களைப் போல் தாழ்ந்தஜாதியாரை அன்புடன் நடத்தியும், அந்நியமதத்திற் பிரவேசித்த நம்மவர்களையும் அந்நிய மதஸ்தரையும் சில பிராயச்சித்தங்கள் செய்து நம்முடைய மதத்தில் சேர்த்தும், தங்களுடைய பெருந்தன்மையையும், சர்வமதசமோதர உரிமையையும் புலப்படுத்தினல் மாத்திரமே இந்துமதம் உலகமுழுதும் பரவும்,—இது நிச்சயம்! விசாலாட்சியே! நான் நேரே லாகூருக்குப் புறப்பட்டுப் போகிறேன். மாஜிஸ்டிரேட் மகம்மதாலியைக் கண்டு பிடித்துக் கவர்ன்மெண்டாரிடம் ஒப்புவிக்கவேண்டியது என் முதற்கடமை. பிறகு உன்னைக் கவனிப்பேன். நீ ஒரு சிறிதும் கவலைப்படாதே. உன்னுடைய சுகதுக்கங்கள் என்னுடையன,'' என்று நான் விசாலாட்சிக்கு உறுதிகூறிவிட்டுப் 'பத்மவிலாஸ' மாளிகையிலிருந்து நீங்கினேன்.

பன்னிரண்டாம் அதிகாரம்

"காதல்" என்பது முக்திக்கு வித்தே

"கரும்பே தேனே யமிர்தே காமர்மணி யாழே
யரும்பார் மலர்மே லணங்கே மழலை யன்னமே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணைமானே."

சிந்தாமணி.

"பத்ம விலாஸ" மாளிகையிலிருந்து நீங்கிய பிறகு நான் திருச்சி இரயில்வே ஸ்டேஷனுக்குச்சென்று சென்னைக்குப் பிரயாணச்சீட்டுப் பெற்றுக்கொண்டு இரயில் ஏறினேன். சென்னைக்குச் சென்றவுடன் நேரே வக்கீல் இராமசாமி ஐயர் வீட்டிற்குச் சென்று அவரைக்கண்டு மாஜிஸ்டிரேட் மகம்மதாலி எவ்விதம் ஜெயிலிலிருந்து தப்பித்துச் சென்றார் என்றும், மோஹனாங்கியும் என்மைத்துனன் வச்சிரபாணியைச் சுட்டுக்கொன்ற கோவிந்தன் என்னும் கொடிய கொலைபாதகனும் எங்கிருக்கிறார்கள் என்றும், அவர்களுடைய நிலைமை எவ்வித மிருக்கிறதென்றும் கேட்டேன்.

"ஐயா! இன்னும் கோர்ட்டார் தீர்ப்புச் சொல்லவில்லை யாதலால் இவர்களுடைய நிலைமையைப்பற்றி நிச்சயமாய் என்னால் ஏதும் சொல்லமுடியாது. மோஹனாங்கி கோர்ட்டார் உத்தரவை அலட்சியம் செய்தாள் என்பதற்காக அவள்மீது ஏற்கெனவே ஒருகுற்றம்

சாட்டப்பட்டிருப்பதை நீர் அறிவீர். அதைத் தவிர, காந்திமதியை அவளுடைய மாளிகையிலிருந்து அப்புறப்படுத்தி ஜெயிற் கட்டிடத்திற்குக் கொண்டு போகும்படி செய்தவள் மோஹனாங்கியே என்று ருஜுவாகிவிட்டது. மாஜிஸ்டிரேட் மகம்மதாலியும் அவளும் ஒன்று சேர்ந்தே சதியாலோசனை,—உம்மையும் காந்திமதியையும் கெடுத்துத் துன்பத்திற் குள்ளாக்குவதற்கான சதியாலோசனை—செய்திருக்கிறார்கள் என்பதும் ருஜுவாகிவிட்டது. ஆதலால் அவளுக்குத் தீவாந்தர சிட்சையும், உம்முடைய மைத்துனர் வச்சிரபாணியைச் சுட்டுக்கொன்ற கோவிந்தனுக்கு மரணதண்டனையும் கோர்ட்டார் விதிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். இப்போது அவர்கள் இருவரும் சிறைச்சாலையில் தான் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மாஜிஸ்டிரேட் மகம்மதாலி ஜெயிலிலிருந்து மோஹனாங்கியின் சூழ்ச்சியினாலேயே வெளியேறி யிருக்கிறான். அவன் லாகூரில் மாறுவேடம்பூண்டு மறைந்து வசிப்பதாய் அறிகிறேன். அங்கே சென்றால் அவனை எவ்விதத்திலும் கண்டு பிடித்துவிடலாம்," என்று வக்கீல் இராமசாமி ஐயர் என்னை நோக்கிக்கூறவே நான் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு லாகூருக்குப் பிரயாணமானேன்.

லாகூருக்குச்சென்று சுமார் ஒருவாரம் வரையிலும் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தேன். பலரையும் விசாரித்துப்பார்த்தேன். மகம்மதாலியைப்பற்றி ஒன்றுமே அறிந்து கொள்ள முடியவில்லை. பொது ஸ்தாபனங்களையும், மடங்களையும், கோவில்களையும், கடைத் தெருக்களையும் அடிக்கடி சுற்றிப் பார்த்துக்கொண்டிருப்பதே லாகூரில் எனக்கு முக்கியமான வேலையாயிருந்தது. தற்செயலாகவாவது மகம்மதாலியின் முகம்

என்னுடைய கண்ணிற்குப் புலப்படாதா என்னும் ஓர் ஆவலே என்னை அவ்விதம் அலையும்படி செய்தது. ஒருநாள் மாலையில் சுமார் ஏழுமணிக்கு ஒருமடத்தில் பஜனை நடந்துகொண்டிருந்தது. அதனைப் பார்ப்பதற் காக நானும் மடத்தினுள் நுழைந்து ஓரிடத்தில் அமர்ந் தேன். ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். பைராகிகள் பலர் சேர்ந்து விஷ்ணு ஸ்துதியாகப் பல வேடிக்கையான பாடல்களைப்பாடியும், தங்கள் மனம் போனபடி ஆடியும் பெரியதோர் ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தார்கள். இவர்களுட் சிலர் கட்குடித்த மயக்கத்தாலும், வேறு சிலர் கஞ்சா குடித்த மயக்கத் தாலும், மற்றுஞ்சிலர் அபினி உண்ட மயக்கத்தாலும் தங்களைத் தாங்களே மறந்து வாயில் வந்தபடியே பேசு வதும் பாடுவதும் ஆடுவதுமாகக் காலத்தைக் கழித்த னர். இப்படிப்பட்ட பைராகிகள் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு பேர்கள்தான் இருக்கக்கூடும். இக் கூட் டத்தாருள் ஒரு மனிதனுடைய உருவம் மாத்திரம் என்னுடைய கவனத்தைக் கவர்ந்தது. அவன் பார் வைக்கு ஒரு பைராகியைப்போல் காணப்பட்டா னுயினும் அவனுடைய முகமும் செயலும் உண்மை யான பைராகியல்லன் என்பதை இனிது விளக்கின. இன்னும் சிறிது நெருங்கி அவனுடைய முகத்தை உற்று நோக்கினேன்,—மாஜிஸ்டிரேட் மகம்மதாலியே அவன்—என்பதை ஐயந்திரிபற அறிந்துகொண்டேன். ஆ! அச்சமயம் எனக்குண்டான அதிசயத்தையும் ஆச்சரியத்தையும் நான் என்னென்று எடுத்துரைப் பேன்! உயர்ந்த உத்தியோகத்திலிருந்த ஒரு மனிதன் பிச்சை எடுத்துண்ணும் பைராகியைப்போல் வேடம் பூண்டு நடிக்கும்படியான நிலைமையில் இருக்கின்றான்

என்று அறிந்தால் யாருக்குத்தான் அவன்மீது இரக்கம் உண்டாகாது? அவனுடைய நிலைமையைக் கண்டு நான் பெரிதும் வருந்தினேன். என்னை யார் என்று அறிந்து கொண்டானோ இலனோ என்பதை மாத்திரம் ஒருதலை யாற் றுணிவதற்கு என்னால் முடியவில்லை. நான் இரண் டொரு தினங்கள் அந்த மடத்திலேயே தங்கியிருந் தேன். அவனிருக்கு மிடத்தைக் கவர்ன்மெண்டாருக் குத் தெரியப்படுத்தி அவர்களுடைய உதவியினால் அவனைப் பிடிக்கவேண்டு மென்பது என் எண்ண மாகும்.

ஒரு நாள் இரவு நடுயாமத்தில் அயர்ந்த நித்திரை யிலிருந்து நான் திடீரென்று விழித்துக் கொண்டேன்; நாலாபுறமும் சுற்றிப்பார்த்தேன். எங்கும் ஒரே இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. வான்மீன்களின் சிறு வெளிச்சத்தைத் தவிர வேறு பிரகாசம் ஏதும் காணப் படவில்லை. எத்திசை நோக்கினும் மரமுஞ் செடி யும், புல்லும் புதரும், அருவியும் மலையும் காணப்பட் டனவேயன்றி வீடுகள் காணப்பட வில்லை. ஜனங்களு டைய நடமாட்டமும் இல்லை. எனக்கு ஏதுமே புலப் படவில்லை. பிறகு என்னையே நான் ஒருவாறு தைரி யப் படுத்திக்கொண்டு எழுந்து சிறிது தூரம் நடந்து சென்றேன். ஒரு காட்டின் மத்தியில் இருக்கின்றேன் என்பதையும், எப்போதும் படுத்து நித்திரை செய்யும் மடத்தில் இல்லை என்பதையும் நான் அறிந்துகொண் டேன். எவ்விதம் அந்த அடர்ந்த காட்டிற்குள் நான் வந்தேன் என்பதும் எனக்கு விளங்கவில்லை. எவ்வித மாயாவது காட்டிலிருந்து வெளிச்செல்ல வேண்டு மென்று கருதி ஓர் ஒற்றையடிப் பாதை வழியாகச் சிறிது தூரம் நடந்து சென்றேன். ஆழ்ந்த ஆலோ

சனையில் அழுந்தியவனைப் நான் மெதுவாக நடந்து சென்று கொண்டிருந்த போது திடீரென்று ஏழெட்டு பைராகிகள் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுள் ஒருவன் தன்னுடைய கையில் தீவர்த்தி வைத்திருந்தான். அந்தத் தீவர்த்தி வெளிச்சத்தால் அவர்களுள் மாஜிஸ்டிரேட் மகம்மதாலி பைராகியும் ஒருவன் என்பதை நான் அறிந்துகொண்டேன். அந்தப் பைராகிகள் அனைவரும் தங்களுடைய கரங்களில் குறுந்தடிகள் வைத்திருந்தார்கள். ஏக காலத்தில் அவர்கள் எல்லோரும் என்னை எதிர்க்க ஆரம்பித்தார்கள்.

"இவன்தான் என்னை இந் நிலைமைக்குக்கொண்டு வந்தவன். இவனாலேயே நான் இவ்வளவு கஷ்டநஷ்டங்களையும் அடைந்தேன். இவன் உயிரோடிருந்தானானால் இன்னும் அதிகமான துன்பங்களும் துயரங்களும் எனக்கு ஏற்படும். ஆதலால், நேயர்களே, இனி அரைக்கணமுந் தாமதியாமல் குறுந்தடிகளால் இவனை நையப்புடைத்து இவன் உயிரைப் போக்குங்கள். இந்தக் காட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு இவன் வெளியேறுவானானால் நம் எல்லோருக்குமே அபாயம் நேரிடும். ஆதலால் சிறிதும் தாமதியாதீர்கள்; வெட்டுங்கள்; குத்துங்கள்; உதையுங்கள்; அடியுங்கள் !" என்று பைராகிகளுடைய தலைவன்,—அதாவது மாஜிஸ்டிரேட் மகம்மதாலி,—ஏனைய பைராகிகளை நோக்கிக் கூறினான்

அவன் கட்டளையிட்டவுடன் அந்தப் பைராகிகள் என்னைக் குறுந்தடிகொண்டு எதிர்க்கலானார்கள். இளம் பிராயத்தில் நான் "மல்யுத்தம்" "சிலம்பம்" முதலியவைகளில் நன்றாய்ப் பழகியிருந்தேனாதலால் அவர்க

ளிடமிருந்த குறுந்தடிகளுள் ஒன்றைப் பிடுங்கிக் கொண்டு அதைக்கொண்டே அவர்களுடைய அடி என்மீது விழாதபடி தடுத்துவந்தேன். என்னுடைய சாமர்த்தியத்தையும், கழி விளையாடுவதில் எனக்கு வாய்ந்துள்ள திறமையையும் அவர்கள் பெரிதும் புகழ்ந்து பாராட்டினார்கள். ஒவ்வொருவருடனும் தனித்தனியாக மல்யுத்தம் செய்து அவர்களுட் சிலரைத் தென்றிசைக் கடவுளுக்குப் பலியிட்டேன்; மற்றுஞ் சிலரைப் புறங்காட்டி ஓடும்படி செய்தேன். ஆனாலும் ஒரே மனிதன் ஏழெட்டுப் பெயர்களை எதிர்த்து வெற்றி பெறுதல் இலேசான காரியமன்றே! எனக்குக் கைசலித்துப் போயிற்று; களை அதிகமாகி விட்டது; நிற்பதற்குக்கூட என்னால் முடியவில்லை. மகம்மதாலியும் வேறு மூன்று பைராகிகளும் என்னைக் கீழேதள்ளி என்மீது ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். என்னுடைய கைகளை இருவர் இறுகப் பிடித்துக் கொண்டார்கள். கால்களை ஒருவன் பிடித்துக்கொண்டான். அப்புறம் இப்புறம் திரும்பமுடியாமல் என்னை அவர்கள் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட பிறகு மாஜிஸ்டிரேட் மகம்மதாலி என்சமீபத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு " ஆத்மநாதனே! இன்றோடு இந்த உலகவாழ்வு உமக்கு முடிகிறது. இந்தச் சிறுகத்தி உம்முடைய கழுத்தை வெட்டி உம்மை யமபுரம் சேர்க்கப் போகிறது!" என்று ஆத்திரங்கலந்த சிறிப்புடன் கூறி ஒரு சிறு கத்தியையும் என்னிடம் காட்டினான். அப்போது என் உடல் நடுங்கிற்று; வாய் பேசமுடியாமல் தயங்கிற்று! செய்வது யாதென எனக்குத் தோன்றவில்லை. இனி உயிர் பிழைக்கப் போகிறதில்லை என்று நான் நிச்சயித்து விட்டேன். காந்திமதியின் உருவம்

என் அகக்கண்ணிற்கு அச் சமயம் புலப்பட்டது அவளைப்பற்றிய நினைவைத்தவிர வேறு நினைவு என் மனத்தில் உதிக்கவில்லை. காந்திமதியின் போதனையினல் கடவுளிடத்தில் எனக்குச் சிறிது நம்பிக்கை ஏற்பட்டிருந்த படியால், நான் கடவுளிடத்தில் பொறுப்பை ஏற்றிவிட்டு மௌனமாயிருந்தேன். மகம்மதாலி கத்தி என் கழுத்திற்குச் சமீபத்தில் வந்தது. அச்சமயம் திடீரென்று ஒரு வாலிபன்,—அழகிற் சிறந்தவனும் போர்த் தொழிலுக்குரிய ஆடை யணிந்தவனுமான ஒரு வாலிபன்,—பக்கத்திலிருந்த ஒரு புதருக்குள்ளிருந்து குதிரைமீது ஏறியபடியே எனக்குச் சமீபத்தில் வந்தான் அந்த வாலிபனையும் அவன் ஏறியிருந்த குதிரையையும் கண்டவுடன் பைராகிகள் மூவரும் எழுந்து நாலாபுறமும் ஓடினர்கள். மாஜிஸ்டிரேட் மகம்மதாலியும் ஓடுவதற்கு ஆரம்பித்தான். குதிரைமீதிருந்த வாலிபன் என்னைநோக்கிப் "பெருமானே! நீங்கள் இனி அஞ்சவேண்டாம். நீங்கள் எழுந்து மெதுவாக நடந்து லாகூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துசேருங்கள். இந்தக்காடு லாகூரைச் சேர்ந்தகாடுதான். சுமார் ஒருமைல்தூரந்தான் நீங்கள் நடக்கும்படி நேரிடும். இப்போதோ மணி மூன்று அல்லது மூன்றரை இருக்கும். சூரியன் உதயமாவதற்கு முன்பு நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்துவிடலாம். சந்திரனும் உதயமாகிவிட்டபடியால் நிலவுவெளிச்சத்தில் குதிரையின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக்கொண்டே மெதுவாக வந்துசேர்ந்துவிடுங்கள். மற்றசங்கதி அங்கு பேசிக்கொள்வோம், என்று கூறிவிட்டு மகம்மதாலியைத் துரத்திக்கொண்டே சென்றுன். குதிரை மிகுந்தவேகத்துடன் சென்ற

தால் அந்த வாலிபனுடைய உருவமும் குதிரையி னுடைய உருவமும் ஒருங்கே சிறிதுநேரத்திற்குள் மறைந்துவிட்டன. நான் அந்தவாலிபன் கூறியபடியே குதிரையின் அடிச்சுவட்டை நிலவு வெளிச்சத்தில் பார்த்துக்கொண்டே அந்த அடர்ந்தகாட்டிலிருந்து நீங்கி லாகூர் போலீஸ் ஸ்டேஷன் போய்ச்சேர்ந்தேன். நான் சென்றபோது குதிரை போலீஸ் ஸ்டேஷன் தோட்டத்தில் ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தது. குதிரைமீதேறிவந்து என்னைக்காத்த வாலிபன் ஸ்டே ஷனுக்குள் இருந்தான். போலீஸ் இன்ஸ்பெக்டர், ஸப்--இன்ஸ்பெக்டர், ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீஸர் முதலானவர்கள் அந்த வாலிபனோடு பேசிக்கொண்டி ருந்தார்கள். மாஜிஸ்டிரேட் மகம்மதாலி கைகளில் விலங்கு பூட்டப்பட்டபடியே ஒரு மூலையில் நிறுத்தப் பட்டிருந்தான்.

போலீஸ் உத்திபோகஸ்தர்களும் அந்த வாலிப னும்பேசிக்கொண்டிருந்த சம்பாஷணையிலிருந்து அந்த வாலிபன் பெயர் காந்தீபன் என்றும், அவன் வசிக்கு மிடம் சோழதேசம் என்றும், காணமற்போன தன் நண்பனைத்தேடிவந்த இடத்தில் மகம்மதாலியை அவன் பிடிக்க நேர்ந்ததென்றும், தற்செயலாக நேர்ந்த இந்த சம்பவம் கவர்ன்மெண்டின் புகழ்ச்சிக்கு உரியவனாக அவனைச் செய்துவிட்டதென்றும் நான் அறியலா னேன்.

"ஐயா! மகம்மதாலி அகப்பட்டு விட்டான் என்று நாங்கள் சென்னைக் கவர்ன்மெண்டாருக்குத் தந்திகொடுத்து விட்டோம். இன்று மாலையில் நான்கு போலீஸ் சேவகர்களோடு மகம்மதாலியைச் சென்னைக் குப் பிரயாணப்படுத்தி அனுப்பப்போகின்றோம். நீரே

மகம்மதாலியை எங்களிடம் கொண்டுவந்து ஒப்புவித்தீர் என்றும் தந்தியில் சொல்லியிருக்கிறோம். உமக்கு நாங்கள் ஒரு கடிதம் கொடுக்கின்றோம். அதனைக் கொண்டுபோய்ச் சென்னைக் கவர்னரிடம் காட்டினால் அவர் ஆயிரம் ரூபா உமக்கு இனும் அளிப்பார். நீர் போய்வரலாம்,'' என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் காந்தீபனை நோக்கிக்கூறி அவனுக்கு ஒரு கடிதமும் எழுதிக்கொடுத்தார். காந்தீபன் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு என்னையும் அழைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனைவிட்டு நீங்கினர். நாங்கள் இருவரும் ஒரு ஹோட்டலுக்குச் சென்று பகற்போஜனம் செய்துவிட்டு அன்று மாலையிலேயே சென்னைக்குப் புறப்படுவதாகத் தீர்மானித்தோம். சாப்பிட்டுவிட்டுச் சிறிது களைப்பாறுதற்பொருட்டு ஹோட்டலின் வெளிப்புறத்தில் நாங்கள் இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு மனிதர் தமிழ்ப்பத்திரிகை ஒன்றனைத் தன் கையில் வைத்துக்கொண்டு ஹோட்டலுக்குள் சென்றார். அவரைக் கண்டவுடன் ஐயா! அஃது என்ன பத்திரிகை? என்று வந்தது? நான் சிறிதுநேரம் பார்க்கலாமா?'' என்று நான் கேட்டேன்.

"ஐயா! இது தமிழ்ப்பத்திரிகைதான்! இன்று தான் வந்தது! வேண்டுமானால் நீங்கள் பார்க்கலாம். நான் இப்போதுதான் சாப்பிடப்போகிறேன். நான் சாப்பிட்டுவரும் வரையிலும் நீங்கள் பார்த்துக்கொண்டிருங்கள்,'' என்று கூறி அந்தப் பத்திரிகையையும் என்னிடம் கொடுத்துவிட்டுச்சென்றார். அதனைவாங்கி நானும் காந்தீபனும் படித்துப்பார்த்தோம். அதில் சில விஷயங்கள் இருந்தன. அவையாவன:—

" மாஜிஸ்டிரேட் மகம்மதாலிமீது கொண்டு

ரப்பட்டிருந்த கேஸின் தீர்ப்பு இன்று சென்னை ஹைகோர்ட்டாரால் சொல்லப்பட்டது. மகம்மதாலி, மோஹனாங்கி, கோவிந்தன் மூவரும் குற்றவாளிகளே என்பது ருஜுவாகிவிட்டதால் மோஹனாங்கிக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தர சிட்சையும், கோவிந்தனுக்கு மரணதண்டனையும் கோர்ட்டார் விதித்திருக்கிறார்கள். தவிர, மாஜிஸ்டிரேட் மகம்மதாலி அகப்பட்டவுடன் அவன்மீதுள்ள பல குற்றங்களுக்கும் ஒரே தண்டனையாக அவனைத் தூக்கிவிடவேண்டும் என்றும் கோர்ட்டார் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். மோஹனாங்கி தன்னுடைய ஆஸ்தியையும் தன்னுடைய ஏகபுத்திரியாகிய விசாலாட்சி என்பவளையும் ஆத்மநாதர் என்னும் வைத்தியரிடம் ஒப்புவித்துவிட வேண்டுமென்று கடைசியாகக் கோர்ட்டாரைக் கேட்டுக்கொண்டாள். அவ்விதமே செய்வதாகக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் ஆத்மநாதர் என்பவர் மோஹனாங்கியின் சொத்திற்கு உரியவராகின்றார்."

இந்தச்சமாசாரம் எனக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அன்றுமாலையிலேயே நானும் காந்தீபனும் லாகூரிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டுவிட்டோம். சென்னைபோய்ச்சேர்ந்தவுடன் காந்தீபன் சென்னைக் கவர்னரைப்போய்ப்பார்த்து ஆயிரம் ரூபா இனாம் பெறுவதற்காகக் கவர்ன்மெண்டு ஹவுஸிற்குச் சென்றான். நான் வக்கீல் இராமசாமி ஐயர் வீட்டிற்குச்சென்றேன். இராமசாமி ஐயர் மோஹனாங்கி கதியையும், கோவிந்தன் கதியையும் என்னிடம் விவரமாய்க் கூறினார். நான் மாஜிஸ்டிரேட் மகம்மதாலி லாகூரில் பைராகி வேஷம் போட்டுக்கொண்டு திரிந்ததையும் காந்

தீபன் என்னும் வாலிபன் அவனைப் பிடித்துப் போலீ ஸார்வசம் ஒப்புவித்ததையும் அவருக்கு விவரமாக எடுத்துக்கூறினேன். அவரோடு பேசிக்கொண்டிருந்து விட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு நான் புறப் படப்போன சமயத்தில் அவர் ஒரு மரணசாசனத்தை என்னிடம் கொண்டுவந்துகொடுத்து "இதுவச்சிர பாணியினுல் எழுதப்பட்ட உயிலாகும். மரணவஸ் தையிலிருந்தபோது அவனுடைய முன்னிலையில் இஃது எழுதப்பட்டது. உறையூர்க்கிராமத்தில் அவனுக்குள்ள எல்லா ஆஸ்திகளையும் அவன் உமக்கு இந்த உயில்மூல மாய்க் கொடுத்துவிட்டான்." என்று கூறினர். ஏற் கெனவே நான் கொண்டுள்ள மகிழ்ச்சியை இன்னும் பன்மடங்கு இச்செய்தி அதிகப் படுத்துவதாயிற்று. வச்சிரபாணி எழுதிவைத்த உயிலை எடுத்துக்கொண்டு, வக்கீல் இராமசாமி ஐயரிடம் விடைபெற்றுக்கொண்டு நான் புறப்பட்டேன். காந்தீபனும் சென்னைக் கவர்ன ரிடம்சென்று ஆயிரம்ரூபா நன்கொடைத் தொகையைப் பெற்றுக்கொண்டு திரும்பினன். இருவரும் ஏற்கெ னவே குறிப்பிட்டுக் கொண்டபடி இராஜா ஸர் சவலை இராமசாமி முதலியார் சத்திரத்தில் சந்தித்தோம்.

"இன்று மாலையில் நாம் ஊருக்குப் பிரயாணப் படவேண்டியதுதானே?" என்று நான் காந்தீபனைக் கேட்டேன்.

"நாம் இன்று மாலையில் புறப்படவேண்டியது தான். நான் திருச்சிக்குப் போகிறேன். நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?" என்று காந்தீபன் என் னைக் கேட்டான்.

"நானும் திருச்சிக்குத்தான் போகிறேன்," என்று நான் விடை பகர்ந்தேன்.

இருவரும் அன்று மாலையிலேயே எழும்பூரில் இரயில் ஏறித் திரிச்சிராப்பள்ளி சென்றோம். தன்னுடைய வீட்டுக்கு வரவேண்டுமெனக் காந்தீபன் வற்புறுத்தவே நான் அதற்கு இசைந்தேன். நாங்கள் ஏறியிருந்த ஜட்காவண்டி ‘ஸரவணவிலாஸ’ மாளிகைக்கு நேரிற்போய் நின்றது. இச்சம்பவம் எனக்குப்பெரிதும் ஆச்சரியமாகவே இருந்தது. காந்தீபன் அந்த மாளிகைக்குள் என்னையும் அழைத்துக்கொண்டு சென்றான். காந்திமதியின் பெற்றோரை நான் அங்கே கண்டேன்; ஆனால் காந்திமதியைக் காணவில்லை. ஆகவே எனக்கு ஒருவிதமான மனக்கலக்கம் உண்டாயிற்று. அவளைச் சில தினங்களாய்க் காணவில்லை என்றும், அதுவே பெருங்கவலையாய்த் தங்கட்கு இருக்கிறதென்றும் சபாநாயகமும் சிவகாமியும் சொன்னார்கள். நாங்கள் துயரசாகரத்தில் அழுந்தியிருந்தபோது காந்தீபன் தன்னுடைய உடைகளைக் கழற்றினான்,—அவனுடைய இடுப்பில் புடைவை கட்டப்பட்டிருந்ததையும் மார்பில் இரவிக்கை அணியப்பட்டிருந்ததையும் நாங்கள் கண்டோம். சிறிதுநேரத்திற்குள் காந்தீபனே காந்திமதி என்பதையும் அறிந்தோம்.

“நாதா! தாங்கள் சென்றது முதல் தங்களையே நான் பின்தொடர்ந்திருக்கிறேன். ஆதலால் நடந்த எல்லாவிஷயங்களும் எனக்குத்தெரியும். பிறர் அறியாதிருக்கவேண்டி நான் ஆண்வேடம் பூண்டேனே தவிர வேறில்லை. நமது உண்மைக்காதல் இன்றே நற்பலனளித்தது. இதிலிருந்துகொண்டே நாம் இல்லற தருமத்தை வழுவாது நடத்துவோமானால் ‘காதல் என்பது முக்திக்கு வித்தே!’ என்னும் உண்மையை நாம் பிரத்தியட்சத்தில் அறியலாம்,” என்று கூறினாள் காந்திமதி.

இன்னும் அதிகமாய் என்னுடைய சரிதத்தை வளர்த்துவானேன்? பிறகு காந்திமதிக்கும் எனக்கும் விவாகம் நடந்தது. காந்திமதியினுடைய சம்மதத்தின்மேல் விசாலாட்சியையும் நான் மணம் புரிந்துகொண்டேன். வச்சிரபாணி, சபாநாயகம், மோஹனங்கி இவர்களுக்குரிய ஸ்தாவரசங்கம சொத்துக்கள் எல்லாம் எனக்கே உரிமையாயின. தவிர, சிவப்பிரகாசம் சம்பாதித்த சொத்துக்களும் என்னைச் சேர்ந்துவிட்டன. ஆனால் தேசயாத்திரைபோன அவருடைய கதியாதாயிற்றென்பது மாத்திரம் இன்னமும் எனக்குத் தெரியவில்லை! ஆனாலுமென்ன? எனக்குக் கிடைத்த இவ்வளவு ஏராளமான சொத்துக்களையும் வைத்துக்கொண்டு நான் கூடுமானவரையில் சுகமாயும் சந்தோஷமாயும் காலங்கழித்து வருகின்றேன். என்னுடைய வைத்தியத்தொழிலைநான் விட்டுவிடவுமில்லை. என்னுடைய அருமை மனைவியர்களான காந்திமதியும் விசாலாட்சியும் என்னைப்போலவே சுகமாக என்னுடனிருந்து வருகின்றார்கள்! சுபம்!

ஆத்மநாதன் முற்றிற்று.

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஹரிப்பிரியை

அல்லது

பாண்டிநாட்டுப் பணப்புதையல்.

பலசாதுர்யங்களுடன் கூடிய ஒரு துப்பறியும் நாவலாகும். இதன்விலை அணா 12.

இப்புஸ்தகத்தைப்பற்றிய சில அபிப்பிராயங்கள்.

தேவகோட்டை வைசியமித்திரன் 17. 8. 14. எழுதுகிறது. அருட்பிரகாசம் என்பவனை நீலன் என்னும் கொடியோனிடமிருந்து தப்புவிக்கும்படி செய்வதில் ஹரிப்பிரியை காட்டிய சாமர்த்தியமும், செய்தசூழ்ச்சியும் பெரிதும் பாராட்டற்பாலன. கதாநாயகியாகிய ஹரிப்பிரியையும் அவள் காதலனை அருட்பிரகாசமும் ஒருவர்க்கொருவர் பாராட்டிவரும் காதலுரிமை சதிபதிகள் எவ்வளவு மனஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதை இனிது போதிக்கின்றது. இந்நாவலின் கதைப்போக்கு படிப்பவர்களின் மனதை இறுதிவரையில் இழுத்துச் செல்லும் விதத்தில் சாமர்த்தியமாய் அமைந்திருக்கிறது, சுரங்கத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் வாசகர்களுக்கு அதிசயத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கின்றன.

இந்நாவலின் வசனநடை உயர்வாயும் கம்பீரமாயும் இருப்பது பாராட்டற்பாலது. இதன்விலை அணா. 12.

1914ஞ அக்டோபர்மீ த்திய ஸ்ரீரங்கம் பிரஜாநுகூலன் எழுதுகிறது. முகவுரையில் பத்திராசிரியர்களைப் பற்றிய சிலகுறிப்புகள் காண்கிறோம். கதையின் ஆரம்பம் வெகு வசீகரம். * * * * * உண்மையில் இது நடந்தது தானோ வென்று மயங்கும்வாறாகக் கதையின் போக்கு செல்லுகின்றது.

இந்நாவலைக் கையிலெடுத்தபிறகு படித்து முடிக்காமல் கீழேவைப்பதற்கு மனம் ஒப்பவில்லை.

புஸ்தகம் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்

விலாசம்

மானேஜர்

"சாரதாவிலாஸ" புஸ்தகசாலை.

நாகபட்டணம்.

பெரிய தமிழ் நாவல் இனும்பெற விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விபரத்தைப் பாருங்கள்

1915ஆடு ஏப்ரல் மாதத்திற்குள் "உண்மை" என்னும் தமிழ்மாத சஞ்சிகைக்கு சந்தாதாரராகச் சேரும் ஒவ்வொருவருக்கும் வருஷாவருஷம் ஒரு பெரிய தமிழ் நாவல் இனுமாகக் கொடுக்கப்படும்.

இந்த "உண்மை"யின் வருஷசந்தா ரூ. 1—8—0 மாதந்தோறும் டிம்மி 32 பக்கங்கள்கொண்டது. ஸர்வ மதசம்மதமான தத்வங்களும், கம்பியில்லாத தந்தி, பேசும் கருவியாகிய டெலிபோன், ஆகாயக்கப்பல் முதலிய புதுவிஷயங்களின் விபரமும், பழையகாலத்து தேசசரிதங்களும், பிறவும் இதில் வெளியிடப்படும்.

இனும் நாவலின் விபரம்:—

எட்டணுவிற்குக் குறையாமலும் ஒரு ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கும் விலையுடன் கூடிய ஒரு நாவல் வருஷா வருஷம் இனுமாக அனுப்பப்படும். இப்பொழுதே பெயரை ரிஜிஸ்டர் செய்துகொண்டாலொழிய பிரயோசன மில்லை.

இன்னும் வியக்தமான விபரம் தெரிய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு அரையணு ஸ்டாம்புடன் கடிதம் யெழுதித் தெரிந்து கொள்ளுங்கள்.

விலாஸம்
மானேஜர்
"உண்மை" ஆபீஸ்
நாகபட்டணம்.

P. R. RAMA IYAR AND CO.
PRINTERS, MADRAS